# தமிழரசு

நவம்பர் 1 - 30, 2000 ரூ. 10/-




மீனவர் துயர் துடைக்கும்
கலைஞர் அரசு
சிங்கார வேலர் நினைவு மீனவர் இலவச வீட்டு வசதி திட்டத்தின் கீழ்
5 ஆண்டுகளில் மீனவர்களுக்கு 20 ஆயிரம் வீடுகள்
மீன் பிடிப்பு இல்லாத 4 மாதங்களுக்கு ஆண்டு ஒன்றுக்கு
1.83 லட்சம் மீனவர்களுக்கு ரூ. 360 வீதம் உதவி
310 மீனவ குடியிருப்புகளில்
98.63 லட்சம் செலவில் தெரு விளக்குகள்
மீனவர் காப்புறுதி திட்டத்தின் கீழ் நிதி உதவி ரூ. 50 ஆயிரம் என உயர்வு

# தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2031
ஐப்பசி–கார்த்திகை
நவம்பர் 1–30, 2000
மலர் : 32 இதழ் : 9 & 10
விலை ரூ.10

## இந்த இதழில்...

### மக்கள் சாசனம்


- சமூக நலத்துறை ........ 1
- வருவாய்த்துறை ........ 7
- தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம் ........ 11
- தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச்சத்துத் திட்டம் ........ 12
- உலக வங்கி உதவிபெறும் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள்–3வது திட்டம் ........ 14
- சமூகப் பாதுகாப்புத்துறை ........ 17
- ஊனமுற்றோர் மறுவாழ்வுத்துறை ........ 18
- தேசிய சமூக நலத்திட்டம் ........ 28
- ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை ........ 29
- ஆதிதிராவிடர் வீட்டுவசதி மற்றும் மேம்பாட்டுக்கழகம் ........ 47
- பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை ........ 51
- பதிவுத்துறை ........ 55

- தொழில் வணிகத்துறை ........ 59
- சிறுதொழில் துறை ........ 62
- பள்ளிக்கல்வித் துறை ........ 64
- கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை ........ 66
- பட்டு வளர்ச்சித்துறை ........ 71
- கைத்திறத் தொழில் வளர்ச்சிக் கழகம் ........ 77
- ஊரக வளர்ச்சித்துறை ........ 78
- மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் துறை ........ 81
- குடும்ப நலத்துறை ........ 82
- வேளாண்மைத்துறை ........ 83
- வேளாண்மைப் பொறியியல் துறை ........ 92


## திருக்குறள்

**கொடையளி செங்கோல் குடியோம்பல் நான்கும்**
**உடையானாம் வேந்தர்க் கொளி.**

நலவாழ்வுக்கு வேண்டியவற்றை வழங்கியும், நிலையுணர்ந்து கருணை காட்டியும், நடுநிலை தவறாமல் ஆட்சி நடத்தியும், மக்களைப் பேணிக் காப்பதே ஓர் அரசுக்குப் புகழொளி சேர்ப்பதாகும்.

- கலைஞரின் திருக்குறள் உரையிலிருந்து...

**மு. கருணாநிதி**
முதலமைச்சர்

தலைமைச் செயலகம்,
சென்னை – 600 009.

நாள் : 24–11–2000

## முன்னுரை

''ஒளிவு மறைவற்ற நிர்வாகம்'' எனும் அடிப்படையில், அரசால் அறிவிக்கப்படுகின்ற திட்டங்களை, பொதுமக்கள் அனைவரும் அறிந்து கொள்வதற்கு, அவர்களுக்கு உரிமையுண்டு. அதற்காக இவ்வரசின் சார்பில் தனியே சட்டமியற்றப்பட்டுள்ளது. அதனடிப்படையில், அரசால் அறிவிக்கப்படும் திட்டங்கள் குறித்துப் பொதுமக்கள் அறிந்துகொள்ள ஏதுவாக, ஒவ்வொரு துறையும் மக்கள் சாசனம் வெளியிட வேண்டும் என அரசால் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

எனினும், கிராமப்புறங்களிலுள்ள மக்கள், அதிலும் குறிப்பாக கிராமப்புறப் பெண்கள் அதிக அளவில் அரசின் நலத்திட்ட உதவிகள் குறித்த விவரங்களை அறிந்து, தகுதியுடையவர்கள் அவ்வுதவிகளைப் பெறுவது என்பது ''சட்டபூர்வ உரிமை'' என்ற விழிப்புணர்ச்சியை உருவாக்கிடும் வகையில் அரசின் பல்வேறு துறைகளின் மூலம் செயல்படுத்தப்படும் நலத்திட்டங்கள் குறித்தும், அவைகளைப் பெற எவ்வகையில், யாரை அணுக வேண்டுமென்பது குறித்தும், மாநில அளவிலான தொகுப்பாக இம் ''மக்கள் சாசனம்'' தமிழரசின் மூலம் வெளியிடப்படுகிறது.

இதனை, மகளிர் சுயஉதவிக் குழுக்களிலும், இளைஞர் விளையாட்டு மற்றும் உடற்பயிற்சி மையங்களிலும் குழுவாக அமர்ந்து படித்துக் கேட்டு அரசின் திட்டங்களைப் புரிந்து தகுதியுள்ளவர்கள் எவ்விதக் குறுக்கீடுமின்றி நலத்திட்ட உதவிகளைப் பெற்றுப் பயனடைந்திட விரும்புகிறேன்.

எல்லா அய்யன் திருவள்ளுவர் படிப்பகங்களிலும், ஊராட்சிகளிலும் இந்தக் கையேடு இடம் பெறும். அரசு நலத்திட்டங்களைக் குறித்த விவரங்களை அறிய விரும்புகிறவர்கள் இவற்றைப் படித்துத் திட்டங்களை முழுமையாகப் புரிந்து கொள்ள முடியும்.

தமிழக அரசு இந்த நான்கரை ஆண்டு காலத்தில் எண்ணற்ற புதிய திட்டங்களையும், ஏற்கெனவே இருந்த திட்டங்களில் மாற்றங்களையும் ஏற்படுத்தி மக்கள் வாழ்வு செழிக்க மகத்தான உதவிகளைப் புரிந்து வருகிறது. அவற்றை எளிதில் பெறுவதற்கான வழிமுறைகளை எடுத்துச் சொல்லும் இந்த ''மக்கள் சாசனம்'' அனைத்துத் தரப்பினர்க்கும் பயன்படும் என்று நம்புகிறேன்.

அன்புள்ள,

(மு. கருணாநிதி)

**நலத்திட்டத்தின் பெயர் :**

## 1. மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண நிதியுதவித் திட்டம்.

**தகுதி :**

★ மணப் பெண்ணுக்கு 18 வயது பூர்த்தி அடைந்திருக்க வேண்டும்.

★ பெற்றோர் ஆண்டு வருமானம் ரூ.12,000க்குள் இருத்தல் வேண்டும். மணமகள் 10–ஆம் வகுப்பு தேர்வு எழுதியிருக்க வேண்டும். பழங்குடியினராக இருந்தால் 5–ஆம் வகுப்பு பயின்றிருக்க வேண்டும்.

★ திருமணம் நடைபெறுவதற்கு 45 நாட்களுக்கு முன் விண்ணப்பம் உரிய படிவத்தில் அனுப்பிட வேண்டும். ஒரு குடும்பத்தில் ஒரு பெண் மட்டுமே நிதி உதவி பெறலாம்.




★ வயது, படிப்பு, வருமானம் ஆகியவற்றிற்குச் சான்றுகள் இணைக்க வேண்டும்.

**அளிக்கப்படும் உதவித்தொகை :**

★ ரூ.10,000 காசோலை அல்லது கேட்பு வரைவோலை

**அணுக வேண்டிய அலுவலர் :**

★ ஊராட்சி ஒன்றிய ஆணையர்

★ சமூக நல விரிவாக்க அலுவலர்

★ நகராட்சி ஆணையர்

★ மாவட்ட சமூக நல அலுவலர்

★ மாநகராட்சி ஆணையர்

## 2. அஞ்சுகம் அம்மையார் நினைவு கலப்புத் திருமண நிதியுதவித் திட்டம்

**தகுதி :**

★ திருமணம் நடைபெற்ற தேதியிலிருந்து இரண்டு வருடத்திற்குள் உதவி கோரி விண்ணப்பிக்கலாம்.

**அளிக்கப்படும் உதவித் தொகை :**

★ தம்பதியரில் எவரேனும் ஒருவர் ஆதிதிராவிடராக இருப்பின் தேசிய சேமிப்புப் பத்திரம் ரூ.10,000, காசோலை ரூ.10,000 மொத்தம் ரூ.20,000

★ முன்னேறிய சமுதாயத்தினர் பின் தங்கிய அல்லது மிகவும் பின்தங்கிய சமுதாயத்தினரை மணந்தவர் தேசிய சேமிப்புப் பத்திரம் ரூ.7,000, காசோலை ரூ.3,000 மொத்தம் ரூ.10,000.



**அணுக வேண்டிய அலுவலர் :**

★ ஊராட்சி ஒன்றிய ஆணையர்

★ சமூகநல விரிவாக்க அலுவலர்

★ நகராட்சி ஆணையர்

★ மாவட்ட சமூகநல அலுவலர்

★ மாநகராட்சி ஆணையர்

### 3. டாக்டர் தர்மாம்பாள் அம்மையார் விதவை மறுமண நிதியுதவித் திட்டம்

தகுதி :

★ முதல் கணவர் இறந்த 30 வயதுக்குள் உள்ள கைம்பெண்ணாக இருத்தல் வேண்டும்.

★ 2–வது கணவருக்கு முதல் திருமணமாக இருக்க வேண்டும். முதல் கணவருடன் திருமணம் செய்ததற்கான சான்று இணைக்க வேண்டும்.

★ திருமணம் முடிந்த 6 மாதத்திற்குள் விண்ணப்பிக்க வேண்டும்.

அளிக்கப்படும் உதவித்தொகை :

ரூ.10,000 (ரூ.7,000 தேசிய சேமிப்புப் பத்திரம் மற்றும் ரூ.3,000 காசோலை)



அணுக வேண்டிய அலுவலர் :

★ ஊராட்சி ஒன்றிய ஆணையர்

★ சமூக நல விரிவாக்க அலுவலர்

★ நகராட்சி ஆணையர்

★ மாவட்ட சமூக நல அலுவலர்

### 4. ஈ.வெ.ரா.மணியம்மையார் நினைவு ஏழை விதவை மகள் திருமண நிதிஉதவித் திட்டம்

தகுதி :

★ கணவரை இழந்த கைம்பெண்ணின் மகளின் திருமணத்திற்கு வழங்கப்படுகிறது. மணமகள் வயது 18–30–க்குள் இருக்க வேண்டும்.

★ மணப்பெண்ணுக்கு 18 வயதுக்கு மேற்பட்ட சகோதரர் இருக்கக்கூடாது.

★ குடும்ப ஆண்டு வருமானம் ரூ.12,000க்கு மேற்படாமல் இருக்க வேண்டும்.

★ ஒரு மகளின் திருமணத்திற்கு மட்டுமே உதவித் தொகை வழங்கப்படும்.

அளிக்கப்படும் உதவித்தொகை :

★ காசோலையாக ரூ.7,000 அல்லது கேட்பு வரைவோலை

அணுக வேண்டிய அலுவலர் :

★ ஊராட்சி ஒன்றிய ஆணையர்

★ நகராட்சி ஆணையர்

★ மாவட்ட சமூகநல அலுவலர்.

### 5. அன்னை தெரசா நினைவு ஆதரவற்ற பெண்கள் நிதியுதவித் திட்டம்

தகுதி :

★ மணப்பெண் தாய், தந்தையற்ற ஆதரவற்றவராக இருத்தல் வேண்டும்.

★ மணப்பெண்ணின் வயது 20–30க்குள் இருக்க வேண்டும்.

★ பாதுகாவலரின் ஆண்டு வருமானம் ரூ.12,000க்கு மேற்படாமல் இருக்க வேண்டும்.

அளிக்கப்படும் உதவித்தொகை :

★ காசோலையாக ரூ.7,000 அல்லது கேட்பு வரைவோலை

அணுக வேண்டிய அலுவலர் :

★ ஊராட்சி ஒன்றிய ஆணையர்

★ நகராட்சி ஆணையர்

★ மாவட்ட சமூகநல அலுவலர்.

### 6. சிவகாமி அம்மையார் நினைவு பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டம்

**தகுதி :**

★ தாய் குடும்பக் கட்டுப்பாடு அறுவை சிகிச்சை செய்தவராக இருக்க வேண்டும்.

★ தாயின் வயது 40க்கு மேற்படாமல் இருக்க வேண்டும்.

★ குடும்ப ஆண்டு வருமானம் ரூ.12,000க்கு மேற்படாமல் இருக்க வேண்டும்.

★ ஒன்று அல்லது இரண்டு பெண் குழந்தைகள் மட்டும் இருத்தல் வேண்டும். ஆண் குழந்தை இருக்கக்கூடாது.

★ திட்டத்தில் சேரும் நாளில் இரண்டாவது குழந்தைக்கு 3 வயது முடிந்திருக்கக்கூடாது.

**அளிக்கப்படும் உதவித்தொகை :**

★ ஒரு பெண் குழந்தையுடன் அறுவை சிகிச்சை செய்து கொண்டால் அப்பெண் குழந்தைக்கு ரூ.3,000–ம், இரண்டு பெண் குழந்தையுடன் அறுவை சிகிச்சை செய்து கொண்டால் இரண்டு பெண் குழந்தைகளின் பெயரிலும் தலா ரூ.1,500ம், 5 ஆண்டு நிரந்தர வைப்புத்தொகை இரசீதாக அக்குழந்தைகள் பெயரில் வழங்கப்படும். அப்பெண் குழந்தை 20 வயது ஆகும் வரை ஐந்தாண்டுக்கு ஒரு முறை கட்டாயமாக இந்த இரசீதைப் புதுப்பித்துக் கொள்ள வேண்டும். இதனால் கிடைக்கும் பணம் அப்பெண் குழந்தை 20 வயது ஆகும் போது வழங்கப்படும்.



**அணுக வேண்டிய அலுவலர் :**

★ ஊராட்சி ஒன்றிய ஆணையர்
மகளிர் ஊர்நல அலுவலர்

★ நகராட்சி ஆணையர்
வட்டார ஊட்டச்சத்து திட்ட அலுவலர்

★ மாநகராட்சி கோட்ட உதவி ஆணையர் /
மாவட்ட சமூகநல அலுவலர்.
குழந்தை வளர்ச்சித் திட்ட அலுவலர்

### 7. சத்தியவாணிமுத்து அம்மையார் நினைவு மகளிர் இலவசத் தையல் இயந்திரம் வழங்கும் திட்டம்

**தகுதி :**

★ 40 வயது வரை உள்ள கைம்பெண்கள் / கணவரால் கைவிடப்பட்ட பெண்கள் / வறுமைக் கோட்டிற்குக் கீழுள்ள பெண்கள் மற்றும் உடல் ஊனமுற்ற ஆண், பெண் ஆகியோருக்கு வழங்கப்படுகிறது.

★ தையற் கலை தெரிந்திருக்க வேண்டும்.

★ வருட வருமானம் ரூ.12,000–க்கு மிகாமல் இருக்க வேண்டும்.

**அளிக்கப்படும் உதவி :**

ஒரு தையல் இயந்திரம்

**அணுக வேண்டிய அலுவலர் :**

★ ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் ஊராட்சி ஒன்றிய ஆணையர்

★ நகராட்சிப் பகுதிகளில் நகராட்சி ஆணையர்

★ மாநகராட்சி ஆணையர் / மாவட்ட சமூகநல அலுவலர்.



## 8. விதவைகளின் குழந்தைகளுக்கு இலவச பாடநூல் மற்றும் நோட்டுப் புத்தகங்கள் வழங்கும் திட்டம்

**தகுதி :**

★ தந்தையை இழந்து பள்ளிகளில் படிக்கும் பிள்ளைகளுக்கு 1–ஆம் வகுப்பு முதல் 12–ஆம் வகுப்பு வரை வழங்கப்படுகிறது.

★ குடும்ப ஆண்டு வருமானம் ரூ.12,000க்கு மேற்படாமல் இருக்க வேண்டும். வேறு எந்தத் திட்டத்தின் கீழும் இலவச பாடப் புத்தகம், நோட்டுப் புத்தகம் பெற்று இருக்கக் கூடாது.

**அளிக்கப்படும் உதவி :**

பாடப் புத்தகங்கள், இலவச நோட்டுப் புத்தகங்கள் வழங்கப்படுகிறது.

**அணுக வேண்டிய அலுவலர் :**

★ பள்ளித் தலைமை ஆசிரியர்கள் மூலமாக ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் ஒன்றிய ஆணையர், சமூகநல விரிவாக்க அலுவலர்

★ நகராட்சிப் பகுதிகளில் நகராட்சி ஆணையர்

## 9. சத்தியா அம்மையார் நினைவு ஆதரவற்ற குழந்தைகள் காப்பகம்

**தகுதி :**

★ தாய், தந்தையற்ற குழந்தைகள் / நீண்ட காலமாக நோய்வாய்ப்பட்டவர்களின் குழந்தைகள் மற்றும் ஆயுள் கைதிகளின் குழந்தைகள்

★ வருமான வரம்பு ரூ.12,000க்கு மிகாமல் இருக்க வேண்டும்

★ 5 வயது முதல் 18 வயது வரை உள்ள சிறுமியர்கள்

★ 5 வயது முதல் 10 வயது வரையுள்ள சிறுவர்கள்

**அளிக்கப்படும் உதவி :**

இலவச உணவு, உடை, இருப்பிடம், மருத்துவ வசதி, கல்வி முதலியன

**அணுக வேண்டிய அலுவலர் :**

★ மாவட்ட சமூகநல அலுவலர்

★ காப்பகக் கண்காணிப்பாளர்

## 10. தேசிய மகப்பேறு நிதியுதவித் திட்டம்

★ 19 வயது முடிந்திருக்க வேண்டும்.

★ குடும்ப ஆண்டு வருமானம் ரூ.12,000க்கு மிகாமல் இருக்க வேண்டும்.



★ மகப்பேறு காலத்தில் ஏழு மாதம் முடிந்ததும் விண்ணப்பிக்க வேண்டும்.

★ உயிருடன் பிறக்கும் முதல் இரண்டு குழந்தைகள்

**அளிக்கப்படும் உதவித் தொகை :**

ஒரு பயனாளிக்கு ரூ.500 வழங்கப்படுகிறது. இத்தொகை முழுவதும் மத்திய அரசால் வழங்கப்படுகிறது. பயனாளிகளுக்கு பண அஞ்சல் மூலம் பணம் அனுப்பப்படுகிறது.

**அணுக வேண்டிய அலுவலர் :**

★ ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் பயிற்றுநர். வட்டார ஊட்டச்சத்து திட்ட அலுவலகம் / கிராம ஊட்டச் சத்து மையப் பணியாளர் / சுகாதார செவிலியர்

★ குழந்தை வளர்ச்சித் திட்ட அலுவலர்/ அங்கன்வாடி பணியாளர்

★ நகராட்சிப் பகுதிகளில் நகராட்சி ஆணையர்

★ மாநகராட்சிப் பகுதிகளில் குழந்தை வளர்ச்சித் திட்ட அலுவலர்கள்

## 11. அரசுப் பணிபுரியும் பெண்கள் தங்கும் விடுதி

**தகுதி :**

★ வேலைக்குச் செல்லும் பெண்கள் மட்டும் இங்கு தங்க அனுமதிக்கப்படுகின்றனர்.

★ மகளிரின் மாத வருமானம் பெருநகரப் பகுதிகளில் ரூ.7,500க்கு மிகாமலும், ஏனைய பகுதிகளில் ரூ.7,000க்கு மிகாமலும் இருந்திட வேண்டும்.




**அளிக்கப்படும் உதவி :**

இதற்கான வாடகை உள்ளுறைவாளர்களின் மாத வருமானத்தின் அடிப்படையில் பின்வரும் விவரப்படி வசூலிக்கப்படும். மாத வருமானம் வாடகை ரூ.1,000க்கு ரூ.50, ரூ.1,001 முதல் ரூ.2,500 வரை ரூ.75, ரூ.2,500க்கு மேல் ரூ.100. உள்ளுறைவாளர்களின் உணவுக் கட்டணம் / மின் கட்டணம் ஆகியவை உறைவாளர்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் பகிர்ந்து வசூலிக்கப்படும்.

**அணுக வேண்டிய அலுவலர் :**

★ மாவட்ட சமூகநல அலுவலர்

★ கண்காணிப்பாளர், பணிபுரியும் பெண்கள் விடுதி

## 12. இந்திய அரசின் பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டம்

**தகுதி :**

★ குடும்ப ஆண்டு வருமானம் ரூ.11,400க்கு மிகாமல் இருக்க வேண்டும்.

★ 15.8.1997 அன்றோ அதற்குப் பிறகோ பிறந்த பெண் குழந்தைகள் மட்டும் இத்திட்டத்தின் கீழ் பயன் பெறுவர்.

★ குடும்பத்தில் 15–8–1997க்கு முன் பிறந்த ஆண்/பெண் குழந்தைகளின் எண்ணிக்கையை கணக்கில் கொள்வதில்லை.

★ குழந்தையின் பிறப்புச் சான்று மற்றும் கிராம நிர்வாக அலுவலரிடமிருந்து பெறப்பட்ட வருமானச் சான்று இணைக்கப்பட வேண்டும்.

**அளிக்கப்படும் உதவித் தொகை :**

★ உதவித்தொகை ரூ.500 தாயிடம் வழங்கப்படும்.

★ இத்திட்டத்தின் கீழ் கொண்டுவரப்பட்ட பெண் குழந்தை பள்ளிக்கு செல்லும் தருவாயில் வருடாந்திர ஸ்காலர்சிப் தொகை வழங்கப்படும். 1 முதல் 3ஆம் வகுப்பு வரை ஒவ்வொரு ஆண்டும் ரூ.300–ம் 4ஆம் வகுப்பில் ரூ.500. 5ஆம் வகுப்பில் ரூ.600–ம் 6 மற்றும் 7ஆம் வகுப்பில் ஒவ்வொரு ஆண்டிற்கும் ரூ.700–ம், 8ஆம் வகுப்பில் ரூ.800–ம், 9 மற்றும் 10ஆம் வகுப்புகளில் ஆண்டொன்றுக்கு ரூ.1000 வழங்கப்படும். அஞ்சலகப் பொதுக் கணக்கில்

வருடாந்திர வட்டி சதவிகிதம் 12%ல் இத்தொகை முதலீடு செய்யப்படுகிறது. படிப்படியாக (Cumulative) வட்டி ஈட்டப்படும். இத்தொகையானது பெண்ணின் 18ஆம் வயது முடிவில் ரூ.18,778 முழுத்தொகையாக வழங்கப்படும்.

**அணுக வேண்டிய அலுவலர் :**

★ ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் பயிற்றுநர். வட்டார ஊட்டச்சத்து திட்ட அலுவலகம் / கிராம ஊட்டச் சத்து மையப் பணியாளர் / சுகாதார செவிலியர்

★ நகராட்சிப் ப்குதிகளில் நகராட்சி ஆணையர்

★ மாநகராட்சிப் பகுதிகளில் குழந்தைகள் வளர்ச்சித் திட்ட அலுவலர்கள் திட்டம்–1, திட்டம்–2 மற்றும் மாநகராட்சி கோட்ட அலுவலர்.

## 13. தத்தெடுத்தல்

**தகுதி :**

★ தத்தெடுக்கும் பெற்றோர்களின் மொத்த வயது 90க்குள்ளும் அதில் ஒருவர் 45 வயதிற்குட்பட்டவராகவும் இருக்க வேண்டும். அவ்வாறு இருந்தால் ஒரு வயதிற்கு உட்பட்ட குழந்தைகளைத் தத்தெடுத்துக் கொள்ளலாம்.

★ வயதான தம்பதியினருக்கு வயது அதிகமுள்ள குழந்தைகள் தான் தத்து கொடுக்கப்படும்.



★ தனிப்பட்ட ஆணோ / பெண்ணோ அல்லது விதவையோ அல்லது முறையாக விவாகரத்து செய்தவர் தத்து எடுக்க விரும்பினால் அவர்களின் வயது 30–ம் அதற்கு மேலும் இருக்க வேண்டும். மற்றும் தத்து எடுக்கும் பெற்றோருக்கும் குழந்தைக்கும் குறைந்தது 21 வயது வித்தியாசம் இருக்க வேண்டும்.

★ வருமான வரம்பு – ஒரு குழந்தையை நல்ல முறையில் வளர்க்கத் தேவையான வருமானம்.

**அளிக்கப்படும் உதவி :**

தத்தெடுத்துக் கொள்ளும் அரசு அலுவலகங்களில் பணிபுரியும் பெண்களுக்கு சிறப்பு தத்து விடுப்பு அளிக்கப்படுகிறது.

**அணுக வேண்டிய அலுவலர் :**

★ தத்துக்குழு, சமூக நல ஆணையரகம், சேப்பாக்கம், சென்னை–5.

★ சம்பந்தப்பட்ட மாவட்ட சமூகநல அலுவலர், தன்னார்வத் தொண்டு நிறுவனம் (Voluntary Co-ordinating Agency - VCA) 11, 3வது பிரதான சாலை, செனாய் நகர், சென்னை–600 030.

★ உரிமம் பெற்ற 17 தன்னார்வ தொண்டு நிறுவனங்கள்.

## 14. அரசு சேவை இல்லங்கள்

**தகுதி :**

★ விதவைகள், ஆதரவற்ற மற்றும் உதவிக்கு யாருமற்ற பெண்கள்.

★ வருட வருமானம் ரூ.12,000க்கு மிகாமல் இருக்க வேண்டும்.

★ வயது 19–40க்குள் இருக்க வேண்டும்.

**அளிக்கப்படும் உதவி :**

உணவு, உறைவிடம், கல்வி மற்றும் தொழிற்கல்வி, பாடப்புத்தகம், நோட்டுப்புத்தகம், சீருடை.

**அணுக வேண்டிய அலுவலர் :**

★ தாம்பரம், உதவி இயக்குநர் மாவட்ட சமூகநல அலுவலர் – மாவட்டங்களில் கண்காணிப்பாளர், இதர சேவை இல்லங்கள், சமூகநல விரிவாக்க அலுவலர், மகளிர் ஊர்நல அலுவலர், ஊராட்சி ஒன்றியப் பகுதிகள்

★ ★ ★

**நலத்திட்டங்கள் பெயர் :**

### 1. விபத்து ஆறுதல் நிதியுதவித் திட்டம்

**உதவி பெறுவதற்கான தகுதிகள் :**

அடையாளம் தெரியாத வாகனங்களால் அடிபட்டு இறந்தவர்கள் குடும்பத்திற்கு நிவாரணம் ரூ.25,000–ம், கடுமையாக காயம் அடைந்தவர்களுக்கு ரூ.12,500–ம் வழங்கப்படும். விபத்து நடந்தவுடன் அருகிலுள்ள காவல் நிலையத்தில் முதல் தகவல் அறிக்கையை பதிவு செய்து அந்நகலுடன் 6 மாதங்களுக்குள் மாவட்ட ஆட்சியரிடம் விண்ணப்பிக்க வேண்டும்.

**அணுக வேண்டிய அலுவலர் :**

வருவாய் கோட்டாட்சியர்

### 2. ஆதரவற்ற விதவை

**உதவி பெறுவதற்கான தகுதிகள் :**

இத்திட்டத்தின் கீழ் மாதந்தோறும் ரூ.200 ஒய்வூதியம் வழங்கப்படுகிறது. வயது வரம்பு இல்லை. ஆதரவற்றவர்களாக இருத்தல் வேண்டும்.

**அணுக வேண்டிய அலுவலர் :**

தனி வட்டாட்சியர் (நலிந்தோர் நலத் திட்டம்)

### 3. ஊனமுற்றோர் உதவித் தொகை

**உதவி பெறுவதற்கான தகுதிகள் :**

இத்திட்டத்தின் கீழ் மாதந்தோறும் ரூ.200 ஒய்வூதியம் வழங்கப்படுகிறது. 45 வயதுக்கு மேல் இருக்க வேண்டும்.



ஆதரவற்றவர்களாகவும், எந்தவித வருமானம் இல்லாதவராகவும் இருத்தல் வேண்டும்.

**அணுக வேண்டிய அலுவலர் :**

தனி வட்டாட்சியர் (நலிந்தோர் நலத் திட்டம்)

### 4. ஆதரவற்ற விவசாயக் கூலி

**உதவி பெறுவதற்கான தகுதிகள் :**

இத்திட்டத்தின் கீழ் மாதந்தோறும் ரூ.200 ஒய்வூதியம் வழங்கப்படுகிறது.

60 வயது அடைந்தவராக இருத்தல் வேண்டும்.

ஆதரவற்றவர்களாக இருத்தல் வேண்டும்.

**அணுக வேண்டிய அலுவலர் :**

தனி வட்டாட்சியர் (நலிந்தோர் நலத் திட்டம்)

### 5. கணவரால் கைவிடப்பட்டவர்கள்

**உதவி பெறுவதற்கான தகுதிகள் :**

இத்திட்டத்தின் கீழ் மாதம் ஒய்வூதியம் ரூ.200 வழங்கப்படுகிறது.



30 வயதுக்கு மேல் இருத்தல் வேண்டும்.

ஆதரவற்றவர்களாக இருக்க வேண்டும்.

கணவனைப் பிரிந்து 5 ஆண்டுக் காலம் ஆகி இருக்க வேண்டும்.

**அணுக வேண்டிய அலுவலர் :**

தனி வட்டாட்சியர் (நலிந்தோர் நலத் திட்டம்)

## 6. இலவச வீட்டுமனைப் பட்டா

**உதவி பெறுவதற்கான தகுதிகள் :**

இத்திட்டத்தின் கீழ் மனைப் பட்டா மாநகராட்சியில் 1 சென்ட், நகராட்சி எல்லைக்கு உட்பட்டு இருப்பின் 1½ சென்ட், கிராமப்புறங்களில் 3 சென்ட் மனையும் பட்டா வழங்கப்படுகிறது. இதில் தடை விதிக்கப்பட்ட நீர்வழிப்புறம்போக்கு, மைதானம் மற்றும் மேய்ச்சல் தரை, புறம்போக்குகளில் மட்டும் மனைப் பட்டா வழங்கப்பட மாட்டாது. முன்னுரிமைப் பட்டியல்படி மனைப் பட்டா வழங்கப்படுகிறது.

மனுதாரருக்கு மனைப் பட்டா கோரப்படும் கிராமத்திலோ அல்லது வேறு இடங்களிலோ சொந்தமாக வீடு இருக்கக்கூடாது.

குடும்பத்தின் ஆண்டு வருமானம் கிராமப்பகுதிகளில் ரூ.16,000க்குள், நகரப்பகுதிகளில் ரூ.24,000ஆக இருத்தல் வேண்டும்.

மனைப் பட்டா கோரும் நபர் மனைப் பட்டா கோரும் கிராமத்திலேயே குடியிருக்க வேண்டும்.

மனுதாரருக்குச் சொந்தமாக நில புலங்கள் இருத்தல் கூடாது.

**அணுக வேண்டிய அலுவலர் :**

வருவாய் வட்டாட்சியர்கள்

## 7. இலவச நிலப்பட்டா

**உதவி பெறுவதற்கான தகுதிகள் :**

நிலப் பட்டா கோரும் நபருக்குச் சொந்தமாக நஞ்சை நிலங்களோ, புஞ்சை நிலங்களோ இருத்தல் கூடாது.

ஆண்டு வருமானம் ரூ.12,000க்குள் இருத்தல் வேண்டும்.

நஞ்சை 1½ ஏக்கர் அல்லது புஞ்சை 3 ஏக்கர் நிலம் வழங்கப்படும்.

நிலப் பட்டா கோரும் நபர் குடும்பத் தலைவராக இருத்தல் வேண்டும். மேலும் நிலப் பட்டா கோரும் நபர் உள்ளூரில் குடியிருப்பவராகவும், மேற்காணும் நிலத்தில் விவசாயம் செய்பவராகவும் இருத்தல் வேண்டும்.

நீர்நிலை, புறம்போக்கு, மயானம், மேய்க்கால், மலைப் பகுதிகளில் தடையாணை உள்ளது. முன்னுரிமைப் பட்டியல்படி மனைப் பட்டா வழங்கப்படும்.

**அணுக வேண்டிய அலுவலர் :**

வருவாய் வட்டாட்சியர்கள்

## 8. நலிந்தோர் நலத்திட்டம்

**உதவி பெறுவதற்கான தகுதிகள் :**

இத்திட்டத்தின் கீழ் நிவாரணத் தொகை ரூ.10,000 1.8.98 முதல் வழங்கப்படுகிறது. வறுமைக் கோட்டிற்குக்கீழ் உள்ள குடும்பத்தில் பொருளீட்டும் நபர் இறந்தால் அக்குடும்பத்திற்கு நிவாரணம் இத்திட்டத்தின் கீழ் வழங்கப்படும்.

இறந்தவர், குடும்பத்தில் பொருளீட்டும் நபராக இருத்தல் வேண்டும்.

புஞ்சை 5.00 ஏக்கரும், நஞ்சையாக இருந்தால் 2.50 ஏக்கரும் மிகாமலும் இருந்தால் நிவாரணம் பெறத் தகுதியுடையவராவார்.

அக்குடும்பத்தில் 18 வயது நிரம்பிய ஆடவர் இருப்பின் இச்சலுகை பெற இயலாது.

பொருளீட்டும் நபர் இறந்து 6 மாதங்களுக்குள் விண்ணப்பிக்க வேண்டும்.

வயது வரம்பு 18க்கு மேல் 65க்கு மிகாமல் இருத்தல் வேண்டும்.

**அணுக வேண்டிய அலுவலர் :**

தனி வட்டாட்சியர் (நலிந்தோர் நலத் திட்டம்)



## 9. தொழிலாளர் விபத்து உதவித்திட்டம்

**உதவி பெறுவதற்கான தகுதிகள் :**

தொழிலாளர் பணியில் ஈடுபட்டிருக்கும் போது ஏற்படும் விபத்துக்களால் உயிரிழப்போர்களுக்கு நிவாரணம் வழங்கும் திட்டம், நிவாரணத் தொகை ரூ.15,000, இறந்த நபர் பணியில் ஈடுபட்டிருக்கும் போது விபத்து ஏற்பட்டு இறக்க நேரிடுதல்.

இத்திட்டத்திற்கு வருமான வரம்பு கிடையாது.

**அணுக வேண்டிய அலுவலர் :**

தனி வட்டாட்சியர் (நலிந்தோர் நலத் திட்டம்)

## 10. முதலமைச்சரின் வாகன விபத்து உதவித்திட்டம்

**உதவி பெறுவதற்கான தகுதிகள் :**

அடையாளம் தெரிந்த வாகனங்களால் ஏற்படும் விபத்துக்களில் உயிர் இழக்கும் நபர்களின் குடும்பத்திற்கு இத்திட்டத்தின் கீழ் நிவாரணத் தொகை ரூ.10,000. விபத்தில் நிரந்தரமாக இரு கண்களை இழக்க நேரிட்டால் ரூ.6,000 நிவாரணமும், விபத்தில் ஒரு கண் அல்லது ஒரு கை இழக்க நேரிட்டால் ரூ.4,000 நிவாரணமும் வழங்கப்படும். ஏனைய சிறு காயங்களுக்கு ரூ.500 நிவாரணம் வழங்கப்படும். நிபந்தனை ஏதும் இல்லை.

**அணுக வேண்டிய அலுவலர் :**

வருவாய் கோட்டாட்சியர்

## 11. அடையாளம் தெரியாத வாகனங்களால் விபத்து ஏற்பட்டு இறக்க நேரிடும் இனங்களில் நிவாரணம் (SOLATIUM FUND)

**உதவி பெறுவதற்கான தகுதிகள் :**

ரூ.25,000 வழங்கப்படும். கடுமையாக காயம் அடைந்தவர்களுக்கு ரூ.12,500ம் வழங்கப்படும். விபத்து நடந்தவுடன் அருகிலுள்ள காவல்நிலையத்தில் முதல் தகவல் அறிக்கையை பதிவு செய்து அந்நகலுடன் 6 மாதங்களுக்குள் மாவட்ட ஆட்சியரிடம் விண்ணப்பிக்க வேண்டும்.

நிபந்தனை ஏதுமில்லை.

**அணுக வேண்டிய அலுவலர் :**

வருவாய் கோட்டாட்சியர்



## 12. முதியோர் உதவித்தொகை (பொது)

**உதவி பெறுவதற்கான தகுதிகள் :**

இத்திட்டத்தின் கீழ் மாதந்தோறும் ரூ.200 ஓய்வூதியம் வழங்கப்படுகிறது.

65 வயது முடிந்திருக்க வேண்டும்.

ஆதரவற்றவர்களாக இருத்தல் வேண்டும்.

**அணுக வேண்டிய அலுவலர் :**

தனி வட்டாட்சியர் (நலிந்தோர் நலத் திட்டம்)

## 13. முதியோர் ஓய்வூதியத் திட்டம் (Old Age Pension)

**உதவி பெறுவதற்கான தகுதிகள் :**

இத்திட்டத்தின் கீழ் மாதந்தோறும் ஓய்வூதியம் ரூ.200 வழங்கப்படுகிறது. 65 வயதுக்கு மேல் இருக்க வேண்டும். ஆதரவற்ற, எந்தவித வருமானமும் இல்லாதவராக இருத்தல் வேண்டும்.

**அணுக வேண்டிய அலுவலர் :**

தனி வட்டாட்சியர் (நலிந்தோர் நலத் திட்டம்)

## 14. நலிவுற்ற கலைஞர் நிதியுதவி

**உதவி பெறுவதற்கான தகுதிகள் :**

இத்திட்டத்தின் கீழ் மாதம் ஓய்வூதியம் ரூ.500 வழங்கப்படுகிறது. கலைஞராக இருத்தல் வேண்டும்.

58 வயதுக்கு மேல் இருக்க வேண்டும்.

புகழ்பெற்ற கலைஞரிடம் சான்று பெற்று இருக்க வேண்டும்.

ஆண்டு வருமானம் ரூ.6,000க்கு மிகாமல் இருக்க வேண்டும்.

**அணுக வேண்டிய அலுவலர் :**

உறுப்பினர்–செயலாளர், தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றம், சென்னை–28.

### 15. மொழிக்காவலர் நிதியுதவி

**உதவி பெறுவதற்கான தகுதிகள் :**

மாதம் ஓய்வூதியம் ரூ.3,000 வழங்கப்படுகிறது.

தமிழ்மொழி மற்றும் பண்பாடு ஆகியவற்றில் ஈடுபாடு இருத்தல் வேண்டும்.

தமிழ் வளர்ச்சிக்குத் தொண்டாற்றி இருக்க வேண்டும்.

வருமான வரம்பு இல்லை.

**அணுக வேண்டிய அலுவலர் :**

இயக்குநர், தமிழ் வளர்ச்சி மற்றும் பண்பாட்டுத் துறை, சென்னை.



### 16. அகவை முதிர்ந்த தமிழ் அறிஞர்கள் நிதிஉதவி

**உதவி பெறுவதற்கான தகுதிகள் :**

இத்திட்டத்தின் கீழ் மாதம் ஓய்வூதியம் ரூ.500 வழங்கப்படுகிறது.

58 வயதுக்கு மேல் இருக்க வேண்டும்.

தமிழ் மொழி மற்றும் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்குச் சிறப்பாகத் தொண்டாற்றி இருக்க வேண்டும்.

வருமான வரம்பு மாத வருவாய் ரூ.400–க்கு மிகாமல் இருக்க வேண்டும்.

**அணுக வேண்டிய அலுவலர் :**

மாவட்ட ஆட்சியர் மூலமாக இயக்குநர், தமிழ் வளர்ச்சி மற்றும் பண்பாட்டுத்துறை, சென்னை

### 17. மாநில விடுதலைப் போராட்ட வீரர் ஓய்வூதியம்

**உதவி பெறுவதற்கான தகுதிகள் :**

இத்திட்டத்தின் கீழ் மாதம் ஓய்வூதியம் ரூ.3,000 மற்றும் மருத்துவப்படி ரூ.15 வழங்கப்படுகிறது.

இந்திய சுதந்திரப் போராட்டத்தில் 1942–1944இல் கலந்து கொண்டிருத்தல் வேண்டும்.

மூன்று வாரம் சிறைத் தண்டனைப் பெற்றிருக்க வேண்டும்.

சுதந்திரப் போராட்டத்தில் தலைமறைவாக இருந்து செயல்பட்டமைக்கு ஆதாரபூர்வ ஆவணங்களான நீதிமன்ற ஆணை, கைது வாரண்ட், முதல் தகவல் அறிக்கை நகல் சமர்ப்பிக்க வேண்டும்.

**அணுக வேண்டிய அலுவலர் :**

படிவம் 1–இல் அரசு செயலாளர், பொதுத் (அரசியல்) துறை, சென்னைக்கு அனுப்ப வேண்டும்.

★ ★ ★

**நலத்திட்டத்தின் பெயர் :**

## 1. பங்காரு அம்மையார் நினைவு மகளிர் திட்டம்

**தகுதி :**

★ கிராமப்புற ஏழைப் பெண்கள்

**அளிக்கப்படும் உதவி :**

★ பெண்களைச் சமூக மற்றும் பொருளாதார அடிப்படையில் மேம்படுத்தும் திட்டம்

**அணுக வேண்டிய அலுவலர் :**

★ மாவட்டத் திட்ட அலுவலர்,
பங்காரு அம்மையார் நினைவு மகளிர் திட்ட செயலாக்க அலுவலகம்

## 2. வேலைவாய்ப்பு பயிற்சி திட்டங்கள்

1. தமிழ்நாடு அரசுத் திட்டம் –
வாழ்க்கைத் தொழில் கல்வி
(VOCATIONAL TRAINING)

2. இந்திய அரசுத் திட்டங்கள் (NORAD/STEP)
பன்னாட்டு மேம்பாட்டிற்கான நார்வே நாட்டு முகமை / பயிற்சி மற்றும் வேலை வாய்ப்பிற்கான உதவித் திட்டம்

**தகுதி :**

★ சுயஉதவிக் குழு உறுப்பினர்கள்

★ கிராமப்புற, நகர்ப்புற ஏழைப் பெண்கள்



**அளிக்கப்படும் உதவி :**

★ குறிப்பிட்ட தொழிலில் இலவசப் பயிற்சி

**அணுக வேண்டிய அலுவலர் :**

★ தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர், திட்ட மேலாண்மை அலுவலகம், தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம், சென்னை 600032.

★ மாவட்ட திட்ட அலுவலர், பங்காரு அம்மையார் நினைவு மகளிர் திட்ட செயலாக்க அலுவலகம்

## 3. தொழில் முனைவோர் மேம்பாட்டுத் திட்டம்

**தகுதி :**

★ கிராமப்புற, நகர்ப்புறப் பெண்கள்

**அளிக்கப்படும் உதவி :**

★ தொழில் முனைவோர்களுக்கு இலவசப் பயிற்சி அளிப்பது

**அணுக வேண்டிய அலுவலர் :**

★ தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர், திட்ட மேலாண்மை அலுவலகம், தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம், சென்னை 600032.

## 4. மகளிர் மனமகிழ் மன்றங்கள்

**தகுதி :**

சுயஉதவிக் குழு உறுப்பினர்கள்

**அளிக்கப்படும் உதவி :**

சென்னை நீங்கலாக, 28 மாவட்டங்களில் அமைக்கப்பட்டுள்ள சுய உதவிக்குழுக்களில் போதிய அடிப்படை வசதி பெறுகின்ற குழுக்கள் தேர்வு செய்து, இந்த மையங்களுக்கு தலா ரூ.4,200 வீதம் விளையாட்டுப் பொருட்கள் வாங்கவும் மற்றும் மைய பராமரிப்புச் செலவு மேற்கொள்ளவும் அளிக்கப்படுகிறது.

**அணுக வேண்டிய அலுவலர் :**

★ தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர், திட்ட மேலாண்மை அலுவலகம், தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம், சென்னை 600032

★ மாவட்டங்களில் திட்ட அலுவலர்,
பங்காரு அம்மையார் நினைவு மகளிர் திட்ட செயலாக்க அலுவலகம்

★ ★ ★

**நலத்திட்டத்தின் பெயர் :**

**1. தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து திட்டம்**

**பயனடைவோர் :**

★ முதல் பிரிவு கர்ப்பிணிகள், பாலூட்டும் தாய்மார்கள்

★ பிறந்தது முதல் 6 வயது குழந்தைகள்

★ கர்ப்பம் தரித்த மூன்றாம் மாதமே பதிவு செய்து கர்ப்ப கால பராமரிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

1. கர்ப்பிணிகளை, குழந்தைகளை எடை எடுத்தல்
2. கர்ப்பிணிகளுக்கு சிறுநீர் பரிசோதனை, இரத்தப் பரிசோதனை, இரத்த அழுத்தப் பரிசோதனை, வயிற்றுப் பரிசோதனை செய்தல்
3. ரணஜன்னி தடுப்பூசி போடுதல்

**ஊட்டச்சத்து உணவு பெறுபவர்கள் :**

அ. கர்ப்பிணிகள்

ஆ. பாலூட்டும் தாய்மார்கள்

இ. 6–36 மாத நலிவுற்ற குழந்தைகள் (ஊட்டச்சத்து குறைபாடுள்ள குழந்தைகள்)

**நலப்பணிகள் :**

**அனைத்து கர்ப்பிணிகளுக்கும் கர்ப்பிணிகளை இணை உணவிற்குத் தேர்வு செய்யக் காரணங்கள் :**

1. கர்ப்பம் தரித்த முதல் மாத எடை 42 கிலோவுக்குக் கீழ்
2. தாயின் வயது 18க்குக் கீழ்
3. தாய்க்கு இது முதல் கர்ப்பம் அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட கர்ப்பம்
4. இரத்த சோகை
5. வீக்கம்
6. இரத்தப்போக்கு
7. நீரில் உப்பு
8. நான்கு மாதத்திற்கு பிறகு எடை கூடவில்லை எனில்
9. தாய்க்கு முந்தைய கர்ப்ப காலத்தில் வலிப்பு
10. கால் வீக்கம்
11. குறைமாத பிரசவம்
12. கருச்சிதைவு
13. இரட்டைக் குழந்தை
14. பிறந்த குழந்தையின் எடை 2.500 கி.கி.க்கு கீழ்
15. ஏழு நாட்களுக்குள் குழந்தை இறப்பு போன்றவை ஏற்பட்டு இருந்தால்

**அணுக வேண்டிய அலுவலர் :**

ஊட்டச்சத்துப் பணியாளர் / கிராம சுகாதார செவிலியர் / மருத்துவ அலுவலர் சமுதாய ஊட்டச்சத்துப் பணியாளர்கள் / கிராம சுகாதார செவிலியர்

**2. தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து திட்டம்**

**பயனடைவோர் :**

பாலூட்டும் தாய்மார்கள் ( குழந்தை பிறந்ததிலிருந்து குழந்தைக்கு 6 மாதம் வரை உள்ளவர்கள் – பாலூட்டும் தாய்மார்கள்)



**நலப்பணிகள் :**

சுகாதாரப் பணியாளரால் தேர்வு செய்யப்பட்ட தாய்மார்களுக்கு 6–ஆம் மாதம் முதல் குழந்தை இறந்துவிட்டால், தாயின் நலன் கருதி குழந்தை இறந்த பின் 2 மாதங்களுக்கு மட்டும்

**அணுக வேண்டிய அலுவலர் :**

சமுதாய ஊட்டச்சத்துப் பணியாளர்கள் / கிராம சுகாதார செவிலியர்

**3. தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து திட்டம்**

**பயனடைவோர் :**

சிறப்பு மருத்துவப் பரிசோதனை, கர்ப்பிணிகள்

**நலப்பணிகள் :**

1. 18 வயதிற்கு மேல் 35 வயதிற்குக் கீழ் உள்ளவர்கள்
2. உயரம் 145 செ.மீ. குறைவு
3. எடை 42 கி.கி.க்கு குறைவு
4. முந்தைய கர்ப்பத்தில் கால் வீக்கம்
5. அதிக இரத்தப் போக்கு
6. குறைமாத பிரசவம்
7. இறந்தே குழந்தை பிறத்தல்
8. பிரசவத்தில் சிக்கல்
9. ஏழு நாட்களுக்குள் குழந்தை இறப்பு
10. இரட்டைக் குழந்தை
11. இந்த கர்ப்பத்தில் மிகப் பெரிய அல்லது மிகச் சிறிய வயிறு

**அணுக வேண்டிய அலுவலர் :**

சமுதாய ஊட்டச்சத்துப் பணியாளர்கள் / கிராம சுகாதார செவிலியர் / மருத்துவ அலுவலர்கள்

### 4. தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து திட்டம்

**பயனடைவோர் :**

★ 0–1 மாதக்குழந்தைகள் தடுப்பூசி, சிறப்பு மருத்துவ கவனிப்பு

**நலப்பணிகள் :**

அனைத்துக் குழந்தைகளுக்கும்

1. குறை மாதத்தில் பிறந்த குழந்தைகள்
2. பிறப்பு எடை குறைந்த குழந்தைகள்
3. ஊனங்கள் உள்ள குழந்தைகள்

**அணுக வேண்டிய அலுவலர் :**

சமுதாய ஊட்டச்சத்துப் பணியாளர்கள் / கிராம சுகாதார செவிலியர் / மருத்துவ அலுவலர்கள்

### 5. தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச்சத்துத் திட்டம்

**பயனடைவோர் :**

★ 1–36 மாதக் குழந்தைகள் உயிர்ச்சத்து ஏ, வயிற்றுப் பூச்சி நீக்கம் மருந்து வழங்குதல்

★ இரும்புச் சத்து மாத்திரைகள் வழங்குதல்

**இணை உணவு பெறுபவர்கள்:**

(6–36 மாதக் குழந்தைகள்) வயிற்றுப் போக்கு எனில் வாய்வழிக் கரைசல் பொட்டலம் அளித்தல், நலக் கல்வி அளித்தல், கடுமையான சுவாச மண்டல நோய்க்கு கவனிப்பு அளித்தல், எல்லா தடுப்பூசிகளும் போடுதல்

**நலப்பணிகள் :**

★ ஆறு மாதத்திற்கு மேற்பட்ட அனைத்து குழந்தைகளுக்கும்

★ இரும்புச் சத்து குறையுள்ள குழந்தைகள் :

1. எடை எடுத்தவுடன் இரண்டு, மூன்று மற்றும் 4–ஆம் நிலையில் உள்ளவர்கள்



2. எடை இழப்பு ஏற்பட்ட குழந்தைகள்
3. வயிற்றுப் போக்கினால் பாதிக்கப்பட்ட குழந்தைகள் அனைத்துக் குழந்தைகளுக்கும் தனி கவனம் செலுத்தி உயரச் செய்தல்

**அணுக வேண்டிய அலுவலர் :**

சமுதாய ஊட்டச்சத்து பணியாளர்கள் / கிராம சுகாதார செவிலியர் / மருத்துவ அலுவலர்கள்

### 6. தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து திட்டம்

**பயனடைவோர் :**

★ 3–5 வயதுக்குட்பட்ட குழந்தைகள்

★ பள்ளி முன் பருவக் கல்வி ஊனங்களைக் கண்டறிந்து சிகிச்சை ஆண்டுக்கு ஒரு முறை மருத்துவப் பரிசோதனை

★ 3 மாதங்களுக்கு ஒரு முறை எடை, மதிய உணவு அளித்தல்

**நலப்பணிகள் :**

அனைத்துக் குழந்தைகள் (பள்ளி முன் பருவக் கல்வி பயிலும் குழந்தைகள்)

**அணுக வேண்டிய அலுவலர்:**

குழந்தைகள் நல அமைப்பாளர்கள் ★

**நலத்திட்டத்தின் பெயர் :**

உலக வங்கி உதவி பெறும் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள்—3வது திட்டம்

**திட்டம் செயல்படும் மாவட்டங்கள் :**

மதுரை, தேனி, திண்டுக்கல், ஈரோடு, தருமபுரி, கடலூர், விழுப்புரம், திருநெல்வேலி, தூத்துக்குடி, வேலூர், திருவண்ணாமலை, விருதுநகர், இராமநாதபுரம், சிவகங்கை, திருச்சி, கரூர், பெரம்பலூர், கோயம்புத்தூர், தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், கன்னியாகுமரி, சேலம் மற்றும் நாமக்கல் ஆகிய 24 மாவட்டங்களில், 318 வட்டாரங்களில், 19500 மையங்களில் இத்திட்டம் செயல்பட்டு வருகிறது.

**திட்டத்தின் முக்கிய குறிக்கோள்**

0–6 வயதுக் குழந்தைகளின் ஊட்டச்சத்து, சுகாதாரம், மன மற்றும் சமூக வளர்ச்சியினை மேம்படுத்திக் குறிப்பாக 3 வயதிற்குட்பட்ட குழந்தைகளிடையே ஊட்டச்சத்துக் குறைபாட்டை தடுத்து, குழந்தை பராமரிப்புப் பழக்கத்தினை குடும்ப அளவில் மேம்படுத்துவது.

பெண்களிடையே குறிப்பாக கர்ப்பிணிகள், பாலூட்டும் தாய்மார்கள் மற்றும் இளம் பெண்கள் ஆகியோரின் ஊட்டச்சத்து மற்றும் ஆரோக்கியத்தை மேம்படுத்துதல்.

குடும்பத்தின் ஊட்டச்சத்து, சுகாதாரப் பிரச்சினைகள் சம்பந்தமாக தேவையான பராமரிப்பு பற்றிய விழிப்புணர்வை மேலோங்கச் செய்வது அதன் மூலம் தாய்மார்கள் மற்றும் இளம் பெண்களின் தன்னுரிமை மேம்பாட்டினை உயர்த்துவது.

**பயனடைவோர்**

கர்ப்பிணித் தாய்மார்கள்

பாலூட்டும் தாய்மார்கள்

0–3 வயது குழந்தைகள்

3–6 வயது குழந்தைகள்

இளம் பெண்கள்

சமுதாயக் குழுக்கள்/சமுதாயத் தலைவர்கள்

**கர்ப்பிணிகள் மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்கு அளிக்கப்படும் நலப்பணிகள்**

அங்கன்வாடி மையத்தின் பணியாளர் கர்ப்பிணிகளை மூன்றாவது மாதம் முதல் பதிவு செய்யப்பட்டு தாய்சேய் நல அட்டை வழங்கப்படுகிறது.

கர்ப்பிணிகளின் எடை மாதாமாதம் எடுத்து கருவின் வளர்ச்சி கண்காணிக்கப்படுகிறது.

ஐந்தாவது மாத கர்ப்பத்திலிருந்து மாதம் ஒரு கிலோ குறைவாகவோ மூன்று கிலோவிற்கு அதிகமாகவோ எடை இருந்தால் மருத்துவமனைக்குப் பரிந்துரை செய்யப்படுகிறது.

மையத்தில் சுகாதாரப் பணியாளரால் கர்ப்பிணிகள் மாதாமாதம் பரிசோதனை செய்யப்படுகிறார்கள்.




பிரசவ சிக்கல்கள், உடல் நலக் குறைபாடுகள் உள்ள கர்ப்பிணிகள் மருத்துவமனைக்குப் பரிந்துரை செய்யப்படுகிறார்கள்.

20வது வார கர்ப்பத்தில் 42 கிலோவிற்குக் கீழ் உள்ள கர்ப்பிணிகள், இரத்தசோகை, பதினெட்டு

வயதிற்குக் கீழ் மற்றும் 35 வயதுக்குக் கீழ், கர்ப்பக் காலத்தில் போதுமான எடை கூடுதல் இல்லாத கர்ப்பிணிகள் முந்தைய கர்ப்பத்தில் குறைப்பிரசவம் மற்றும் குறைந்த பிறப்பு எடையுடன் குழந்தை பெற்ற கர்ப்பிணிகளுக்கு, கர்ப்பகாலம் 6வது மாதம் முதல் குழந்தை பிறந்த 6வது மாதம் வரை, தினமும் 100 கிராமம் இணை உணவு வழங்கப்படுகிறது.




7,8 மற்றும் 9 மாத கர்ப்பிணிகளுக்கு இரத்தசோகை வராமல் தடுக்க தினமும் ஒரு இரும்புச் சத்து மாத்திரைகளும், இரத்த சோகை உள்ளவர்களுக்கு தினமும் இரண்டு மாத்திரைகளும் கொடுக்கப்படுகிறது.

கர்ப்பிணியைப் பதிவு செய்தவுடன் ரண ஜன்னி வராமல் தடுக்க ரண ஜன்னி தடுப்பூசி சுகாதார செவிலியரால் போடப்படுகிறது.

கர்ப்பிணிகளுக்கு ஊட்டச்சத்து மற்றும் சுகாதாரக் கல்வி அளிக்கப்படுகிறது.

கர்ப்பிணிகளுக்கு மருத்துவமனை/ சுகாதாரநிலையத்தில் பிரசவம் வைத்துக் கொள்ள அறிவுறுத்தப்படுகிறது.

வீட்டில் பிரசவம் நடக்கும் கர்ப்பிணிகளுக்குக் குழந்தை பிறந்தவுடன் அங்கன்வாடி பணியாளரால் எடை எடுக்கப்படுகிறது. தொடர்ந்து பிரசவ பின்பராமரிப்பு சுகாதார செவிலியர்களால் அளிக்கப்படுகிறது.

கர்ப்பகாலத்தில் இணை உணவுக்குத் தேர்வு செய்யப்பட்ட கர்ப்பிணிகளுக்கு குழந்தை பிறந்து தொடர்ந்து 6 மாதம் வரை இணை உணவு வழங்கப்படுகிறது.

**0-36 மாத குழந்தைகளுக்கு அளிக்கப்படும் நலப்பணிகள்**

மூன்று வயதுக்குட்பட்ட குழந்தைகள் மாதாமாதம் 23, 24, 25ம் தேதிகளில் அங்கன்வாடி பணியாளர்களால் எடை எடுக்கப்பட்டு தாய்சேய் நல இணை அட்டையில் குறிக்கப்பட்டு குழந்தைகள் வளர்ச்சி தொடர்ந்து கண்காணிக்கப்படுகிறது.

ஊட்டச்சத்து குறைபாடுள்ள 6–36 மாத குழந்தைகளுக்கு ஊட்டச்சத்து நிலைக்கும், வயதிற்கும் உகந்தவாறு இணை உணவு காலை 7 மணி முதல் 9 மணி வரை அங்கன்வாடி மையத்தில் வழங்கப்படுகிறது.

அங்கன்வாடி மையத்தில் குறிப்பிட்ட புதன்கிழமைகளில் சுகாதாரச் செவிலியரால் பி.சி.ஜி., முத்தடுப்பூசி, போலியோ சொட்டு மருந்து, தட்டம்மை தடுப்பூசி ஒரு வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்குக் கொடுக்கப்படுகிறது. ஒன்றரை வயது முதல் இரண்டு வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு முத்தடுப்பூசி மற்றும் போலியோ சொட்டு மருந்து கொடுக்கப்படுகிறது.

சிறுநோய்களுக்கு, சிகிச்சை மையத்தில் சுகாதாரச் செவிலியருடன் இணைந்து அளிக்கப்படுகிறது.

வயிற்றுப் போக்கைக் கட்டுப்படுத்துவதற்கு ஓ.ஆர்.எஸ். பாக்கெட்டுகள் வழங்கப்படுகின்றன.

குழந்தைகளுக்கு வயிற்றுப் பூச்சி நீக்க மருந்தும் உரிய காலத்தில் வழங்கப்படுகிறது.

சுவாச மண்டல நோய் உள்ள குழந்தைகளைக் கண்டறிந்து, தேவையானவர்களை மருத்துவமனைக்குப் பரிந்துரை செய்யப்படுகிறது.

குழந்தையின் 6வது மாதத்திலிருந்து ஆறு மாதத்திற்கு ஒருமுறை விட்டமின் ஏ திரவம் ஐந்தாவது வயது வரை வழங்கப்படுகிறது.

குழந்தைகளின் தாய்மார்களுக்கு ஊட்டச்சத்து, சுகாதாரம், குழந்தை பராமரிப்புக் கல்வி அளிக்கப்படுகிறது.

**3-6 வயதுக் குழந்தைகளுக்கு அளிக்கப்படும் நலப்பணிகள்**

3–6 வயதுக் குழந்தைகளை எடை எடுத்து குழந்தையின் வளர்ச்சி கண்காணிக்கப்படுகிறது.

இக் குழந்தைகளுக்கு மதிய உணவு, அங்கன்வாடி மையத்தில் வருடம் 365 நாட்களும் அளிக்கப்படுகிறது.

இக்குழந்தைகளுக்கு காலமுறைப்படி மருத்துவ பரிசோதனை ஆரம்ப சுகாதார மருத்துவர்/ பணியாளரால் செய்யப்படுகிறது.

இக்குழந்தைகளுக்கு விளையாட்டு முறைப்படி முன்பருவக் கல்வி அளிக்கப்படுகிறது. இதன் மூலம் குழந்தைகளுக்கு அறிவு, மனம், மொழி மற்றும் உடல் வளர்ச்சி போன்றவற்றில் ஈடுபாடு கொள்ளச் செய்து, ஆறாவது வயதில் ஆரம்பப் பள்ளிக்குச் செல்லத் தயார்படுத்தப்படுகிறது.

**இளம் பெண்களுக்கு அளிக்கப்படும் நலப்பணிகள்**

12 வயது முதல் 18 வயது வரை உள்ள இளம்பெண்களை ஊக்குவித்து அங்கன்வாடி மையத்தில் மூன்று மாதத்திற்கு ஒருமுறை எடை எடுத்து, எடை அட்டையில் குறித்து வளர்ச்சியைக் கண்காணிக்க வழிவகை செய்யப்படுகிறது.

இளம் பெண்கள் போதுமான எடையுடன் இருக்க தினமும் அவர்கள் உண்ணும் உணவிற்குக் கூடுதலாகப் புரதச்சத்து நிறைந்த நிலக்கடலை, கொண்டைக்கடலை போன்றவற்றை ஒரு கைப்பிடி அளவு உண்ண அறிவுரை வழங்கப்படுகிறது.

இளம் பெண்களுக்கு இரத்த சோகையைத் தடுக்கவும், இரத்த சோகையைப் போக்குவதற்கும் இரும்புச் சத்து மாத்திரை மையத்தின் மூலம் வழங்கப்படுகிறது.

இளம் பெண்களுக்கு ஆறு மாதத்திற்கு ஒருமுறை பூச்சி நீக்க மருந்து, மையத்தின் மூலம் வழங்கப்படுகிறது.

இளம் பெண்கள் மேலாண்மை பெற ஊட்டச்சத்து மற்றும் சுகாதாரக் கல்வி, அவர்களின் உரிமை பற்றித் தெரிந்து கொள்ளவும் தகவல், கல்வி மற்றும் தொடர்புப் பணிகள் மூலம் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

**சமுதாயக் குழுக்கள் மற்றும் சமுதாயத் தலைவர்களுக்கு திட்டம் பற்றிய கல்வி**

பெண்கள் தொடர்புக் குழு, இளம்பெண்கள் தொடர்புக் குழுக்கள் ஒவ்வொரு அங்கன்வாடி மையத்தில் அமைக்கப்பட்டு, ஒவ்வொரு மாதமும் திட்டப்பணிகள் பற்றி கல்வி அளிக்கப்பட்டு, திட்டத்தில் அவர்களுடைய ஈடுபாட்டைப் பெற வழிவகை செய்யப்படுகிறது.

சமுதாயத் தலைவர்களுக்குத் திட்டம் பற்றிய விழிப்புணர்வு முகாம்கள் நடத்தப்பட்டு, அங்கன்வாடி மையப்பணிகள் திறம்பட செயல்பட அவர்களின் ஒத்துழைப்பு தொடர்ந்து பெற வழிவகை செய்யப்படுகிறது.

கர்ப்பிணிகள், பாலூட்டும் தாய்மார்கள், ஆறு வயதிற்குட்பட்ட குழந்தைகள், இளம் பெண்கள் ஆகியோருக்கு, ஊட்டச்சத்து மற்றும் சுகாதாரப் பணிகள் அனைத்தும் இலவசமாகச் சிறப்பான முறையில் அங்கன்வாடி மையம் வழியாகச் சென்றடைகின்றன.

**அணுக வேண்டிய அலுவலர்;**

அங்கன்வாடி மையத்திலுள்ள பணியாளர்

திட்டத்தின் பயன்களைப் பெற எவ்விதமான படிவங்களையும் பூர்த்தி செய்து தர வேண்டிய அவசியமில்லை.

★ ★ ★

**பணி விவரம் :**

தமிழ்நாடு அரசின் கீழியங்கும் சமூகப் பாதுகாப்புத் துறை, இடர்பாடான சூழ்நிலையிலுள்ள சிறார்களின் முன்னேற்றம், பாதுகாப்பு மற்றும் பயிற்சியுடன் கூடிய மறுவாழ்வுடன், சிறுமியர் மற்றும் மகளிர் ஆகியோருக்குச் சேவைகள் புரிவதை கடமையாகக் கொண்டுள்ளது. இத்துறை சிறார்களின் உரிமைகளைப் பாதுகாக்கவும் அவர்களின் முறையான வளர்ச்சிக்காகவும் துறையின் அனைத்து திட்டங்களிலும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களை ஈடுபடுத்தி வருகிறது.

இத்துறையின் கீழியங்கும் நிறுவனங்களில் 1986ஆம் ஆண்டின் இளைஞர் நீதிச் சட்டத்தின் கீழ் அனுமதிக்கப்படும் சிறார்கள் மற்றும் 1956ஆம் ஆண்டின் ஒழுக்க நெறி பிறழ்தல் (தடுப்பு) சட்டத்தின்கீழ் அனுமதிக்கப்படும் சிறுமியர் மற்றும் மகளிருக்குப் பாதுகாப்பு பயிற்சி (கல்வி மற்றும் தொழிற்கல்வி) மற்றும் மறுவாழ்வு அளித்து வருகின்றன. மேலும், இத்துறை நிறுவனங்களிலிருந்து நீக்கம் பெறும் சிறார்கள் மற்றும் மகளிருக்குத் தேவையான பிற்காப்பு உதவிகளையும் அளித்து வருகிறது.

போதைப் பொருட்களின் முறைகேடான பயன்பாட்டினை கட்டுப்படுத்துதல் மற்றும் தவிர்ப்பது தொடர்பான இந்திய அரசின் திட்டங்களைத் தமிழ்நாட்டில் நடைமுறைப்படுத்தும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களின் ஒருங்கிணைப்பாளராக சமூகப் பாதுகாப்புத்துறை இயக்குநர் உள்ளார். இத்திட்டத்தின்கீழ் மைய அரசின் நிதிஉதவி கோரும் கருத்துருக்கள் பரிசீலிக்கப்பட்டு நிறுவனத்தை ஆய்வு செய்த பின்னர் நிதி உதவிக்கென பரிந்துரைக்கப்படுகின்றன.

**இத்துறையின் திட்டங்களால் பயன்பெறுவோர் பின்வருமாறு :**

★ ஆதரவற்ற சிறார்கள்

★ தவறிழைத்த சிறார்கள்

★ சாலையோர சிறார்கள்

★ துன்புறுத்தலுக்கு ஆளான சிறார்கள்

★ கைவிடப்பட்ட மகளிர் மற்றும் மணமாகாத தாய்மார்கள்

★ ஒழுக்க அச்சுறுத்தலுக்கு உள்ளான சிறுமியர் மற்றும் மகளிர்

★ 1956ஆம் ஆண்டின் ஒழுக்க நெறி பிறழ்தல் (தடுப்பு) சட்டத்தின் கீழ் தவறிழைத்த சிறுமியர் மற்றும் மகளிர்

**செயலமைப்பு :**

★ இளைஞர் நலக்குழுமங்கள் – ஆதரவற்ற சிறார்கள்

★ இளைஞர் நீதிமன்றம் – தவறிழைத்த சிறார்கள்

★ தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் – சாலையோர சிறார்கள்

★ இளைஞர் நலக்குழுமம் மற்றும் தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் – துன்புறுத்தலுக்கு ஆளான சிறார்கள்

★ தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் – கைவிடப்பட்ட மகளிர் மற்றும் மணமாகாத தாய்மார்கள்

★ பாதுகாப்பு இல்லங்கள் – ஒழுக்க அச்சுறுத்தலுக்கு உள்ளான மகளிர்

★ குற்றவியல் நீதிமன்றம் – 1956ஆம் ஆண்டின் ஒழுக்கநெறி பிறழ்தல் (தடுப்பு) சட்டத்தின் கீழ் தவறிழைத்த சிறுமியர் மற்றும் மகளிர்



**தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி :**

இயக்குநர், சமூகப் பாதுகாப்புத்துறை,
153, புரசைவாக்கம் நெடுஞ்சாலை,
சென்னை–600 010.

நலத்திட்டத்தின் பெயர் :

**1. ஊனமுற்றோருக்கான அடையாள அட்டை**

**தகுதி :**

★ ஊனமுற்ற அனைவரும் அந்தந்தப் பகுதி அரசு மருத்துவமனையில் உள்ள மருத்துவ அலுவலரிடம் ஊனத்தின் தன்மை மற்றும் அளவு குறிப்பிட்டுச் சான்று பெற வேண்டும்



★ ஊனத்தின் சதவீதம் 40 மற்றும் அதற்கு மேல் உள்ளவர்களுக்கு அட்டை வழங்கப்படும்.

★ ஊனம் தெரியும்படியான பாஸ்போர்ட் அளவு புகைப்படம் இரண்டுடன் விண்ணப்பிக்க வேண்டும்.

**அளிக்கப்படும் உதவி :**

இலவச ஊனமுற்றோர் அடையாள அட்டை

தமிழக அரசின் அனைத்து ஊனமுற்றவர்களுக்கான உதவிகளையும் பெற அடையாள அட்டை பெற்றிருத்தல் வேண்டும்.

**அணுக வேண்டிய அலுவலர் :**

மாவட்ட ஊனமுற்றோர் மறுவாழ்வு அலுவலர்

**கல்வி**

**2. சிறப்புக் கல்வி**

பார்வையற்றோர், மனவளர்ச்சிக் குன்றியோர், காது கேளாதோர் மற்றும் கை, கால் ஊனமுற்றக் குழந்தைகளுக்கு இலவச உணவு மற்றும் விடுதி வசதியுடன் கூடிய சிறப்புக் கல்வி அளிக்கப்படுகிறது. ஆண்டுக்கு ஒருமுறை இரண்டு இணைச் சீருடை இலவசமாக வழங்கப்படுகிறது.

**தகுதி :**

5 வயதுக்கும் மேற்பட்ட ஊனமுற்ற குழந்தைகள் மருத்துவச் சான்றிதழ், வயது சான்றிதழ், சாதிச் சான்றிதழ் இணைக்கப்பட வேண்டும்

**அளிக்கப்படும் உதவி :**

**அணுக வேண்டிய அலுவலர் :**

பள்ளித் தலைமை ஆசிரியர்

**3. முன்பருவக் கல்வி**

**தகுதி :**

3 வயதிலிருந்து 5 வயதுக்கு உட்பட்ட செவித்திறன் குறையுடன் பேசும் திறன் இழந்த குழந்தைகளின் மருத்துவச் சான்றிதழ் மற்றும் சாதிச் சான்றிதழ் இணைக்கப்பட வேண்டும்.



**அளிக்கப்படும் உதவி :**

உணவு மற்றும் இலவச தங்கும் விடுதி மற்றும் சிறப்புக்கல்வி அளிக்கப்படுகிறது. ஆண்டுக்கொருமுறை இரண்டு இணைச் சீருடைகள் இலவசமாக வழங்கப்படுகிறது.

**அணுக வேண்டிய அலுவலர் :**

பள்ளித் தலைமை ஆசிரியர்

## 4. மனவளர்ச்சி குன்றியோருக்கான அரசு நிலையம், சிட்லபாக்கம், சென்னை

**அளிக்கப்படும் உதவி :**

மன வளர்ச்சி குன்றிய குழந்தைகள் அன்றாட செயல்களைக் கவனித்துக் கொள்ளத் தேவைப்படும் பயிற்சியோடு கூடிய சிறப்புக் கல்வி அளிக்கப்படுகிறது. இலவச உணவும், இலவச தங்கும் விடுதி, ஆண்டுக்கொரு முறை இரண்டு இணைச் சீருடைகள் அளிக்கப்படுகின்றன.

**தகுதி :**

5–9 வயதுக்குட்பட்ட மன வளர்ச்சி குன்றிய குழந்தைகள் மருத்துவச் சான்றிதழ் இணைக்கப்பட வேண்டும்.

**அணுக வேண்டிய அலுவலர் :**

திட்ட அலுவலர், மன வளர்ச்சி குன்றியோருக்கான அரசு நிலையம், சிட்லபாக்கம், சென்னை.

## 5. பார்வையற்ற மாணவர்களுக்குத் தேர்வு எழுத உதவித் தொகை

பார்வையற்றவர்கள் அரசுப் பொதுத் தேர்வில் வினாக்களுக்கு வாய் மூலம் அளிக்கும் பதிலினை எழுதும் உதவியாளருக்கு ஒரு தேர்வுத்தாளுக்கு ரூ.30 வீதம் உதவித் தொகை வழங்கப்படுகிறது.

**தகுதி :**

பார்வையற்ற மாணவர்கள் தலைமை ஆசிரியரின் சான்றிதழ் இணைக்கப்பட வேண்டும்.



**அணுக வேண்டிய அலுவலர் :**

மாவட்ட மறுவாழ்வு அலுவலர் / தலைமை ஆசிரியர்

## 6. கல்வி உதவித் தொகை

**தகுதி :**

★ அரசு அங்கீகாரம் பெற்ற பள்ளியிலோ, கல்லூரியிலோ பயில வேண்டும். எட்டாம் வகுப்பிற்கு மேல் கல்வி பயிலுபவர்கள் முந்தைய முழு ஆண்டுத் தேர்வில் 40 சதவீதத்திற்கு மேல் மதிப்பெண்கள் பெற்றிருத்தல் வேண்டும்.

★ ஆண்டு வருமானம் ரூ.12,000க்குள் இருக்க வேண்டும்.

★ 9–ஆம் வகுப்பிற்கு மேல் கல்வி பயிலும் ஊனமுற்றோர்; உதவித் தொகை பெற குடும்ப மாத வருமானம் ரூ.2000 வரை இருக்கலாம்.

**அளிக்கப்படும் உதவித் தொகை :**

★ ஆண்டுக்கு ரூ.250 (1–ஆம் வகுப்பு முதல் 5–ஆம் வகுப்பு வரை).

★ ஆண்டுக்கு ரூ.750 (6–ஆம் வகுப்பு முதல் 8–ஆம் வகுப்பு வரை).

★ ஒன்பதாம் வகுப்பு முதல் 12–ஆம் வகுப்பு வரை மாதம் ரூ.110 எனவும், பட்டப் படிப்பிற்கு மாதம் ரூ.150 எனவும், தொழிற்கல்வி, பொறியியல், மருத்துவம் மற்றும் முதுநிலை பட்டப் படிப்பிற்கு மாதம் ரூ.195 எனவும் வழங்கப்பட்டு வருகின்றது.

**அணுக வேண்டிய அலுவலர் :**

மாவட்ட மறுவாழ்வு அலுவலர்

## 7. இலவசமாக பிரெய்லி புத்தகங்கள் வழங்குதல்

**அளிக்கப்படும் உதவி :**

பார்வையற்றோருக்காக அரசு மற்றும் தனியார் கல்வி நிறுவனங்களில் பயிலும் பார்வையற்ற மாணவர்களுக்கு பிரெய்லி முறையில் அச்சடித்த புத்தகங்கள் இலவசமாக அளிக்கப்பட்டு வருகிறது.

**தகுதி :**

பார்வையற்ற மாணவர்கள் பள்ளித் தலைமை ஆசிரியரிடமிருந்து சான்றிதழ் இணைக்கப்பட வேண்டும்.

**அணுக வேண்டிய அலுவலர் :**

ஊனமுற்றோருக்கான மாநில ஆணையர், சென்னை



## 8. பார்வையற்றோருக்கான தொழிற்பயிற்சி (ஆண்கள்)

**தகுதி :**

★ பார்வையற்றவராக இருத்தல் வேண்டும். 8–ஆம் வகுப்பு அதற்கு மேலும் படித்தவர்கள் 18 வயதுக்கு மேல் இருத்தல் வேண்டும்.

★ கல்வித் தகுதி, சான்றிதழ், மருத்துவச் சான்றிதழ் இணைக்கப்பட வேண்டும்.

**அளிக்கப்படும் உதவி :**

இலவச விடுதி, உணவு வசதியுடன் ஆண்டிற்கு இரண்டு ஜோடி சீருடை, இலவசமாக தொழிற் பயிற்சி, பொருத்துநர் மற்றும் அடிப்படை இயந்திரம் இயக்குபவர் (ஒரு வருடம்), புத்தகம் கட்டுபவர் (ஒரு வருடம்), மின்கம்பி சுற்றுபவர் (6 மாதம்) ஆகிய பயிற்சிகள் அளிக்கப்படுகிறது.

**அணுக வேண்டிய அலுவலர் :**

மாவட்ட மறுவாழ்வு அலுவலர் / பள்ளித் தலைமை ஆசிரியர், பார்வையற்றோருக்கான அரசு மேல்நிலைப் பள்ளி, பூவிருந்தவல்லி, சென்னை–600 056.

## 9. பார்வையற்ற மகளிருக்கான பயிற்சி

**தகுதி :**

ஆதரவற்ற, பார்வையற்ற பெண்கள் 18–40 வயதிற்குள், தாழ்த்தப்பட்டவர்கள் மற்றும்



பழங்குடியினருக்கு 45 வயது வரை மருத்துவச் சான்றிதழ், வயது சான்றிதழ் இணைக்கப்பட வேண்டும்.

**அளிக்கப்படும் உதவி :**

இலவசமாக உணவு, தங்கும் விடுதியுடன் சாக்குக் கட்டிகள் தயாரிப்பதிலும், துணி நெய்வதிலும் 6 மாத காலம் பயிற்சி அளிக்கப்படுகிறது.

**அணுக வேண்டிய அலுவலர் :**

மாவட்ட மறுவாழ்வு அலுவலர் / முதல்வர், பார்வையற்றோருக்கான அரசு மேல்நிலைப் பள்ளி, பூவிருந்தவல்லி, சென்னை, ஊனமுற்றோருக்கான மாநில ஆணையர், சென்னை.

## 10. பேச்சுத் திறன் மற்றும் காது கேட்கும் திறன் இழந்தவர்களுக்குப் பயிற்சி (ஆண்கள்)

பொருத்துநர் பிரிவு அரசு தொழிற்பயிற்சி நிலையம், கிண்டியில் இலவசமாக இரண்டு ஆண்டுகள் பயிற்சி அளிக்கப்படுகிறது. மாத உதவித் தொகையாக ரூ.150 வழங்கப்படுகிறது.

**தகுதி :**

★ பேசும் திறன் மற்றும் செவித் திறன் குறையுடையோர் 10–ஆம் வகுப்பு தேறியிருக்க வேண்டும். 18 வயது பூர்த்தி அடைந்தவர்களாக இருக்க வேண்டும்.

★ 10–ஆம் வகுப்பு தேர்ச்சி சான்றிதழ், வயது மற்றும் மருத்துவச் சான்றிதழ் இணைக்க வேண்டும்.

**அணுக வேண்டிய அலுவலர் :**

மாவட்ட மறுவாழ்வு அலுவலர் / முதல்வர், அரசினர் தொழிற்பயிற்சி நிலையம், கிண்டி, சென்னை–32.

## 11. ஊனமுற்றோருக்கு கல்வி நிறுவனங்களில் 3 சதவிகித இட ஒதுக்கீடு

கல்வி நிறுவனங்களில் சேர பார்வையற்றோருக்கு ஒரு சதவீதமும், கை, கால் ஊனமுற்றோருக்கு ஒரு சதவீதமும், செவித்திறன் குறைவுடையோருக்கு ஒரு சதவீதமும் ஒதுக்கி பயிற்சியளிக்கப்பட்டு வருகிறது. மருத்துவம் நீங்கலாக.

**தகுதி :**

★ அந்தந்த வகுப்பிற்குத் தேவையான கல்வித் தகுதிகளைப் பெற்றிருத்தல் அவசியம்

★ இணைக்கப்பட வேண்டிய சான்றிதழ்கள் – சம்பந்தப்பட்ட கல்வி நிறுவனங்களினால் வகுக்கப்பட்ட விண்ணப்பப் படிவங்கள்

**அணுக வேண்டிய அலுவலர் :**

சம்பந்தப்பட்ட கல்வி நிறுவனங்களின் தலைவர்கள்

## 12. ஊனமுற்றோருக்கு வேலை வாய்ப்பு

அரசுப்பள்ளிகளில் 3 சதவீத இட ஒதுக்கீடு அரசு மற்றும் அரசு சார்பு நிறுவனங்களில் எழும் காலிப் பணியிடங்களில் ஒரு சதவீதம் பார்வையற்றோருக்கும், ஒரு சதவீதம் கை, கால் ஊனமுற்றோருக்கும், ஒரு சதவீதம் செவித்திறன் குறைவுடையோருக்கும் வழங்கப்பட்டு வருகிறது.




**தகுதி :**

★ தமிழ்நாடு அரசுத் தேர்வாணையம், ஆசிரியர் தேர்வு வாரியம், வேலை வாய்ப்பு அலுவலகங்கள் நிர்ணயம் செய்துள்ள வயது வரம்பு மற்றும் கல்வித் தகுதி.

★ தமிழ்நாடு தேர்வாணையம் கேட்கும் பணியிடங்களுக்குக் குறிப்பிட்ட படிவத்தில்

விண்ணப்பித்தல் வேண்டும். மற்றோர்கள் வேலைவாய்ப்பு அலுவலகங்களில் நடப்பு பதிவேட்டில் இடம் பெற்றிருத்தல் வேண்டும்.

★ தமிழ்நாடு அரசுத் தேர்வாணையம், ஆசிரியர் தேர்வு வாரியம் மற்றும் சம்பந்தப்பட்ட அரசுத் துறைகள் கோரும் சான்றிதழ்கள் இணைக்கப்பட வேண்டும்.

**அணுக வேண்டிய அலுவலர் :**

சம்பந்தப்பட்ட நிறுவன அலுவலர்கள்

### 13. சுயவேலை வாய்ப்பு வங்கிக் கடன்

வங்கிக் கடன் தொகை பரிந்துரை செய்யப்பட்டு அதற்கு ரூ.2,000 மானியத் தொகையும் வழங்கப்படும்.

**தகுதி :**

ஊனமுற்றோர் சொந்தத் தொழில் செய்ய உரிய விண்ணப்பத்தில் ஊனமுற்றோர் மறுவாழ்வு மையத்திற்கு விண்ணப்பிக்க வேண்டும்.

**அணுக வேண்டிய அலுவலர் :**

மாவட்ட ஊனமுற்றோர் மறுவாழ்வு அலுவலர்




### 14. முதலமைச்சர் அவர்களின் நிவாரண நிதியிலிருந்து செயற்கை அவயம் பொருத்துதல்

ரூ.2,000 மதிப்புள்ள செயற்கைக் கை அல்லது கால் இலவசமாக பொருத்த உதவி

**தகுதி :**

குடும்ப ஆண்டு வருமானம் ரூ.12,000க்குள் இருக்க வேண்டும். செயற்கை அவயம் பொருத்தும் நிலையத்திலிருந்து மதிப்பீடு பெற்று ஊனமுற்றோர் மறுவாழ்வு அலுவலகத்திற்கு அளிக்க வேண்டும்.

**அணுக வேண்டிய அலுவலர் :**

மாவட்ட ஊனமுற்றோர் மறுவாழ்வு அலுவலர்

## பயணச் சலுகை

### 15. பேருந்து பயணம்

இலவசப் பேருந்து பயண அட்டை வழங்கப்படும்.

**தகுதி :**

★ கண்பார்வையற்றோர் நகரப் பேருந்துகளில் மாவட்டம் முழுவதும் பயணம் செய்யலாம்.

★ இதர ஊனமுற்றோர் கல்வி, தொழிற்கல்வி பணிக்கு, சுயவேலைக்கு, மருத்துவ சிகிச்சைக்கு இலவசமாக சென்று வர ஆண்டு வருமானம் ரூ.12,000க்குள் இருக்க வேண்டும்.

★ அரசு போக்குவரத்துக் கழக விரைவுப் பேருந்துகளில் பார்வையற்றோரும் இதர ஊனமுற்றோரும் இலவசமாக பயணம் செய்ய ஆண்டிற்கு ஒருமுறை இருவழிப் பயணத்திற்கு இலவசப் பயணச் சலுகை அளிக்கப்படுகிறது. (தமிழ்நாட்டிற்குள் மட்டும் பயணம் செய்ய)

**அணுக வேண்டிய அலுவலர் :**

மாவட்ட ஊனமுற்றோர் மறுவாழ்வு அலுவலர்

**போக்குவரத்துப்படி**

குறைந்த அளவு 5 சதவீத அடிப்படைச் சம்பளம் அல்லது மாதம் ஒன்றுக்கு ரூ.150, இதில் எது குறைவோ அது சம்பளத் தொகையுடன் வழங்கப்படும்.

**தகுதி :**

அரசுத்துறையில் பணிபுரியும் ஊனமுற்றோர்

**அணுக வேண்டிய அலுவலர் :**

சம்பந்தப்பட்ட அரசுத்துறை தலைவர்கள்

## திருமண நிதியுதவி

### 17. கண்பார்வையற்றவரை பார்வையுள்ளவர் திருமணம் செய்தல்



**அளிக்கப்படும் உதவித் தொகை :**

ரூ.3,000 ரொக்கமாகவும், ரூ.7,000 தேசிய சேமிப்புப் பத்திரமாகவும் வழங்கப்படும்.

**தகுதி :**

★ இருவருக்கும் இது முதல் திருமணமாக இருத்தல் வேண்டும்.

★ திருமணம் பதிவு செய்யப்படல் வேண்டும்.

★ திருமணமான இரண்டு வருடத்திற்குள் விண்ணப்பிக்க வேண்டும்.

★ அரசின் பிற திருமண நிதி உதவி ஏதும் பெற்றிருக்கக் கூடாது.

**அணுக வேண்டிய அலுவலர் :**

மாவட்ட ஊனமுற்றோர் மறுவாழ்வு அலுவலர்

### 18. கை, கால் ஊனமுற்றவரை சாதாரண நபர் திருமணம் செய்தல்

**அளிக்கப்படும் உதவித் தொகை :**

ரூ.2,000 ரொக்கமாகவும், ரூ.5,000 தேசிய சேமிப்புப் பத்திரமாகவும் வழங்கப்படும்.

**தகுதி :**

★ இருவருக்கும் இது முதல் திருமணமாக இருத்தல் வேண்டும்.

★ ஆண்டு வருமானம் ரூ.24,000க்குள் இருக்க வேண்டும்.

★ திருமணம் பதிவு செய்யப்படல் வேண்டும்.

★ திருமணமான இரண்டு வருடத்திற்குள் விண்ணப்பிக்க வேண்டும்.

★ அரசின் பிற திருமண நிதி உதவி ஏதும் பெற்றிருக்கக் கூடாது.

★ இத்திட்டத்தில் பயன்பெற விரும்பும் ஒருவர் 100 சதவிகிதம் கை, கால், உடல் ஊனமுற்றவராக இருத்தல் வேண்டும்.

**அணுக வேண்டிய அலுவலர் :**

மாவட்ட ஊனமுற்றோர் மறுவாழ்வு அலுவலர்

### 19. காது கேளாதோர் வாய் பேசாதோரை சாதாரண நபர் திருமணம் செய்தல்

**அளிக்கப்படும் உதவித் தொகை :**

ரூ.5,000 தேசிய சேமிப்புப் பத்திரமாகவும், ரூ.2000 காசோலையாகவும் வழங்கப்படும்.

**தகுதி :**

★ மணமகனோ அல்லது மணமகளோ எவராவது ஒருவர் காதுகேளாதவர், வாய் பேசாதவராக இருக்க வேண்டும்.

★ இருவருக்கும் இது முதல் திருமணமாக இருத்தல் வேண்டும்.

★ அரசின் பிற திருமண நிதியுதவி ஏதும் பெற்றிருக்கக் கூடாது.

★ பெண்ணுக்கு 18 வயதும் ஆணுக்கு 21 வயதும் நிரம்பியிருக்கவேண்டும்.

**அணுக வேண்டிய அலுவலர் :**

மாவட்ட ஊனமுற்றோர் மறுவாழ்வு அலுவலர்

## மருத்துவ உதவிகள்

**20. போலியோவினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு**

**அளிக்கப்படும் உதவித் தொகை :**

ரூ.400 உதவித் தொகையுடன் கூடிய இலவச அறுவை சிகிச்சை, அரசு மருத்துவமனைகளில் அறுவை சிகிச்சைக்குப் பின் இலவச காலிப்பர் ஊன்றுகோல் வழங்கப்படும்.

**தகுதி :**

இத்துறை மூலம் நடத்தப்படும் போலியோ முகாமில் கலந்து கொண்டு தேர்வு செய்யப்பட்டவராய் இருத்தல் வேண்டும்.

**அணுக வேண்டிய அலுவலர் :**

மாவட்ட ஊனமுற்றோர் மறுவாழ்வு அலுவலர்

**21. சட்டப்படிப்பு பயின்ற உடல் ஊனமுற்றோருக்கு சட்டத் தொழில் புரிய நிதியுதவி வழங்கும் திட்டம்**

**அளிக்கப்படும் உதவித் தொகை :**

சட்டப்புத்தகம் வாங்க ரூ.3,000 காசோலையாக வழங்கப்படும்

**தகுதி :**

★ உடல் ஊனமுற்றோர் சட்டப்படிப்பில் பட்டம் பெற்றிருக்க வேண்டும்.



★ பார் கவுன்சிலில் உறுப்பினராக பதிவு செய்துள்ளவராக இருத்தல் வேண்டும்.

★ ஆண்டு வருமானம் ரூ.50,000க்குள் இருக்க வேண்டும்.

**அணுக வேண்டிய அலுவலர் :**

மாவட்ட ஊனமுற்றோர் மறுவாழ்வு அலுவலர்

**22. மூன்று சக்கர வண்டி வழங்குதல்**

**அளிக்கப்படும் உதவி :**

★ 12 முதல் 16 வயது வரை சிறிய மூன்று சக்கர வண்டி.

★ 16 முதல் 65 வயது வரை பெரிய மூன்று சக்கர வண்டி.

**தகுதி :**

★ இரண்டு கால்களும் செயல் இழந்து கைகளால் மட்டும் இயங்கக் கூடிய நிலை

★ வயது 12 முதல் 65 வரை, வருமானம் ரூ.30,000க்குள்

**அணுக வேண்டிய அலுவலர் :**

மாவட்ட ஊனமுற்றோர் மறுவாழ்வு அலுவலர்

**23. காதொலிக் கருவி**

**அளிக்கப்படும் உதவி :**

காதொலிக் கருவி

**தகுதி :**

வயது மூன்று முதல் 70 வரை,
வருமானம் ரூ.30,000க்குள்

**அணுக வேண்டிய அலுவலர் :**

மாவட்ட ஊனமுற்றோர் மறுவாழ்வு அலுவலர்

**சூரிய ஒளியால் சக்தி பெறும் மின்கலம்**

**அளிக்கப்படும் உதவி :**

சூரிய ஒளி மின்கலம்

**தகுதி :**

★ காதொலிக் கருவி உபயோகப்படுத்துபவர்களாக இருத்தல் வேண்டும்.

★ பள்ளி மாணவ, மாணவியருக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

**அணுக வேண்டிய அலுவலர் :**

மாவட்ட ஊனமுற்றோர் மறுவாழ்வு அலுவலர்

### 25. கடும் ஊனமுற்றவர்களுக்கான மாதாந்திர பராமரிப்பு உதவித் தொகை

**அளிக்கப்படும் உதவித் தொகை :**

மாதம் ரூ.150

**தகுதி :**

★ மனநிலை பாதிக்கப்பட்டவர்கள்

★ மூளை வளர்ச்சி குன்றியவர்கள்

★ கடும் உடல் ஊனமுற்றவர்கள் (ஊனத்தின் அளவு 75% மேல்)

★ குடும்ப (பெற்றோர்கள்/பாதுகாவலர்கள்) ஆண்டு வருமானம் ரூ.15,000

★ மாவட்ட தேர்வுக்குழு மூலம் தேர்வு செய்யப்படும் நபர்களுக்கு மட்டுமே உதவித் தொகை வழங்கப்படும்.

**அணுக வேண்டிய அலுவலர் :**

மாவட்ட ஊனமுற்றோர் மறுவாழ்வு அலுவலர்

### 26. கண் பார்வையற்றவர்களுக்கு கருப்புக் கண்ணாடி, ஊன்றுகோல் வழங்கும் திட்டம்

**அளிக்கப்படும் உதவி :**

கருப்புக் கண்ணாடி, மடக்கு ஊன்றுகோல்

**தகுதி :**

★ இரண்டு கண்களும் பார்வையில்லாமை

★ வயது வரம்பு இல்லை

★ ஆண்டு வருமானம் ரூ.30,000க்குள்

**அணுக வேண்டிய அலுவலர் :**

மாவட்ட ஊனமுற்றோர் மறுவாழ்வு அலுவலர்

### 27. கண் பார்வையற்றோருக்குப் பிரெய்லி கைக்கடிகாரம் வழங்கும் திட்டம்

**தகுதி :**

★ வருமானம் ரூ.24,000க்குள் இருக்க வேண்டும்

★ சுய தொழில் செய்பவராகவோ, அமைப்பு சாரா நிறுவனங்களில் வேலை செய்பவராகவோ இருக்கலாம்



**அளிக்கப்படும் உதவி :**

பிரெய்லி கைக்கடிகாரம்

**அணுக வேண்டிய அலுவலர் :**

மாவட்ட ஊனமுற்றோர் மறுவாழ்வு அலுவலர்

### 28. பார்வையற்றோருக்கு வேலை வாய்ப்பு அற்றோர் நிவாரணத் தொகை

★ பள்ளி இறுதி வகுப்பிற்கு கீழ் தகுதி உள்ளவர்களுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.200

★ புதுமுக வகுப்பு மற்றும் மேல்நிலைக் கல்வி தேர்ச்சி பெற்றவர்களுக்கு ரூ.250

★ பட்டதாரிகள் மற்றும் அதற்கு மேல் கல்வித் தகுதி உள்ளவர்கள் ரூ.300

**தகுதி :**

★ பார்வையற்றவராக இருக்க வேண்டும்.

★ வேலை வாய்ப்பு கோரி வேலை வாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்து ஓராண்டிற்கு மேல் ஆகியிருக்க வேண்டும்.

★ பார்வையற்றவரின் வயது 18க்கு மேல் 40க்குள் இருத்தல் வேண்டும். தாழ்த்தப்பட்ட வகுப்பினர் மற்றும் மலை சாதியினர் வயது 45 வரை

**அணுக வேண்டிய அலுவலர் :**

மாவட்ட ஊனமுற்றோர் மறுவாழ்வு அலுவலர்

**29. தசைப் பயிற்சி**

தசைப் பயிற்சிகள் இலவசமாக செய்யப்படுகிறது.

**தகுதி :**

அறுவை சிகிச்சை செய்து கொண்டவராதவோ அல்லது அறுவை சிகிச்சை தேவைப்படாத நபராகவோ இருத்தல் வேண்டும். மருத்துவ சான்றிதழ் இணைக்க வேண்டும்

**அணுக வேண்டிய அலுவலர் :**

மாவட்ட ஊனமுற்றோர் மறுவாழ்வு அலுவலர்

**30. கால்தாங்கி ஊன்றுகோல், மூன்று சக்கர சைக்கிள், சக்கர நாற்காலி இலவசமாக வழங்குதல்**

**தகுதி :**

★ முகாம் நடத்த தேர்ந்தெடுக்கப்பட்ட பகுதியைச் சேர்ந்தவராக இருத்தல் வேண்டும்.

★ மருத்துவச் சான்றிதழ் மற்றும் வருமானச் சான்றிதழ் இணைக்க வேண்டும்.



**அணுக வேண்டிய அலுவலர் :**

மாவட்ட ஊனமுற்றோர் மறுவாழ்வு அலுவலர்

**31. முதுகுத் தண்டுவடம் பாதிக்கப்பட்டவர்களுக்கான நிதியுதவி**

**அளிக்கப்படும் உதவித் தொகை :**

விபத்தினாலோ வேறு காரணங்களினாலோ நிரந்தரமாக முதுகுத் தண்டுவடம் பாதிக்கப்பட்டு பணிக்கு செல்லும் நபர்களுக்கு உதவுவதற்காக மாதம் ரூ.100 வீதம் வழங்கப்பட்டு வருகிறது.

**தகுதி :**

★ ஊனமுற்ற நபருக்கு முதுகுத் தண்டுவடம் பாதிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

★ ஆண்டு வருமானம் ரூ.12,000க்கு மிகாமல் இருக்க வேண்டும். வருமானச் சான்றிதழ், மருத்துவச் சான்றிதழ் இணைக்க வேண்டும்.

**அணுக வேண்டிய அலுவலர் :**

மாவட்ட ஊனமுற்றோர் மறுவாழ்வு அலுவலர்

**32. பார்வையற்றோருக்கு ஆசிரியர் பணியிடங்களில் இட ஒதுக்கீடு**

கல்வி நிறுவனங்களில் எழும் ஆசிரியர் பணியிடங்களில் காலி இடங்களில் இரண்டு சதவிகித பணியிடங்கள் பார்வையற்றோருக்கென ஒதுக்கப்பட்டுள்ளது.

**தகுதி :**

★ தகுதி வாய்ந்த பார்வையற்றோர் ஆசிரியர் பணிகளுக்கென வேலை வாய்ப்பகத்தில் பதிவு செய்திருத்தல் வேண்டும்.

★ பார்வையற்ற நபர் வேலை வாய்ப்பகத்தில் நடப்பு பதிவேட்டில் இடம் பெற்றிருத்தல் வேண்டும்.

★ நிறுவனங்கள் கோரும் சான்றிதழ்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

**அணுக வேண்டிய அலுவலர் :**

மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர்

**33. கல்வி நிறுவனங்களில் எழும் ஆசிரியர் பணியில்லாத பணியிடங்களைச் செவித்திறன் குறையுடையோருக்கு ஒதுக்கீடு செய்தல்**

அரசு மற்றும் அரசு நிதியுதவி பெறும் கல்வி நிறுவனங்களில் எழும் ஆசிரியர் பணியல்லாத பணி இடங்களில் மொத்த எண்ணிக்கையில் இரண்டு சதவீத பணி இடங்களைச் செவித்திறன் குறையுடையோரைக் கொண்டு நிரப்ப வழிவகை செய்யப்பட்டுள்ளது.

**தகுதி :**

★ பதவிக்குத் தேவையான கல்வித் தகுதிகள் பெற்றிருத்தல் அவசியம்.

★ வேலை வாய்ப்பு அலுவலகத்தின் பதிவேட்டில் இடம் பெற்றிருத்தல் வேண்டும்.

★ சம்பந்தப்பட்ட நிறுவனத்தால் கோரப்படும் சான்றிதழ்கள் இணைக்கப்பட வேண்டும்.

**அணுக வேண்டிய அலுவலர் :**

மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர்.




### 34. உடல் ஊனமுற்றோருக்கு கணினிப் பயிற்சி அளித்தல்

**அளிக்கப்படும் உதவி :**

கணினிப் பயிற்சி 3 மாதம் இலவசமாக வழங்கப்படும். பயிற்சி உதவித் தொகை மாதம் ரூ.300 வழங்கப்படும்.

**தகுதி :**

★ மேல்நிலைக் கல்வியில் தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும்.

★ உடல் ஊனமுற்றோர் அடையாள அட்டை நகல், மேல்நிலை வகுப்புச் சான்றிதழ் நகல் ஆகியன சமர்ப்பிக்க வேண்டும்.

**அணுக வேண்டிய அலுவலர் :**

சம்பந்தப்பட்ட மாவட்ட ஊனமுற்றோர் மறுவாழ்வு அலுவலர்

### 35. உடல் ஊனமுற்றோருக்கு ஆய்வுக்கூட தொழில்நுட்பப் பிரிவில் பயிற்சியளித்தல்

**அளிக்கப்படும் உதவி :**

ஆய்வுக்கூட தொழில்நுட்பப் பயிற்சி, எக்ஸ்ரே, ஈசிஜி, ஈஈஜி ஆகிய பிரிவுகளில் ஓராண்டுப் பயிற்சி இலவசமாக அளிக்கப்படும்.

பயிற்சி உதவித்தொகையாக மாதம் ரூ.300 வீதம் ஓராண்டிற்கு வழங்கப்படும்.

**தகுதி :**

★ மேல்நிலைக் கல்வியில் விஞ்ஞானப் பிரிவில் பயின்று தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும்.

★ உடல் ஊனமுற்றோர் அடையாள அட்டை நகல், மேல்நிலை வகுப்புச் சான்றிதழ் நகல் ஆகியன சமர்ப்பிக்க வேண்டும்.

**அணுக வேண்டிய அலுவலர் :**

சம்பந்தப்பட்ட மாவட்ட ஊனமுற்றோர் மறுவாழ்வு அலுவலர்கள்

### 36. கை, கால் ஊனமுற்றோர் மற்றும் செவித்திறன் குறையுடையோருக்கு மோட்டார் வாகன பராமரிப்புப் பிரிவில் பயிற்சியளித்தல்

மோட்டார் வாகன பராமரிப்பில் இலவசமாக ஓராண்டு காலம் சென்னையில் பயிற்சியளிக்கப்படும்.

**தகுதி :**

★ 10ஆம் வகுப்பு தேறிய/தவறிய கை, கால் ஊனமுற்ற, செவித்திறன் குறையுடைய நபர்கள்.

★ ஊனமுற்றோர் அடையாள அட்டை, பத்தாம் வகுப்புச் சான்றிதழ் ஆகியவற்றின் நகலை சமர்ப்பித்தல் வேண்டும்.

**அணுக வேண்டிய அலுவலர் :**

சம்பந்தப்பட்ட மாவட்ட ஊனமுற்றோர் மறுவாழ்வு அலுவலர்கள்

### 37. இலவச செயற்கைக் கால் (அ) கை வழங்கும் திட்டம்

ரூ.2000 மதிப்புள்ள செயற்கை கை (அ) கால் இலவசமாக, அந்தந்த மாவட்ட ஊனமுற்றோர் மறுவாழ்வு அலுவலகங்களின் மூலம் பொருத்தப்படுகிறது.

**தகுதி :**

★ முழுவதுமாக கை அல்லது கால் இழந்தவர்களாக இருத்தல் வேண்டும்.

★ குடும்ப ஆண்டு வருமானம் ரூ.12,000க்கு மிகாமல் இருத்தல் வேண்டும்.

**அணுக வேண்டிய அலுவலர் :**

சம்பந்தப்பட்ட மாவட்ட ஊனமுற்றோர் மறுவாழ்வு அலுவலர்கள்

★

இந்திய அரசு, தேசிய சமூகநல உதவித்திட்டம் என்ற புதிய திட்டத்தை 1995–ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 15–ஆம் நாள் முதல் அறிமுகப்படுத்தியுள்ளது. மத்திய நிதியுதவி அடிப்படையில் பின்வரும் நலத்திட்டங்களைத் தேசிய சமூகநல உதவித் திட்டத்தின் கீழ் அறிமுகப்படுத்தியுள்ளது.

**திட்டத்தின் பெயர் :**

**1. தேசிய முதியோர் ஓய்வூதியத் திட்டம்**

**அனுமதிக்கப்பட்ட தொகை :**

மாதம் ஒன்றுக்கு ரூ.75.



**தகுதி :**

விண்ணப்பதாரர் (ஆண்/பெண்) 65 வயது அதற்கு மேற்பட்டவராக, வருமானமில்லாத தொடர் வருமானம் அல்லது குடும்பத்திலுள்ள இதர நபர்கள் மூலமாக எந்தவித நிதியுதவியும் பெறாத ஆதரவற்றவர்கள்.

**அணுக வேண்டிய அலுவலர் முகவரி :**

தனி வட்டாட்சியர் (நலிந்தோர் நலத்திட்டம்)

**2. தேசிய குடும்ப உதவித் திட்டம்**

**அனுமதிக்கப்பட்ட தொகை :**

இயற்கை இடர்பாடுகளால் ஏற்படும் இழப்பிற்கு ரூ.10,000, விபத்தினால் இறக்க நேரிடும் குடும்பத் தலைவருக்கு ரூ.10,000.

**தகுதி :**

வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழும் நபர்களுக்கு ஒரே தவணைத் தொகை.

**அணுக வேண்டிய அலுவலர் :**

தனி வட்டாட்சியர் (நலிந்தோர் நலத்திட்டம்)

**3. தேசிய பேறுகால உதவித் திட்டம்**

**அனுமதிக்கப்பட்ட தொகை :**

உயிருடன் பிறக்கும் முதல் இரண்டு குழந்தைகளின் பேறு காலத்திற்கு தலா ரூ.500.

**தகுதி :**

வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழும் 19 வயது அதற்கு மேல் வயதுடைய பேறுகால மகளிரின் முதல் இரண்டு உயிருடன் பிறக்கும் குழந்தைகளுக்கு.

**அணுக வேண்டிய அலுவலர் :**

மாவட்ட சமூக நல அலுவலர்

★ ★ ★

## பள்ளிகள்

**பள்ளிகளின் தற்போதைய நிலவரம் :**

**1. தொடக்கப்பள்ளிகள்**

ஆதிதிராவிடர் ------------------- 785

பழங்குடியினர் ------------------- 192

மொத்தம் ----------------------- 977

**2. நடுநிலைப்பள்ளிகள்**

ஆதிதிராவிடர் ------------------- 127

பழங்குடியினர் ------------------- 32

மொத்தம் ----------------------- 159

**3. உயர்நிலைப் பள்ளிகள்**

ஆதிதிராவிடர் ------------------- 49

பழங்குடியினர் ------------------- 9

மொத்தம் ----------------------- 58

**4. மேல்நிலைப் பள்ளிகள்**

ஆதிதிராவிடர் ------- ------------ 56

பழங்குடியினர் ------------------- 9

மொத்தம் ----------------------- 65

இப்பள்ளிகளில் சுமார் 2.44 இலட்சம் மாணவர்கள் பயிலுகின்றனர். இப்பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு இலவசமாக அளிக்கப்படும் சலுகைகள் பின்வருமாறு :



**நலத்திட்டத்தின் பெயர் :**

**1. சிலேட்டுகள் வழங்குதல்**

**தகுதி :**

1ஆம் வகுப்பு படிக்கும் அனைத்து மாணவ, மாணவிகளுக்கும்

**அணுக வேண்டியவர் :**

பள்ளித் தலைமை ஆசிரியர்

**2. பாடப்புத்தகங்கள் வழங்குதல்**

**தகுதி :**

1 முதல் 10–ஆம் வகுப்பு வரை அனைத்து மாணவ, மாணவிகளுக்கும்

**அணுக வேண்டியவர் :**

பள்ளித் தலைமை ஆசிரியர்



**3. நோட்டுப் புத்தகங்கள் வழங்குதல்**

**தகுதி :**

3 முதல் 10–ஆம் வகுப்பு வரை அனைத்து மாணவ, மாணவிகளுக்கும்

**அணுக வேண்டியவர் :**

பள்ளித் தலைமை ஆசிரியர்கள்



## 4. சீருடைகள் வழங்குதல்

**தகுதி :**

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் பள்ளிகளில் 1 முதல் 12–ஆம் வகுப்பு வரை அனைத்து மாணவ, மாணவிகளுக்கும்

**அணுக வேண்டியவர் :**

பள்ளித் தலைமை ஆசிரியர்

## 5. சிறப்பு வழிகாட்டி (வினா) வழங்குதல்

**தகுதி :**

பத்தாம் வகுப்பு மற்றும் 12–ஆம் வகுப்பு பொதுத்தேர்வு எழுதும் அனைத்து மாணவ, மாணவிகளுக்கும்

**அணுக வேண்டியவர் :**

பள்ளித் தலைமை ஆசிரியர்

**மாணவர் இல்லங்கள் :**

★ ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணவ, மாணவியர் தங்கள் மேற்படிப்பைத் தொடர உதவும் பொருட்டு மாணவர் விடுதிகள் நடத்தப்பட்டு வருகின்றன. இன்றளவில் சுமார் 78,983 மாணவர்களின் நலனுக்காக 1075 ஆதிதிராவிடர் நல விடுதிகள் நடத்தப்படுகின்றன. இதில் மாணவிகளுக்காகவே 344 விடுதிகள் உள்ளன.

★ இவற்றைத் தவிர 26 விடுதிகள் பழங்குடியின மாணவ, மாணவியர் மேம்பாட்டிற்காக இயங்கி வருகின்றன. இவற்றில் 1285 மாணவ, மாணவியர்கள் தங்கிப் பயிலுகின்றனர். ஆண்டுதோறும் புதிய விடுதிகள் திறக்கப்படுகின்றன. இம்மாணவர்களின் கல்வி முன்னேற்றத்திற்காக பகுதி நேர ஆசிரியர்கள் மூலம் பயிற்சி அளிக்கப்படுகிறது.

★ இந்த விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவர்களுக்குப் பின்வரும் சலுகைகள் அளிக்கப்படுகின்றன.

## 6. விடுதி

**தகுதி :**

மாணவர்கள் 4ஆம் வகுப்பு முதலும் மாணவியர் 3ஆம் வகுப்பு முதலும் தொடர்ந்து தங்கி பயில விடுதியில் அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கைக்குட்பட்டு சேர்க்கப்படுவார்கள்.

**அணுக வேண்டியவர்கள் :**

மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர் அல்லது விடுதிக் காப்பாளர்

## 7. இலவச உணவு

**தகுதி**

ஆண்டு வருமானம் ரூ.50,000க்குள் இருக்க வேண்டும்

**அணுக வேண்டியவர்கள் :**

மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர் அல்லது விடுதிக் காப்பாளர்

## 8. உறைவிடம்

**தகுதி :**

பள்ளிக்கும் வீட்டிற்கும் 5 கி.மீ.க்கும் மேல் இருக்க வேண்டும். (இது மாணவிகளுக்குப் பொருந்தாது)

## 9. சீருடை

**தகுதி :**

12–ஆம் வகுப்பு வரை அனைத்து மாணவ, மாணவியருக்கும் வழங்கப்படுகிறது.



**அணுக வேண்டியவர்கள் :**

விடுதிக் காப்பாளர்

**10. வழிகாட்டி**

**தகுதி :**

★ 10 மற்றும் 12–ஆம் வகுப்பு மாணவ, மாணவிகளுக்கு சிறப்பு வழிகாட்டியும் வழங்கப்படுகிறது.

★ இத்துறை சார்ந்த பள்ளிகளில் 10 மற்றும் 12–ஆம் வகுப்பு பயிலும் மாணவ, மாணவியர்

**அணுக வேண்டியவர்கள் :**

விடுதிக் காப்பாளர்

## கல்வி உதவித் தொகைகள் :

கல்வித்துறை மற்றும் அனைத்து அங்கீகாரம் பெற்ற பள்ளிகளிலும் பயிலும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மாணவ, மாணவிகளுக்கும் பின்வரும் கல்வி உதவித் தொகைகள், சலுகைகள் வழங்கப்படுகின்றன.

**11. கல்விக் கட்டணச் சலுகை**

**தகுதி :**

1. ஆங்கில பயிற்சி மொழிக் கல்வியில் 6 முதல் 12ஆம் வகுப்பு வரை பயிலும் ஆதிதிராவிடர் / மதம் மாறிய ஆதிதிராவிடர்கள் மற்றும் பழங்குடியினர்.
2. போஸ்ட் மெட்ரிக் கல்வி பயிலும் மாணவர்கள்.
3. பெற்றோர் ஆண்டு வருமானம் ரூ.50,920–க்குள் சுயநிதி கல்வியில் இலவச இடஒதுக்கீட்டில் பயிலும் ஆதிதிராவிடர்/ பழங்குடியினர்/மதம் மாறிய கிருத்துவ ஆதிதிராவிட மாணவர்கள்.

**அணுக வேண்டியவர் :**

பள்ளித் தலைமை ஆசிரியர்/கல்லூரி முதல்வர்/ மாவட்ட ஆட்சியர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர்/ஆதிதிராவிடர் நல இயக்குநர்

**12. சிறப்புக் கட்டணம் மற்றும் பத்தாம் வகுப்புத் தேர்விற்கான தேர்வுக் கட்டணம் வழங்குதல் (இத்தொகை நேரடியாகத் தலைமையாசிரியருக்கும் அரசுத் தேர்வுத் துறைக்கும் வழங்கப்படும்)**

**தகுதி :**

அனைத்து ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணவ, மாணவியர். வருமான வரம்பு இல்லை.

**அணுக வேண்டியவர்கள் :**

தலைமை ஆசிரியர்கள் / மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர்

**13. இலவசமாக நோட்டுப் புத்தகம், பாடப்புத்தகம் வழங்குதல்**

**தகுதி**

★ அனைத்து ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணவர்கள், 9 மற்றும் 10–ஆம் வகுப்பு வரை பாடப்புத்தகம்.

★ 4 முதல் 10–ஆம் வகுப்பு வரை நோட்டுப் புத்தகம்

**அணுக வேண்டிய அலுவலர் :**

மாவட்டக் கல்வி அலுவலர் / பள்ளித் தலைமை ஆசிரியர் மூலமாக மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர்

**14. தூய்மையற்ற தொழில் புரிவோர் குழந்தைகளுக்கு உதவித்தொகை வழங்குதல்**

**தகுதி :**

உலர் கழிப்பிடங்களைச் சுத்தம் செய்வோர், தெருப்பெருக்கும் தொழில் செய்பவர், தோல் உரிப்போர் மற்றும் பதனிடுவோர் முதலியவர்களின் குழந்தைகள். சாதி, மத, பேதமில்லை.

**அணுக வேண்டிய அலுவலர் :**

மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர்

**15. கல்வி உதவித் தொகை**

**அ.பெற்றோருடன் தங்கிப் படிப்பவர்கள்**

1–5–ஆம் வகுப்பு மாதம் ரூ.25
(பத்து மாதங்களுக்கு)



6–8–ஆம் வகுப்பு மாதம் ரூ.40
(பத்து மாதங்களுக்கு)

9–10–ஆம் வகுப்பு மாதம் ரூ.50
(பத்து மாதங்களுக்கு)

இது தவிர ஆண்டு ஒன்றுக்கு ரூ.500 ஒட்டுமொத்த மானியமாக வழங்கப்படும்.

**ஆ. மாணவர்கள் இல்லங்களில் தங்கிப்படிப்பவர்கள்**

3–8–ஆம் வகுப்பு மாதம் ரூ.200
(பத்து மாதங்களுக்கு)

9–10–ஆம் வகுப்பு மாதம் ரூ.250
(பத்து மாதங்களுக்கு)

இதுதவிர அனைவருக்கும் ஆண்டுதோறும் ஒட்டுமொத்த மானியமாக ரூ.500 வழங்கப்படும்.

**தகுதி :**

வருமான வரம்பு இல்லை

**அணுக வேண்டியவர் :**

மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர்

## கல்லூரி மற்றும் பத்தாம் வகுப்பு பள்ளி படிப்புக்கு மேற்பட்ட படிப்புக்கான உதவித் தொகை

**16. மைய அரசு கல்வி உதவித் தொகை : கல்லூரிக்குச் செலுத்த வேண்டிய அனைத்துக் கட்டணம் மற்றும் பராமரிப்புக்கு உதவித் தொகை வழங்கப்படும்.**

**தகுதி :**

11–ஆம் வகுப்பும் அதற்கு மேலும் படிக்கும் ஆதிதிராவிடர் இந்து மற்றும் பழங்குடியின மாணவ, மாணவியர் ஆண்டு வருமான வரம்பு ரூ.60,965.

**அணுக வேண்டியவர்கள் :**

பள்ளித் தலைமை ஆசிரியர் / கல்லூரி முதல்வர் / மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர்.

**17. பராமரிப்புத் தொகை பெற்றோருடன் தங்கிப்படிப்பவர்களுக்கு மாதம் ரூ.90 முதல் ரூ.190 வரை**

**தகுதி :**

விடுதி மாணவர்களுக்கு மாதம் ரூ.150 முதல் ரூ.425 வரை.

**அணுக வேண்டியவர்கள் :**

மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர்

## மாநில அரசின் சிறப்புக் கல்வி

### உதவித் தொகை

**18. பள்ளி மற்றும் கல்லூரிக்குக் கட்ட வேண்டிய கட்டணம், தேர்வுக் கட்டணம், விடுதி மாணவர்களுக்கும், வெளி மாணவர்களுக்கும் படிப்பு உதவித் தொகை வழங்கப்படும்.**

**தகுதி :**

மைய அரசு திட்டத்தில் பயன்பெற இயலாதவர்கள்/ மதம் மாறிய கிருத்துவ ஆதிதிராவிடர்கள் (ஆண்டு வருமான வரம்பு ரூ.50,000க்குள்)

**அணுக வேண்டியவர்கள் :**

தலைமை ஆசிரியர்கள் / கல்லூரி முதல்வர் / மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர்

## இலவச கல்வித் திட்டம்

**19. பிளஸ்–1, பிளஸ்–2 மற்றும் பகல் நேர கல்லூரியில் இளங்கலை / அறிவியல் / வணிகவியல் பட்டப்படிப்புக்கு கல்லூரிக்குச் செலுத்த வேண்டிய சிறப்புக் கட்டணம், தேர்வுக் கட்டணங்கள் வழங்கப்படும்.**

**தகுதி :**

மேற்குறிப்பிட்ட இரு திட்டங்களில் பயன்பெற இயலாதவர்கள் / பிளஸ்–1 முதல் பட்டப்படிப்பு வரை பகல் நேர கல்லூரிகளில் படிப்பவர்கள். இத்திட்டத்தில் வருமான வரம்பு கிடையாது.

**அணுக வேண்டியவர்கள் :**

தலைமை ஆசிரியர்கள் / கல்லூரி முதல்வர் / மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர்

**20. பட்டப்படிப்பு / பட்ட மேற்படிப்பு தொழில் படிப்பில் சேரும் ஆதிதிராவிடர் / பழங்குடியினர் மாணவர்களுக்கு நுழைவுக் கட்டணம், பதிவுக் கட்டணம் செலுத்துவதில் இருந்து விலக்கு அளித்தல்**

**தகுதி :**

ஆதிதிராவிடர்/ பழங்குடியினர் மதம் மாறிய கிருத்துவ ஆதிதிராவிடர் மாணவர்கள்




**அணுக வேண்டியவர்கள் :**

மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் / ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநர், சென்னை–5

**21. வெளிநாட்டில் மேல்படிப்பினை தொடரும் ஆதிதிராவிடர் பழங்குடியினர் மாணவர்களுக்கு மாநில அரசு உதவித்தொகை வழங்குதல்**

**தகுதி :**

1. ஆதிதிராவிடர் / பழங்குடியினர் / மதம் மாறிய கிருத்துவ ஆதிதிராவிட மாணவர்கள்
2. ஆண்டு வருமானம் ரூ.10,000க்குள்
3. வயது வரம்பு 40க்குள்
4. குடும்பத்தில் ஒருவர்

**அணுக வேண்டியவர் :**

ஆதிதிராவிடர் நல இயக்குநர், சென்னை–5

**22. பட்டயக் கணக்கர் பயிற்சி : பட்டயக் கணக்கர் பயிற்சி பெற மூன்றாண்டுகளுக்குப் பராமரிப்பு செலவு கல்விக்கான கட்டணம் முதலியன வழங்கப்படும்.**

**தகுதி :**

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் / மதம் மாறிய கிருத்தவ ஆதிதிராவிடர். வருமான வரம்பு ரூ.50,000

**அணுக வேண்டியவர் :**

ஆதிதிராவிடர் நல இயக்குநர், சென்னை–5

## கடன் உதவித்தொகை

**23. விடுதிகளில் தங்கிப் படிக்கும் மாணவர்களுக்குக் கடன் உதவித் தொகை வழங்கப்படும். இந்தத் தொகை படித்து முடித்த மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு அல்லது வேலையில் சேர்ந்த ஒரு ஆண்டிற்குப் பிறகு இது எது முந்தியதோ அதற்குள் திரும்பச் செலுத்த வேண்டும். வட்டி இல்லை. வழங்கப்படும் தொகை ரூ.6,500 முதல் 7,000 வரை (ஆண்டுக்கு)**

**தகுதி :**

கல்லூரியுடன் இணைநத விடுதியில் தங்கிப் படிக்கும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணவ, மாணவியர்.

பெற்றோர் ஆண்டு வருமானம் ரூ.50,000.

சான்றுறுதி அலுவலரின் முன்னிலையில் ஒப்பந்த படிவத்தில் கையெழுத்திட வேண்டும். +2 மற்றும் பட்டப்படிப்பில் பெற்ற மதிப்பெண் அடிப்படையில் கல்விக்கான உதவித்தொகை வழங்கப்படும்.

**அணுக வேண்டியவர்கள் :**

கல்லூரி முதல்வர் மூலம் மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர்

## புத்தக வங்கி

**24. பொறியியல் / மருத்துவம் / கால்நடை மருத்துவம் / வேளாண்மை / பாலிடெக்னிக் போன்ற கல்விக்குத் தேவையான புத்தகங்கள் படிப்புக்கு ஒரு செட்**
**இரு மாணவர்களுக்கு என்ற விகிதத்திலும், ஒரு மாணவருக்கு ஒரு செட் என்ற விகிதத்திலும் படிப்பு பிரிவுக்கு ஏற்றவாறு தொகை வழங்கப்படும். புத்தகங்கள் கல்லூரி நூலகங்களில் வைக்கப்படும். மாணவர்கள் எடுத்துப் படித்து பின்னர் திருப்பிக் கொடுக்க வேண்டும்.**

**தகுதி :**

பொறியியல் / மருத்துவம் / வேளாண்மை / கால்நடை மருத்துவம் / பட்டப்படிப்பு மற்றும் பட்ட மேற்படிப்பு / பாலிடெக்னிக் பட்டம், பட்டயம், கணக்காயர், எம்.பி.ஏ., எம்.சி.ஏ., போன்ற படிப்பு பயின்று மைய அரசு உதவித் தொகை பெறும் மாணவர்கள்.




**அணுக வேண்டியவர் :**

கல்லூரி முதல்வர்கள்

## ஊக்கப் பரிசுகள்

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணவர்களிடையே மதிப்பெண்கள் பெறுவதில் போட்டி மனப்பான்மையை ஏற்படுத்தி அவர்களின் கல்வித்தரத்தை உயர்த்த பல ஊக்கப்பரிசுகள் அளிக்கப்படுகின்றன. அவற்றின் விவரம் வருமாறு:

### 25. மாநில அளவில் முதல் மதிப்பெண்

**பிளஸ்–2 தேர்வு ரூ.25,000**

**பத்தாம் வகுப்பு தேர்வு ரூ.10,000**

**தகுதி :**

முதல் மதிப்பெண் பெற்ற ஒரு மாணவர் மற்றும் ஒரு மாணவி (ஆதிதிராவிடர்/பழங்குடியினர் மதம் மாறிய ஆதிதிராவிட கிருத்தவர் ஒருங்கிணைந்த பட்டியல் மூலம்) மூன்று இனத்திலும்

**அணுக வேண்டிய அலுவலர் :**

மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர் மூலமாக இயக்குநர், ஆதிதிராவிடர் பழங்குடியினர் நலத்துறை, சென்னை–5

### 26. மாவட்ட அளவில் முதல் மதிப்பெண்

பிளஸ்–2 தேர்வு ரூ.3,000

பத்தாம் வகுப்பு முதல் பரிசு ரூ.1,000

பத்தாம் வகுப்பு 2–ஆம் பரிசு ரூ.500

பத்தாம் வகுப்பு 3–ஆம் பரிசு ரூ.300

8–ஆம் வகுப்பு முதல் பரிசு ரூ.1000

8–ஆம் வகுப்பு 2–ஆம் பரிசு ரூ.500

8–ஆம் வகுப்பு 3–ஆம் பரிசு ரூ.200

**தகுதி :**

முதல் மதிப்பெண் பெற்ற ஒரு மாணவர் மற்றும் ஒரு மாணவி (ஆதிதிராவிடர்/பழங்குடியினர் மதம் மாறிய ஆதிதிராவிட கிருத்தவர் ஒருங்கிணைந்த பட்டியல் மூலம்) 10 மற்றும் 12–ஆம் வகுப்பு தேர்வில் 60 சதவீதமும் அதற்கு மேலும் மதிப்பெண் பெற்றிருக்க வேண்டும்.

**அணுக வேண்டிய அலுவலர் :**

மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர்

## தகுதி மானிய உதவித்தொகை

**27. 10–ஆம் வகுப்பு மற்றும் 12–ஆம் வகுப்பு பொதுத் தேர்வில் 60ம் அதற்கு மேலும் மதிப்பெண் பெற்று மேல்படிப்பை தொடர்பவருக்கு ஒருமுறை மட்டும் ரூ.300 வழங்கப்படுகிறது**

**தகுதி :**

ஆதிதிராவிடர்/பழங்குடியினர் மற்றும் மதம் மாறிய ஆதிதிராவிடர்கள். பட்டப்படிப்பு/பட்ட மேற்படிப்பு / தொழிற்படிப்பு. இறுதித் தேர்வில் 60%க்கு மேல் மதிப்பெண் பெற்று ஒரே தடவையில் தேர்வு பெற்று இருக்க வேண்டும்.

**அணுக வேண்டிய அலுவலர் :**

மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் / கல்லூரிக் கல்வி இயக்குநர், சென்னை–6

## பரிசுத் தொகைத் திட்டம்

**28. பட்டப்படிப்பு / பட்ட மேற்படிப்பு மற்றும் தொழிற்கல்வி பயிலும் மாணவர்களுக்கு ஊக்கப்**




**பரிசுகள் வழங்கப்படுகின்றன. இத்தேர்வுகளில் படிப்பிற்கான கால அளவு முடித்து 60% அல்லது அதற்கு மேல் மதிப்பெண் பெற்று தேர்வு பெற்றவர்களுக்கு ரூ.2,000 முதல் ரூ.5,000 வரை பரிசாக வழங்கப்படும்**

**தகுதி :**

பட்டப்படிப்பு / பட்ட மேற்படிப்பு / தொழிற்படிப்பு இறுதித் தேர்வில் 60% சதவீதத்திற்கும் மேல் மதிப்பெண் பெற்று படிப்புக்கான கால அளவுக்குள் தேர்வு பெற்று இருக்கவேண்டும். ஆதிதிராவிடர்/ பழங்குடியினர் மதம் மாறிய ஆதிதிராவிடர்கள்

**அணுக வேண்டிய அலுவலர் :**

இயக்குநர், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, சென்னை–5

## அறிவுக்கூர்மை பரிசுத் தொகை

**29. ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் மதம் மாறிய கிருத்துவர் ஆகிய ஒவ்வொரு இனத்திலிருந்தும் ஒவ்வொரு மாவட்டத்திலும் பத்தாம் வகுப்புத் தேர்வில் முதல் இரு இடங்களைப்பெற்ற இரு மாணவர் மற்றும் இரு மாணவியர்களுக்கு மேற்படிப்பைத் தொடர அடுத்த ஆறு ஆண்டுகளுக்குப் பரிசு வழங்கப்படும். முதல் ஆண்டு ரூ.800ம் மற்ற ஐந்து ஆண்டுகளுக்கு ஆண்டு ஒன்றுக்கு ரூ.960ம் வழங்கப்படும்.**

**தகுதி :**

மாவட்டத்தில் முதல் மற்றும் இரண்டாம் மதிப்பெண் பெற்ற இரண்டு மாணவர் மற்றும் இரண்டு மாணவிகள், படிப்பைத் தொடர்ந்து படிக்க வேண்டும். வருமான வரம்பு இல்லை.



**அணுக வேண்டிய அலுவலர் :**

இயக்குநர், ஆதிதிராவிடர் நலத்துறை,
சென்னை–5

## காந்தி நினைவுப் பரிசு

**30. ஒவ்வொரு மாவட்டத்திலும் பிளஸ்–2 தேர்வில் அதிக மதிப்பெண் பெற்ற இந்து ஆதிதிராவிடர் இனத்தைச் சேர்ந்த ஒரு மாணவர் மற்றும் மாணவிக்கு இப்பரிசு வழங்கப்படும். முதல் ஆண்டு ரூ.1,500ம் தொடர்ந்து 5 ஆண்டுகளுக்கு ஆண்டுக்கு ரூ.1,000 வீதமும் வழங்கப்படும்.**

**தகுதி :**

பிளஸ்–2 தேர்வில் மாவட்டத்தில் முதல் மதிப்பெண் பெற்று படிப்பைத் தொடர வேண்டும். இந்து மதத்தைச் சேர்ந்த ஆதிதிராவிடர் (வருமான வரம்பு இல்லை)

**அணுக வேண்டிய அலுவலர் :**

இயக்குநர், ஆதிதிராவிடர் நலத்துறை,
சென்னை–5

## தகுதி வழிப் பரிசு

**31. காந்தி நினைவுப் பரிசு போன்றே இப்பரிசும் வழங்கப்படும்.**

**தகுதி :**

மதம் மாறிய ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர்

**அணுக வேண்டிய அலுவலர் :**

இயக்குநர், ஆதிதிராவிடர் நலத்துறை,
சென்னை–5

## முதலமைச்சர் தகுதிப் பரிசுத்தொகை

**32. பிளஸ்–2 தேர்வில் அதிக மதிப்பெண் பெற்ற ஆதிதிராவிடர் / பழங்குடியினர் / கிறித்துவ ஆதிதிராவிடர்களில் முதல் ஆயிரம் மாணவர்கள் மற்றும் முதல் ஆயிரம் மாணவியர்களுக்கு இப்பரிசு வழங்கப்படும். இப்பரிசு தொடர்ந்து பயின்றால் மட்டும் ஆண்டுக்கு ரூ.1,500 வீதம் ஐந்து ஆண்டுகளுக்கு வழங்கப்படும்.**

**தகுதி :**

பிளஸ்–2 தேர்வில் முதல் ஆயிரம் இடங்களுக்குள் வர வேண்டும். மேல் படிப்பைத் தொடர வேண்டும்.

**அணுக வேண்டிய அலுவலர் :**

இயக்குநர், ஆதிதிராவிடர் நலத்துறை,
சென்னை–5

## ஆதிதிராவிடர் பழங்குடியினர் பெண் குழந்தைகளுக்கு ஊக்கப் பரிசு

**33. ஆதிதிராவிடர் பெண் குழந்தைகள் படிப்பை இடையில் நிறுத்திவிடாமலிருக்க ஊக்கத் தொகை வழங்கப்படுகிறது. கீழ்க்கண்ட மாவட்டங்களில் 3 முதல் 5 வரை படிக்கும் 60,000 பெண் குழந்தைகளுக்கு ஆண்டு ஒன்றுக்கு ரூ.500 வழங்கப்படும். தர்மபுரி, திருவண்ணாமலை, விழுப்புரம், விருதுநகர், கடலூர், காஞ்சிபுரம், வேலூர், கரூர், பெரம்பலூர், நாமக்கல், சேலம், திருச்சிராப்பள்ளி, நாகப்பட்டினம் மற்றும் திருவள்ளூர் ஆகிய மாவட்டங்களில் அனைத்து பழங்குடியின மாணவிகளுக்கு இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது.**

**தகுதி :**

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் பெண் குழந்தைகள் 3 முதல் 5 வகுப்புகளில் படித்துக் கொண்டு இருக்கவேண்டும்.

**அணுக வேண்டிய அலுவலர் :**

மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர்

**34. 6–ஆம் வகுப்பு படிக்கும் 30,000 பெண் குழந்தைகளுக்கு ஆண்டுக்கு ரூ.1,000 (மாதம் ஒன்றுக்கு ரூ.100 வீதம் 10 மாதங்களுக்கு) வழங்குதல். இத்திட்டம் அனைத்து மாவட்டங்களிலும் செயல்படுத்தப்படுகிறது.**

**தகுதி :**

6–ஆம் வகுப்பில் படிக்கும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணவிகள்

**அணுக வேண்டிய அலுவலர் :**

மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர்

## வேலைவாய்ப்புக்கான சிறப்பு பயிற்சி

**35. ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். போன்ற தேர்வுகளை எழுதும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர்களுக்குப் பயிற்சி அளிக்க முன்னோடி பயிற்சி நிலையம் சென்னையில் இயங்கி வருகிறது. உணவு, தங்கும் இடம் பயிற்சி ஆகியவை இலவசமாக அளிக்கப்படுகிறது.**

**தகுதி :**

தேர்வுக்கு வருமான வரம்பு இல்லை.

**அணுக வேண்டிய அலுவலர் :**

இயக்குநர், அண்ணா மேலாண்மை நிலையம், சென்னை.

## வேலை வாய்ப்புப் பயிற்சி :

**36. ரயில்வே, எல்.ஐ.சி., வங்கிகள், தமிழ்நாடு மற்றும் மைய அரசு சர்வீஸ் கமிஷன் போன்றவைகள் நடத்தும் தேர்வுகளுக்கும் பயிற்சி அளிக்கப்படுகின்றன.**

**தகுதி :**

இவற்றிற்கான விளம்பரங்கள் செய்தித்தாள்களில் வெளிவரும். அவற்றைப் பார்த்து விண்ணப்பிக்க வேண்டும்.

**அணுக வேண்டிய அலுவலர் :**

இயக்குநர், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை, சென்னை–5

**37. மருத்துவம், பொறியியல் போன்ற நுழைவுத் தேர்வுகளுக்கு உரிய பயிற்சிகள்**

**தகுதி :**

1. வயது வரம்பு இல்லை.
2. இலவசப் பயிற்சி.
3. மூன்று முறை எழுதலாம். செய்தித்தாள்களில் விளம்பரம் வெளிவரும்.

**அணுக வேண்டிய அலுவலர் :**

இயக்குநர், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை, சென்னை–5

**38. நுழைவுத் தேர்வு எழுத விண்ணப்பம் மற்றும் பதிவுக்கட்டணங்களுக்குக் கட்டண விலக்கு**

**தகுதி :**

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மாணவர்கள். மூன்று முறை விலக்கு அளிக்கப்படும்.

**அணுக வேண்டிய அலுவலர் :**

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநர்/ அண்ணா பல்கலைக்கழகம், சென்னை–25

## பெண்களுக்கு வேலைவாய்ப்புப் பயிற்சி :

**39. கணினிப் பயிற்சி விற்பனை மற்றும் இயந்திரவியல் அடிப்படைப் பயிற்சி, காலணி தயாரித்தல், பெண்களுக்காக தச்சுத் தொழில், தையல் இயந்திர இயக்குநர் பயிற்சி, ஆடை வடிவமைத்தல், ஆடை உற்பத்தி, உடை தயாரித்தல் மற்றும் இயந்திர பூவேலை பயிற்சி, பேக்கரி, கன்பெக்ஷனரி மற்றும் ஜுஸ்**

தயாரித்தல், சேல்ஸ் மென்ஷிப், பேஷன் அப்பேரல் டிசைன்ஸ், இன்டீரியர் டிசைன் மற்றும் டெக்கரேஷன், அழகுக் கலைப்பயிற்சி, வடிவமைப்பு வெட்டுதல் முதுநிலைப் பயிற்சி, உற்பத்தி மேற்பார்வை தரக்கட்டுப்பாடு பயிற்சி, தையல் இயந்திரம் இயக்கப் பயிற்சி, செயல் அலுவலர் பயிற்சி



**தகுதி :**

ஆதிதிராவிடர் ஆக இருக்க வேண்டும். (பயிற்சிக் குறித்து செய்தித்தாள்களில் விளம்பரம் செய்யப்படும்.)

**அணுக வேண்டிய அலுவலர் :**

இயக்குநர், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, சென்னை – 5

**40. தட்டச்சு/சுருக்கெழுத்துப் பயிற்சி**

**தகுதி :**

ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் கிருத்தவ ஆதிதிராவிடர்

**அணுக வேண்டிய அலுவலர் :**

மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர்

## வழக்கறிஞர்களுக்குப் பயிற்சி

**41. பட்டம் பெற்ற வழக்கறிஞர்களுக்கு மூத்த வழக்கறிஞர்களிடம் நான்கு ஆண்டுகளுக்குப் பல்வேறு துறைகளில் பயிற்சி. பயிற்சி காலத்தில் மாதம் ரூ.750 வழங்கப்படும். பயிற்சி அளிக்கும் மூத்த வழக்கறிஞர்களுக்கு ஆண்டு ஒன்றுக்கு ஒருவருக்கு ரூ.2,500 மதிப்பூதியமாக வழங்கப்படும்.**

**தகுதி :**

இந்து ஆதிதிராவிடர். செய்தித்தாள்களில் விளம்பரம் செய்யப்படும்.

**அணுக வேண்டிய அலுவலர் :**

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநர், மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர்.

## வழக்கறிஞர்கள் தொழில் தொடங்க உதவி

**42. வழக்கறிஞர்கள் தொழில் தொடங்க கட்டிட வாடகை, புத்தகங்கள் மரச்சாமான்கள் வாங்க ரூ.5,000 மானியமாக அளிக்கப்படும்**

**தகுதி :**

இந்து ஆதிதிராவிடர்கள்

**அணுக வேண்டிய அலுவலர் :**

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநர், மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர்

**43. வழக்கறிஞர்களுக்குத் தொழில் ஆரம்பிக்க ரூ.750 மானியமாகவும் ரூ.750 கடனாகவும் நிதி உதவி**

**தகுதி :**

கிருத்துவராக மதம் மாறிய ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர்

**அணுக வேண்டிய அலுவலர் :**

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநர், மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர்

## தொழில் பயிற்சி

**44. ஆதிதிராவிடர்களுக்கென ஒரு ஐ.டி.ஐ. சிதம்பரத்தில் இயங்கி வருகின்றது**

**தகுதி :**

இந்து ஆதிதிராவிடர்

**அணுக வேண்டிய அலுவலர் :**

முதல்வர், ஐ.டி.ஐ., சிதம்பரம்

**45. சங்கராபுரத்தில் பழங்குடி மாணவர்களுக்காக ஒரு ஐ.டி.ஐ. இயங்கி வருகிறது**

**தகுதி :**

பழங்குடியினர்

**அணுக வேண்டிய அலுவலர் :**

முதல்வர், ஐ.டி.ஐ. சங்கராபுரம்,
விழுப்புரம் மாவட்டம்

## பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்கள்

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் பொருளாதார மேம்பாட்டிற்காக பல திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன. அவற்றின் விவரம் பின்வருமாறு :

**46. உழவுமாடுகள் வாங்க மானியம் அளித்தல், மானியம் ரூ.3,000 வங்கிக்கடன் ரூ.3,000**

**தகுதி :**

ஒரு ஏக்கர் புன்செய் நிலம் அல்லது நன்செய் நிலம் வைத்திருக்க வேண்டும் அல்லது குத்தகைக்குச் சாகுபடி செய்பவராக இருக்க வேண்டும். ஆண்டு வருமான வரம்பு ரூ.11,000

**அணுக வேண்டிய அலுவலர் :**

மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர்

**47. கறவை மாடுகள் வாங்க உதவி ரூ.4,000 மானியமாக அளிக்கப்படும். ரூ.8,000 கூட்டுறவுச் சங்க வங்கிகள் மூலம் கடன் தொகை அளிக்கப்படும்**




**தகுதி :**

ஆண்டு வருமான வரம்பு ரூ.11,000

**அணுக வேண்டிய அலுவலர் :**

பொது மேலாளர், பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கம்

## கல்வி குடும்பத் திட்டம்

**48. ஆதிதிராவிடர் குடும்பத்தில் ஒரு நபர் பட்டம் / பட்டயப்படிப்பு படித்திருந்தால் தொழில் தொடங்க ரூ.15,000 முதல் ரூ.50,000 வரை வழங்கப்படுகிறது.**

**தகுதி :**

தொழில் அனுபவம் பெற்று இருக்க வேண்டும். (ஆண்டு வருமானம் ரூ.12,000க்குள்) இருக்க வேண்டும்

**அணுக வேண்டிய அலுவலர் :**

மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர்

## ஆதிதிராவிடர்கள் பொருளாதார முன்னேற்றத்திற்காக தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டுவசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம் (தாட்கோ) செயல்படுத்தும் திட்டங்கள்

**49. சுயவேலை வாய்ப்புக்காக 6 மாத பயிற்சி (பயிற்சி உதவித் தொகை மாதம் ரூ.350 விதம்)**

**தகுதி :**

இந்து ஆதிதிராவிடர்

**அணுக வேண்டிய அலுவலர் :**

மாவட்ட மேலாளர், தாட்கோ

**50. தேசிய துப்புரவுத் தொழிலாளர்கள் மீட்பு மறுவாழ்வுத்திட்டம்**

**இத்திட்டம் ஒரு தேசிய திட்டமாகும். தொழில் தொடங்க திட்ட அதிகபட்ச அலகுத் தொகை ரூ.50,000. மானியம் ரூ.10,000மும், விளிம்புத் தொகை ரூ.7,500ம், வங்கிக்கடன் ரூ.32,500ம் வழங்கப்படுகிறது.**

**தகுதி :**

துப்புரவுப் பணியாளர்

**அணுக வேண்டிய அலுவலர் :**

மாவட்ட மேலாளர், தாட்கோ

**51. துப்புரவுப் பணியாளரைச் சார்ந்தவருக்குச் சுயவேலை வாய்ப்புப் பயிற்சி திட்டம் வகுக்கப்பட்டுள்ளது.**
**6 மாத காலப் பயிற்சி. மாதம் ரூ.350 பயிற்சி ஊக்கத் தொகையாக வழங்கப்படுகிறது.**

**தகுதி :**

துப்புரவுப் பணியாளர் மற்றும் அவரைச் சார்ந்தோருக்கு

**அணுக வேண்டிய அலுவலர் :**

மாவட்ட மேலாளர், தாட்கோ

## ஆதிதிராவிடர் விவசாயிகள் மேம்பாடு

**52. வடிமுனைக் குழாய்க்கிணறு அமைக்க (பாசனத்திற்கு) மானியம் ரூ.10,000, வங்கிக்கடன் ரூ.10,000**

**தகுதி :**

இந்து ஆதிதிராவிட விவசாயிகள்

**அணுக வேண்டிய அலுவலர் :**

மாவட்ட மேலாளர், தாட்கோ

**53.நீர் இறைக்கும் பம்புசெட் வாங்க 5 எச்.பி.டீசல் மானியம் ரூ.7,000 வங்கிக்கடன் ரூ.7,000**

**தகுதி :**

இந்து ஆதிதிராவிடர் விவசாயிகள்

**அணுக வேண்டிய அலுவலர் :**

மாவட்ட மேலாளர், தாட்கோ

**54. நீர் இறைக்கும் பம்புசெட் மின்மோட்டார் வாங்க மானியம் ரூ.5,250 வங்கிக்கடன் ரூ.5,250**

**தகுதி :**

இந்து ஆதிதிராவிடர் சொந்தக்கிணறு உள்ள விவசாயிகள்

**அணுக வேண்டிய அலுவலர் :**

மாவட்ட மேலாளர், தாட்கோ

**55. உழவு மாடு வாங்க மானியம் ரூ.3,000, வங்கிக்கடன் ரூ.3,000**

**தகுதி :**

இந்து ஆதிதிராவிடர் விவசாயிகள்

**அணுக வேண்டிய அலுவலர் :**

மாவட்ட மேலாளர், தாட்கோ

**56. 20 அம்சத் திட்டத்தின் கீழ் சிறுதொழில் செய்ய நிதி உதவி ரூ.1,000 (மானியம் ரூ.500, வங்கிக்கடன் ரூ.500)**

**தகுதி :**

இந்து ஆதிதிராவிடர் / பழங்குடியினர்

**அணுக வேண்டிய அலுவலர் :**

மாவட்ட மேலாளர், தாட்கோ

**57. விசைமருந்து தெளிப்பான் வாங்க (ஒரு மிதிவண்டியுடன்) மானியம் ரூ.3,000; வங்கிக்கடன் ரூ.3,000**

**தகுதி :**

இந்து ஆதிதிராவிடர்

**அணுக வேண்டிய அலுவலர் :**

மாவட்ட மேலாளர், தாட்கோ

**58. ஒரு ஜோடி மாடுடன் கூடிய டயர் வண்டி வாங்க மானியம் ரூ.9750, வங்கிக் கடன் ரூ.9750**

**தகுதி :**

இந்து ஆதிதிராவிடர்

**அணுக வேண்டிய அலுவலர் :**

மாவட்ட மேலாளர், தாட்கோ

## தொழில்முனைவோர்க்குத் தொழில் ஆரம்பிக்க உதவிகள் வழங்குதல்

**59. நிதி உதவி ரூ.7,50,000 வரை. மானியம் ரூ.25,000, விளிம்புத் தொகை தாட்கோ 20% அல்லது அதிகபட்சம் ரூ.1,25,000 மீதம் வங்கிக் கடனாக வழங்கப்படுகிறது.**

**தகுதி :**

இந்து ஆதிதிராவிடர்

**அணுக வேண்டிய அலுவலர் :**

மாவட்ட மேலாளர், தாட்கோ

**60. பெரிய திட்டங்கள் மற்றும் போக்குவரத்து வாகனங்கள் வாங்குவது உட்பட ரூ.30 இலட்சம் வரை (மானியம் ரூ.25,000, விளிம்புத் தொகை ரூ.12,500 மீதமுள்ள தொகை தேசிய பட்டியலினத்தோர் நிதி மேம்பாட்டுக் கழகம், புதுதில்லி அளிக்கும்) மனுதாரர் பங்குத் தொகைரூ.10.00 இலட்சம் வரை 5%ம் ரூ.10 இலட்சத்திற்கு மேல் 8% ஆகும்.**

**தகுதி :**

இந்து ஆதிதிராவிடர்

**அணுக வேண்டிய அலுவலர் :**

மாவட்ட மேலாளர், தாட்கோ

## வீட்டுவசதி மற்றும் இதர திட்டங்கள்

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் குடும்பங்களுக்கும் அவர்கள் வாழும் பகுதிகளுக்கும் தேவையான அடிப்படை வசதிகள்அனைத்தும் இத்துறை மற்றும் பல்வேறு துறைகளின்மூலம் செய்து தரப்படுகின்றது. இத்திட்டங்கள்குறித்த விவரங்கள் பின்வருமாறு:

**61. இலவசமாக வீட்டுமனைகள் வழங்கப்படுகின்றன. கிராமப்புறத்தில் 3 சென்டும் நகராட்சிப் பகுதியில் 1.5 சென்டும் மாநகராட்சிப் பகுதியில் 1 சென்டும் வழங்கப்படும்**

**தகுதி :**

வீட்டுமனை சொந்தமாக இருக்கக்கூடாது. ஆண்டு வருமான வரம்பு ரூ.12,000. அரசுக்குச் சொந்தமான நிலத்தில் குடியிருப்பவர்களுக்கு ஆட்சேபணை அற்றவை என்றால் அந்த நிலத்திற்குப் பட்டா வழங்கப்படும்.

**அணுக வேண்டிய அலுவலர் :**

மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர் / தனி வட்டாட்சியர் (ஆதிதிராவிடர் நலம்)

## வீடுகள் கட்டித்தரும் திட்டம்

**62. இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டத்தின் கீழ் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு இலவசமாக வீடுகள் கட்டித் தரப்படுகின்றன**

**தகுதி :**

சொந்தமாக வீடற்றோர், மனைப்பட்டா வைத்திருக்க வேண்டும்.

**அணுக வேண்டிய அலுவலர் :**

ஊராட்சி மன்றத்தலைவர் / ஊராட்சி ஒன்றிய ஆணையர் / திட்ட அலுவலர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை

## குடிநீர் வசதி

**63. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் குடியிருப்புகளுக்கு குடிநீர் வசதிகள் செய்து தருதல்.**

**தகுதி :**

குடிநீர் வசதி இல்லாமை

**அணுக வேண்டிய அலுவலர் :**

செயற்பொறியாளர், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் / மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர் / ஊராட்சி ஒன்றிய ஆணையர்.

## தெருவிளக்கு

**64. தெரு மின்விளக்கு வசதி**

**தகுதி :**

தெருவிளக்கு இல்லாமை

**அணுக வேண்டிய அலுவலர் :**

பொறியாளர் தமிழ்நாடு மின்சார வாரியம் / ஊராட்சி ஒன்றிய ஆணையர் / மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர்

## ஒரு குடில் ஒரு விளக்கு

**65. கிராமப்புறத்தில் உள்ள குடிசைகளுக்கு, ஒரு குடிசைக்கு ஒரு விளக்குத் திட்டத்தின் கீழ் விளக்கு வசதி செய்து தரப்படுகிறது.**



**தகுதி :**

கிராமத்தில் உள்ள குடிசைகள்

**அணுக வேண்டிய அலுவலர் :**

பொறியாளர், தமிழ்நாடு மின்சாரவாரியம்/ ஊராட்சி ஒன்றிய ஆணையர் / மாவட்ட ஆதிதிராவிடர் நல அலவலர்

## மயானம்

**66. மயானம் மற்றும் மயானத்திற்குச் செல்லும் பாதை வசதிகள் செய்து தருதல்**

**தகுதி :**

ஆதிதிராவிடர்களுக்குத் தனியாக மயானப் பாதை இல்லாமை

**அணுக வேண்டிய அலுவலர் :**

திட்ட அலுவலர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை/ ஊராட்சி ஒன்றிய ஆணையர் / மாவட்ட ஆதிதிராவிடர் அலுவலர்

## இணைப்புச் சாலை

**67. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வசிக்கும் குடியிருப்புகளை இணைக்கும் இணைப்புச் சாலைகள் அமைத்துத் தருதல்**

**தகுதி :**

குடியிருப்புக்குச் செல்ல இணைப்புச் சாலை இல்லாமை

**அணுக வேண்டிய அலுவலர் :**

திட்ட அலுவலர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை / ஊராட்சி ஒன்றிய ஆணையர் / மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர்

## சமூகக் கூடங்கள்

**68. ஆதிதிராவிடர் குடியிருப்புகளில் திருமணம் போன்ற நிகழ்ச்சிகள் நடத்த சமூகக் கூடங்கள் கட்டித்தரப்படுகின்றன.**

**தகுதி :**

சமூகக்கூடங்கள் இல்லாமை

**அணுக வேண்டிய அலுவலர் :**

திட்ட அலுவலர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர்

## ஈமச்சடங்கு உதவி

**69. ஏழ்மை நிலைமையில் உள்ள ஆதிதிராவிடர் குடும்பத்தில் யாராவது இறந்துவிட்டால், அந்த ஈமச்சடங்கிற்கு ரூ.500 மானியமாக அளிக்கப்படும்.**

**தகுதி :**

இறந்தவரின் குடும்ப ஆண்டு வருமான வரம்பு ரூ.24,000க்குள் இருத்தல் வேண்டும்.

**அணுக வேண்டிய அலுவலர் :**

ஆணையர், ஊராட்சி ஒன்றியம்/ செயல் அலுவலர், பேரூராட்சி / பழங்குடியினர் நல அலுவலர், ஆணையர், நகராட்சி, மாநகராட்சி.

## கொத்தடிமை ஒழிப்புத் திட்டம்

**70. கொத்தடிமைகளாக அடக்கிவைக்கப்பட்டிருப்பவர்களை விடுவித்து அவர்களுக்குப் புனர்வாழ்வு அளிக்கும் வகையில் பொருளாதார மேம்பாட்டிற்கு ரூ.10,000 வரை மானியமாக அளிக்கப்படுகிறது. இதில் உடனடி**



**உதவியாக ரூ.1,000 ஒரு நபருக்கு வழங்கப்படும். பின்னர் திட்டங்கள் மூலம் ரூ.9,000 வழங்கப்படும்.**

**தகுதி :**

சாதி, மத, பேதமில்லை, விடுவிக்கப்பட்ட கொத்தடிமைகள் அனைவரும்

**அணுக வேண்டிய அலுவலர் :**

மாவட்ட ஆட்சியர், கோட்டாட்சியர், மாவட்ட ஆதிதிராவிடர் நல பழங்குடியினர் அலுவலர்

## பழங்குடியினர் நலம்

பழங்குடியினர் மேம்பாட்டிற்காக இந்தத்துறை மற்றும் பல்வேறு துறைகள் சீரிய பல திட்டங்களை செயல்படுத்தி வருகின்றன.

விழுப்புரம் கல்ராயன்மலை, திருவண்ணாமலை, ஜவ்வாதுமலை, பச்சைமலை பகுதியில் வாழும் பகுதியில் பழங்குடியின மக்களுக்குப் பின்வரும் சிறப்புத் திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன.

### தோட்டக்கலை மேம்பாடு :

**71. ரூ.1,000 மதிப்புள்ள மரக்கன்றுகள், பட்டுப்புழு உரம் இலவசமாக வழங்கப்படும்**

**தகுதி :**

பழங்குடியினர், 1 ஏக்கர் நிலம் உள்ளவர்

**அணுக வேண்டிய அலுவலர் :**

துணை / உதவி இயக்குநர், தோட்டக்கலைத்துறை

### பட்டுப்புழு வளர்ப்புத் திட்டம் :

**72. மல்பரி தோட்டம் ஏற்படுத்தவும், பட்டுப்புழு வளர்க்கவும் 50% முதல் 75% வரை மானியம் அளிக்கப்படுகிறது**

**தகுதி :**

பழங்குடியினர் 1/2 ஏக்கர் நிலம் உள்ளவர்

**அணுக வேண்டிய அலுவலர் :**

துணை / உதவி இயக்குநர், பட்டுப்புழு வளர்ப்பு

### சிறிய நீர்ப்பாசனத் திட்டம் :

**73. பழங்குடியினர் அதிகம் நிலம் வைத்திருக்கும் பகுதியில் சிறிய நீர்த்தேக்க அணை போன்றவை ஏற்படுத்தப்படும்.**

**தகுதி :**

பயன்பெறுவோரில் 50% மேல் பழங்குடியினராக இருக்க வேண்டும்.




**அணுக வேண்டிய அலுவலர் :**

செயற்பொறியாளர் (நீர்ப்பாசனம்),
பொதுப்பணித்துறை

### கால்நடை பராமரிப்பு :

**74. ஆடுகள், கறவை மாடு கன்றுகள் வாங்கி வளர்க்க மானியம் (50% முதல் 75% வரை) வழங்கப்படும். கால்நடைகளுக்கு மருத்துவ வசதி, கருவூட்டல் போன்றவைகளும் செய்து தருதல்.**

**தகுதி :**

பழங்குடியினர்

**அணுக வேண்டிய அலுவலர் :**

உதவி இயக்குநர், கால்நடை பராமரிப்புத்துறை

### நீர்த்தடுப்புப் பணிகள் :

**75. மலைச்சரிவில் உள்ள நிலத்தை நீர் அடித்துச் செல்லாமல் தடுத்து விவசாயம் செய்ய அபிவிருத்தித் திட்டங்களைச் செயல்படுத்துதல் : இவை முழுவதும் இலவசமாக செய்து தருதல்**

**தகுதி :**

நிலமுடைய பழங்குடியினர்

**அணுக வேண்டிய அலுவலர் :**

செயற்பொறியாளர், வேளாண் ,பொறியியல் துறை

### தேனீ வளர்த்தல் :

**76. தேன் சேகரிப்பது மூலம் வருமானத்தை அதிகரிக்க 10 தேன்பெட்டிகள் இலவசமாக வழங்குதல்**

**தகுதி :**

மலை, காடு பகுதிகளில் வாழும் பழங்குடியினர்

**அணுக வேண்டிய அலுவலர் :**

துணை / உதவி இயக்குநர், தமிழ்நாடு கதர் மற்றும் கிராம கைத் தொழில் வாரியம்.

### வன வளம் :

**77. வனவளத்தை அதிகரிக்கச் செடிகள் வழங்குதல் : அந்தச் செடிகளைப் பராமரிக்க (அடுத்த ஆண்டு) ஊக்கத் தொகை வழங்குதல், வனவளம் சம்பந்தப்பட்ட வேலைகளைப் பழங்குடியினரைக் கொண்டே நிறைவேற்றுதல். இதனால் பழங்குடியினருக்கு வேலைவாய்ப்பு அதிகரிக்கச் செய்தல்**

**தகுதி :**

வனப் பகுதியில் வாழும் பழங்குடியினர்

**அணுக வேண்டிய அலுவலர் :**

மாவட்ட வன அலுவலர்

### லாம்ப் சொசைட்டி :

**78. பழங்குடியினருக்கு வட்டியில்லாக் கடன் வழங்க / அவர்கள் விளை பொருட்களை நல்ல விலைக்கு விற்க / அரிசி, உப்பு, மண்ணெண்ணெய் போன்ற அத்தியாவசியப் பொருட்களை நியாயமான விலையில் வழங்க/ விவசாயத்திற்குத் தேவையான இடுபொருட்களை நியாய விலையில் விநியோகம் செய்ய பொருளாதாரத் திட்டங்களுக்குக் கடன் போன்றவை பல நோக்கு என்னும் கூட்டுறவுச் சங்கங்கள் (LAMPS) மூலம் வாங்குதல்**

**தகுதி :**

பழங்குடியினர்

**அணுக வேண்டிய அலுவலர் :**

தனி அலுவலர், பலநோக்கு கூட்டுறவுச் சங்கம்

### தெரு மின்விளக்கு :

**79. பழங்குடியினர் குடியிருப்புகளுக்குத் தெரு மின்விளக்கு அமைத்தல்**

**தகுதி :**

தெருவிளக்கு இல்லாமை

**அணுக வேண்டிய அலுவலர் :**

பொறியாளர், தமிழ்நாடு மின்சார வாரியம் / ஆணையர், ஊராட்சி ஒன்றியம்

### இணைப்புச் சாலை வசதி :

**80. பழங்குடியினர் குடியிருப்புகளுக்கு முக்கிய கிராமத்துடன் அல்லது சமவெளியுடன் இணைத்துச் சாலை அமைத்தல்**

**தகுதி :**

தற்பொழுது சாலை இல்லாதிருத்தல்

**அணுக வேண்டிய அலுவலர் :**

கோட்டப் பொறியாளர், தேசிய நெடுஞ்சாலைத்துறை

### தொகுப்பு வீடுகள் :

**81. இலவசமாக வீடுகள் கட்டித்தருதல்**

**தகுதி :**

பழங்குடியினர்

**அணுக வேண்டிய அலுவலர் :**

மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர் / ஆணையர், ஊராட்சி ஒன்றியம்

### தனி வேலைவாய்ப்பகங்கள் :

**82. பழங்குடியினர் இளைஞர்களுக்கு வேலை வாய்ப்புக்குரிய உதவிகள், ஆலோசனைகள் நல்க உதகமண்டலம் / சங்கராபுரம் / ஜவ்வாதுமலை / கொல்லிமலை ஆகிய இடங்களில் வேலைவாய்ப்பகங்கள் இயங்கி வருகின்றன.**

**தகுதி :**

பழங்குடியின இளைஞர்கள்

**அணுக வேண்டிய அலுவலர் :**

தனி வேலைவாய்ப்புக்கான ஆலோசனை மையத்திலுள்ள வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை அலுவலர், உதகமண்டலம், விழுப்புரம், திருவண்ணாமலை, நாமக்கல்

### வேலைவாய்ப்புப் பயிற்சி :

**83. போதிய கல்வி பயின்ற பழங்குடியின இளைஞர்களுக்கு வேலை வாய்ப்புப் பயிற்சி அளித்தல்**

**தகுதி :**

கல்வி பயின்ற பழங்குடியின இளைஞர்




**அணுக வேண்டிய அலுவலர் :**

பயிற்சிக்கான வழிகாட்டி மையம், சங்கராபுரம் – விழுப்புரம் மாவட்டம், உதகமண்டலம், கொல்லிமலை – நாமக்கல் மாவட்டம், ஜவ்வாதுமலை – திருவண்ணாமலை மாவட்டம்

### பெண்களுக்கு சுயவேலைவாய்ப்புப் பயிற்சி :

**84. பழங்குடியினர் பெண்கள் முன்னேற்றத்திற்காக தையல் பயிற்சி, மூங்கில் கூடை முடைதல் போன்ற பயிற்சி அளித்தல்**

**தகுதி :**

பழங்குடியினர் பெண்கள்

**அணுக வேண்டிய அலுவலர் :**

மாவட்ட சமூக நலத்துறை அலுவலர்

**85. பந்தல் அலங்காரம், சமையல் பாத்திர வாடகை, ஒலி, ஒளி அமைப்பு நிறுவனம் அமைக்க பழங்குடியின மகளிர்க்கு 10 முதல் 15 நபர்கள் கொண்ட சுயநிதி உதவி குழுவுக்காக ரூ.15 இலட்சம் வழங்கும் திட்டம்**

**தகுதி :**

பழங்குடியினர் பெண்கள்

**அணுக வேண்டிய அலுவலர் :**

மேலாண்மை இயக்குநர், தாட்கோ, சென்னை / சென்னை மாவட்ட மேலாளர், தாட்கோ



**தனிநபர் தொழில் முனைவோர் உதவித் திட்டம் :**

**86. தனியாகப் பெரிய/சிறிய அளவில் தொழில் தொடங்க விரும்பும் பழங்குடியினர்க்காகப் புதியதாக தொடங்கப்பட்டுள்ளது. திட்ட அதிகபட்ச அலகு ரூ.5 இலட்சம். உயர் அளவு மானியம் ரூ.25,000 விளிம்புத்தொகை 25% , விளிம்புத்தொகையும், மானியமும் சேர்த்து ரூ.1,25,000 க்கு மிகைப்படக் கூடாது. மானியமும், விளிம்புத்தொகையும் ரூ.1,25,000 இருக்குமெனில் வங்கிக்கடனாக ரூ.3,50,000 வழங்கப்படும்**

**தகுதி :**

பழங்குடியினர்

**அணுக வேண்டிய அலுவலர் :**

மேலாண்மை இயக்குநர், தாட்கோ, சென்னை / சென்னை மாவட்ட மேலாளர், தாட்கோ

**87. மலைவாழ் இளைஞர்களுக்குச் சிறிய போக்குவரத்து வாகனங்கள் வழங்கும் திட்டம் :**

**இத்திட்டத்தின் கீழ் ரூ. 175 இலட்சம் செலவில் ஈப்பு மற்றும் ரூ.90 இலட்சம் செலவில் 20 மினி வேன்களும் வழங்கி வாடகை மற்றம் சுற்றுலா வாகனமாக பயன்படுத்திக் கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது. ரூ.47 இலட்சம் செலவில் மலைவாழ் மக்கள் சிறிய அளவில் பால்பண்ணை, கைவினைப் பொருட்கள் உற்பத்தி செய்தல் மற்றும் ஆடு வளர்ப்புத் தொழில்கள் தொடங்கி அதன் மூலம் பயனடைய நடப்பில் இத்திட்டங்கள் 20 மாவட்டங்களில் செயற்படுத்தப்பட்டு வருகின்றன.**

**தகுதி :**

பழங்குடியினர் ஆண்கள்

**அணுக வேண்டிய அலுவலர் :**

மேலாண்மை இயக்குநர் (தாட்கோ), சென்னை / சென்னை மாவட்ட மேலாளர், தாட்கோ

★ ★ ★

## வேளாண்மை மற்றும் அதனைச் சார்ந்த திட்டங்கள்

வேளாண்மையை, முக்கிய வாழ்க்கைத் தொழிலாகக் கொண்டுள்ள ஆதிதிராவிடர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் நோக்கத்துடன் இத்திட்டம் செயல்படுத்தப்படுகின்றது. இத்திட்டத்தின் கீழ் குறிப்பாக, இந்த வகையை / பிரிவைச் சார்ந்தது என வரையறை செய்யப்படவில்லை. மாவட்ட மேலாளர்களே அந்த மாவட்டத்திற்குத் தேவையான/ அத்தியாவசியமான வேளாண் தொழிலை, அதன் தொடர்புடைய தொழிலை மேம்படுத்தும் பொருட்டு பயனாளிகளைத் தேர்வு செய்து பயன்பெறும் வகையில் கடன் வழங்க வழி செய்யப்பட்டுள்ளது.

**வேளாண்மைத் திட்டங்கள் :**

இத்திட்டத்தின் மதிப்பீடு :

அலகுத் தொகை – ரூ.6,000த்திலிருந்து ரூ.50,000 வரை உள்ளது.

மானியத்தொகை – 50% ஆகும். இது திட்டத் தொகையில் அதிகபட்சமாக ரூ.15,000த்தை உள்ளடக்கியதாக இருக்கும்.

பயனாளிகளின் பங்குத் தொகை – திட்டத் தொகையில் 10% ஆகும்.

மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் கீழ் கொடுக்கப்படுகின்ற கடன்களுக்கு வழங்கப்படுகின்ற விதிமுறைகள் மற்றும் நடவடிக்கைகள் எடுத்தாளப்படுகின்றது.

மேலும் இத்திட்டத்தின் கீழ் பின்வருமாறு இனங்கள் வகைப்படுத்தப்பட்டுள்ளன.

**5 குதிரை திறன் கொண்ட டீசல் பம்பு செட்டுகள்:**

தேவையான தகுதிகளாக, இரண்டு ஏக்கர் நிலம் சொந்தமாகவோ/குத்தகையாகவோ கொண்ட ஆதிதிராவிட விவசாயிகள் இக்கடன் பெற விண்ணப்பிக்கத் தகுதியுடையவராவர்.



**இரட்டை மாடுகளுடன் கூடிய டயர் வண்டி :**

தேவையான தகுதிகளாக, இரண்டரை ஏக்கர் (2.5 ஏக்கர்) நிலம் சொந்தமாகவோ, குத்தகையாகவோ கொண்டுள்ள ஆதிதிராவிட விவசாயிகள் இத்திட்டத்தில் விண்ணப்பம் செய்யத் தகுதியுடையவராவர்.

**சைக்கிளுடன் கூடிய விசைத் தெளிப்பான் :**

தேவையான தகுதிகளாக, நிலமற்ற ஆதிதிராவிட விவசாய கூலிகள் இத்திட்டத்தில் விண்ணப்பிக்கத் தகுதியுடையவராவர். மேலும் விசைத் தெளிப்பானைப் பயன்படுத்தும் போது மேற்கொள்ள வேண்டிய பாதுகாப்பு நடவடிக்கை அறிந்தவராக இருத்தல் வேண்டும்.

**உழவு மாடுகள்**

தேவையான தகுதிகளாக, இரண்டு ஏக்கர் நிலத்தினைச் சொந்தமாகவோ/குத்தகையாகவோ கொண்ட ஆதிதிராவிட விவசாயிகள் இத்திட்டத்திற்கு விண்ணப்பம் செய்யத் தகுதியுடையவராவர்.

**விசை உழவு இயந்திரம்**

தேவையான தகுதிகளாக, மூன்று ஏக்கர் நிலத்தினை சொந்தமாகவோ/குத்தகையாகவோ கொண்டுள்ள ஆதிதிராவிட விவசாயிகள் இத்திட்டத்தில் விண்ணப்பம் செய்யத் தகுதியுடையவராவர். மேலும் மகளிர் சுய உதவி குழுவிற்கு முன்னுரிமை வழங்கப்படும்.

**நெற்பயிர் கதிரடிக்கும் இயந்திரம்**

தேவையான தகுதிகளாக, மூன்று ஏக்கர் நிலத்தினை சொந்தமாகவோ/குத்தகையாகவோ கொண்டுள்ள ஆதிதிராவிட விவசாயிகள் இத்திட்டத்தில் விண்ணப்பம் செய்யத் தகுதியுடையவராவர். மேலும் மகளிர் சுய உதவி குழுவிற்கு முன்னுரிமை வழங்கப்படும்.

இத்திட்டத்திற்குப் பயனாளிகள் அளிக்கப்பட வேண்டிய இதர இணைப்புக்கள் .

1. சாதிச்சான்றிதழ்
2. குடும்ப உணவு பங்கீட்டு அட்டை
3. சொத்துக்கான சிட்டா, அடங்கல்
4. திட்டத்திற்கான தொகை தேவைப்பட்டியல் மற்றும்
5. நிழற்பட நகல்

ஆகியன இரு பிரதிகள் வழங்கப்பட வேண்டும்.

**தொழில், பணி மற்றும் வர்த்தகம்**
**(வேளாண்மையைச் சார்ந்த திட்டங்கள்)**

இதன் மதிப்பீடுகள் பின்வருமாறு அளிக்கப்படுகின்றது.

| | | |
|---|---|---|
| அலகுத் தொகை (அதிக பட்சமாக) | – | ரூ.40,000 |
| மானியத் தொகை 3% | – | ரூ.12,000 |
| வங்கிக் கடன் 60% | – | ரூ.24,000 |
| பயனாளிகளின் பங்குத் தொகை | – | ரூ.4,000 |

இதனைப் பொறுத்தவரையில், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் கீழ் செயல்படுத்தப்படும் திட்டங்களுக்கு ஏற்ப, இத் திட்டத்திற்கு நடைமுறையில் உள்ள விதிமுறைகள் மற்றும் விளக்கங்கள் பின்பற்றப்படுகின்றன.

## தனி நபர் தொழில் முனைவோர் திட்டம்

**தனிநபர் திட்டங்கள் :**

இத்திட்டத்தின் பிரதான அம்சமாக ரூ.7,50,000 வரை கடன் வழங்க வரையறை செய்யப்பட்டுள்ளது.

இதன் மதிப்பீடுகள் பின்வருமாறு அளிக்கப்படுகின்றது.

| | |
|---|---|
| விளிம்புத் தொகை | – ரூ.1,25,000 அல்லது திட்டத் தொகையில் 20 சதவீதம், இவற்றில் குறைந்த தொகை |
| மானியத் தொகை | – ரூ.25,000 அல்லது திட்டத்தொகையில் 30 சதவீதம் இவற்றில் குறைந்த தொகை |
| பயனாளிகளின் பங்குத் தொகை | – திட்டத் தொகையில் 5 சதவீதம் ஆகும். |

இதுகுறித்து வழங்கப்பட வேண்டிய பட்டியல்கள் பின்வருமாறு உள்ளன. லாரி, டிராக்டர், பவர் டில்லர், சுற்றுலா கார், மினிவேன், ஆட்டோ ரிக்ஷா, கோழிப்பண்ணை, மினி பால்பண்ணை, ரெடிமேட் துணிக்கடை, புளூ மெட்டல் தொழில், கணிப்பொறி மையம், ஜெராக்ஸ் மிஷின் மற்றும் இதர தொழில்கள். ஆகவே, இங்குக் குறிப்பிடப்பட்டுள்ள பட்டியல் ஒரு சில எடுத்துக்காட்டுகளே ஆகும்.



**குழுத் திட்டங்கள்**

இத்திட்டத்தின் கீழ், ஒவ்வொரு குழுவும் 10 உறுப்பினர்களைக் கொண்டதாக அமைகின்றது. இதன் மதிப்பீடு பின்வருமாறு அளிக்கப்படுகின்றது.

| | | | |
|---|---|---|---|
| அ. | அலகுத் தொகை ரூ.15,000 x10 உறுப்பினர்கள் | – | ரூ.1,50,000 |
| ஆ. | மானியத் தொகை 50 சதவீதம் அல்லது ரூ.10,000 இவற்றில் குறைவான தொகை | – | ரூ.1,00,000 |
| இ. | பயனாளிகளின் பங்குத் தொகை 5 சதவீதம் (ரூ.2500 x 10) | – | ரூ.25,000 |
| ஈ. | நிதி நிறுவனங்களின் கடன் தொகை (ரூ.37,500 x10) | – | ரூ.3,75,000 |

இத்திட்டத்தின் கீழ் பொருளாதாரத்தினை மேம்படுத்தும்/ வளர்ச்சியடையச் செய்யும் நலக்குழுக்கள் கருத்தில் எடுத்துக் கொள்ளப்படுகின்றது.

## சுயதொழில் வேலை வாய்ப்புப் பயிற்சித் திட்டம்

**சுய தொழில் பயிற்சித் திட்டம் :**

இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாக ஆதிதிராவிட ஆடவர், பெண்டிர் குறிப்பிட்ட தொழிலில் திறமை பெற்று கிராமப்புற குடிசைத் தொழிலில் சுய வேலை வாய்ப்பினைப் பெறச் செய்வதே ஆகும். இதன் மதிப்பீடு பின் வருமாறு அளிக்கப்படுகின்றது.

| | | |
|---|---|---|
| மாதாந்திர உதவித் தொகை | – | ரூ.500 |
| மாதாந்திர பயிற்றுவிப்போர் கட்டணம் | – | ரூ.200 |
| மாதாந்திர உபகரணப் பொருள் வாங்குவதற்கான கட்டணம் | – | ரூ.100 |

மேலே கண்டவாறு, ஒவ்வொரு மாணவர்களும், பெறும் வகையில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்குத் தேவையான தகுதிகள் பின்வருமாறு அமைந்துள்ளது.



2. குறைந்த கல்வித் தகுதியாக பட்டப் படிப்பு தேர்வு செய்திருத்தல் வேண்டும்.

**தேசிய பட்டியலினத்தோர் நிதி மற்றும் மேம்பாட்டுக் கழகத்திட்டம்**

**உயர்ந்த தொகை திட்டம் மற்றும் போக்குவரத்துத்துறை திட்டம்:**

இத்திட்டத்தின் கீழ், மாநில அளவிலான பட்டியலினத்தோர் மேம்பாட்டுக் கழகமும் சேர்ந்து பல்வேறு நலத்திட்டங்களைக் குறைந்த வட்டி வீதத்தில் பொருளாதாரத்திற்கு உகந்தவாறு சுய தொழில் விவசாயம், தோட்டக்கலை, கால்நடைப் பராமரிப்பு மற்றும் பால் வளத்துறை, குறைந்த நீர்ப்பாசனத் திட்டங்கள், சிறு தொழில், பணிசேவை மற்றும் போக்குவரத்துத் திட்டங்களுக்கு நிதி உதவி அளிக்கின்றது.

அ. விண்ணப்பதாரர் 18 முதல் 35 வயதிற்குள் இருத்தல் வேண்டும்.

ஆ. குடும்ப வருட வருமானம் ரூ.31,952 க்கு மிகாமலிருத்தல் வேண்டும்.

இ. பயிற்சியாளர்களின் இருப்பிடத்திலிருந்து 10 கிலோ மீட்டர் தூரத்திற்குள் பயிற்சி நிறுவனங்கள் அமைந்திருத்தல் வேண்டும்.

ஈ. விண்ணப்பதாரர்களின் கல்வித் தகுதி 8–ஆம் வகுப்பு அதற்கு மேல் இருத்தல் வேண்டும்.

மேலும் இத்திட்டமும், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையில், பழைய திட்டமான சுயவேலை வாய்ப்புப் பயிற்சி திட்டத்தின் அமைப்பின் அடிப்படையில் இப்பயிற்சி மேற்கொள்ளப்படுகிறது.

**ஓராண்டு கணிப்பொறி பயிற்சித் திட்டம்:**

இப்பயிற்சியின் கீழ், ஒவ்வொரு மாவட்டத்திற்கும் இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் அந்த மாவட்டங்களிலிருந்து மாவட்ட மேலாளர்கள் மூலம் மாணவர்கள் தேர்வு செய்து, தாட்கோ தலைமை அலுவலகத்தில் பெறப்படுகின்றது.

இப்பயிற்சி குறித்து வழங்கப்படும் பாடத் திட்டங்கள் சம்பந்தமாகவும், நிறுவனங்கள் தேர்வு செய்வது தொடர்பாகவும், தாட்கோ தலைமை அலுவலகத்திலிருந்து தெளிவான விவரங்கள் மாவட்ட மேலாளருக்குத் தெரிவிக்கப்படும். இப்பயிற்சியில் சேர தகுதிகள் பின்வருமாறு உள்ளது.

1. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வகுப்பினைச் சேர்ந்தவர்களாக இருத்தல் வேண்டும்.

1. பயனாளிகள், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் இனத்தைச் சார்ந்தவராக இருத்தல் வேண்டும்.
2. பயனாளிகள்/பட்டியலினத்தோர் கூட்டுறவுச் சங்கத்தின் உறுப்பினர்கள் சட்டப்படி நிறுவப்பட்ட அமைப்பு ஆகியவற்றின் மூலம் பெறப்படும் ஆண்டு வருமானம் கிராமப்புறத்திற்கு ரூ.3,195ம், நகர்ப்புறத்திற்கு ரூ.42,412ம் அதிகப்படாமலும், வறுமைக் கோட்டிற்குக் கீழ் பெறப்படும் வருமானம் இரு மடங்கிற்கு மேல் மிகாமலும் இருத்தல் வேண்டும்.
3. மேலும், தனிநபர், கூட்டு பங்கு நிறுவனம் கூட்டுறவுச் சங்கம் மற்றும் சட்ட ரீதியாக ஏற்படுத்தப்பட்ட அமைப்புகள் மூலம் அமைக்கப்படும் சொத்துகள் அடிப்படையில் வருமானம் உருவாக்கப்படுகின்றது.

இதன் அடிப்படையில், தாட்கோவில் செயல்படுத்தப்படும் பிரதான திட்டங்கள் பின்வருமாறு உள்ளன.

1. உயர்ந்த தொகைப் பிரிவுத் திட்டங்கள்
2. போக்குவரத்துப் பிரிவுத் திட்டங்கள்
3. வேளாண்மைப் பிரிவுத் திட்டங்கள்

நிதி ஒதுக்கீடு விவரம் பின் வருமாறு அமைந்துள்ளன.

பருவக் கடனைப் பொறுத்தவரையில், ரூ.30 இலட்சம் வரையிலும் உள்ள திட்ட மதிப்பீட்டின் அடிப்படையில் உதவி வழங்கப்படுகிறது.

பயனாளிகளின் பங்குத் தொகை பின்வருமாறு உள்ளன.

| வ. எண். | திட்ட அலகுத் தொகை (ரூபாயில்) | பயனாளிகளின் குறைந்த பட்ச பங்குத் தொகை (சதவீதத்தில்) | குறிப்புரை |
|---|---|---|---|
| 1. | 1 இலட்சம் வரை | இல்லை | பயனாளிகளின் பங்குத் தொகை அடுக்குமுறை அடிப்படையில் அமையாது. |
| 2. | 1 இலட்சம் முதல் 2.5 இலட்சம் வரை | 2 | |
| 3. | 2.5 இலட்சம் முதல் 5.0 இலட்சம் வரை | 3 | |
| 4.. | 5.0 இலட்சங்களுக்கு மேல் | 5 | |

திட்ட மதிப்பீட்டில் பருவக் கடன் அதிகபட்சமாக 90% நிதியினை மாநில அளவிலான முறைப்படுத்தும் முகமையின் உதவித் தொகை மற்றும் திட்டத்தின் பிற நிதி ஆதாரங்களையும்/மானியத்தையும் கருத்தில் கொண்டு வழங்கப்படும்.

வட்டி விகிதம் 5 இலட்சம் வரை 7% ஆகவும், 5 இலட்சத்திற்கு மேல் வழங்கப்படும் என்.எஸ்.எப்.டி.சி. அலகுக் கடன்களுக்கு பயனாளிகள் செலுத்த வேண்டிய தொகை 9% ஆகவும் உள்ளது. இதுவும் அடுக்குமுறை அடிப்படையில் அமையாது.

பருவக் கடன், காலாண்டு/ அரையாண்டு/ முழு ஆண்டு காலத் தவணைகளில் 10 ஆண்டுகளுக்குத் திருப்பிச் செலுத்த வகை செய்யப்பட்டுள்ளது.

**நிதி நிறுவனங்கள் மூலம் வழங்கப்படும் குறுகிய காலக் கடன் வசதித்திட்டம்**

இத்திட்டம் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இதில் குறைந்த அளவே, அலகுத் தொகையாக உள்ளது. இத்திட்டத்திற்கென, ஒவ்வொரு மாவட்டத்திற்கும், இலக்கு நிர்ணயம், தேசிய பட்டியலினத்தோர் நிதி மற்றும் மேம்பாட்டுக் கழகத்தின் அடிப்படையில் மாவட்ட மேலாளர்களுக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், அனைத்து மாவட்ட மேலாளர்கள் மூலம் அந்த மாவட்டங்களிலுள்ள மகளிர் மேம்பாட்டுக் கழகத்தின் அமைப்பையும், அரசு சார்பற்ற அமைப்பையும், கவனத்தில் கொண்டு இத்திட்டம் செயல்படுத்தப்படுகின்றது.

இதன் மதிப்பீடுகள் பின்வருமாறு உள்ளன.

| | |
|---|---|
| அலகுத் தொகை | – ரூ.10,000 இத்தொகை முழுவதும் என்.எஸ்.எப்.டி.சி.யையே சாரும். இது ஒரு பருவக் கடனாகும். |
| விளிம்புத் தொகை மற்றும் மானியங்கள் | – இல்லை |
| கடன் தொகை | – 36 மாத தவணைகளில் செலுத்தப்படல் வேண்டும் |
| வட்டி வகிதம் | – 7 சதவீதம் |

இது தவிர, இத்திட்டத்தினால் மகளிர் மற்றும் மகளிர் குழுக்களுக்கு முக்கியத்துவம் வழங்கப்படுகின்றது.

**தேசிய துப்புரவுத் தொழிலாளர்கள் நிதி மற்றும் வளர்ச்சிக் கழகம்**

இத்திட்டம் குறித்து, ஏற்கெனவே தாட்கோ தலைமையிடத்தில் விவரங்கள் பெறப்பட்டு விடுவிக்கப்பட்டுள்ள நிதிகளுக்கு ஏற்ப உரிய விண்ணப்பங்கள் மட்டுமே கருத்தில் கொள்ளப்படுகின்றது. இதில் திட்டத் தொகையாக என்.எஸ்.எப்.டி.சி.யின் மூலம், அனுமதிக்கப்பட்ட தொகையை உள்ளடக்கியதாகும்.

**பழங்குடியினருக்கான தனி நபர் தொழில் முனைவோர் திட்டம்**

இத்திட்டத்தின் கீழ் பழங்குடியினர் ஒருங்கிணைக்கப்பட்டு, குழுக்களாகப் பிரிக்கப்பட்டு வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்தும் வகையில் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இது குறித்து மாவட்ட மேலாளர்கள், பழங்குடியினரை ஆய்வு செய்து, குழுக்களை ஏற்படுத்தி, அவ்விவரங்களை உடன் தாட்கோ, தலைமை அலுவலகத்திற்குத் தெரியப்படுத்தி நிதியினைப் பெற வகை செய்யப்பட்டுள்ளது.

இதன் மதிப்பீடுகள் பின்வருமாறு அமைந்துள்ளன.

| | |
|---|---|
| அலகுத் தொகை (ரூ.50,000 X 10 உறுப்பினர்) | -- ரூ.5,00,000 |
| மானியத் தொகை 50 சதவீதம் அல்லது ரூ.10,000 (இவற்றில் குறைந்த தொகை ) | -- ரூ.1,00,000 |
| விளிம்புத் தொகை (20 சதவிகிதம்) | -- ரூ.1,00,000 |
| நிதி நிறுவனங்களின் கடன் தொகை | -- ரூ.3,00,000 |

எஸ்.எல்.ஆர்.எஸ்.–மறு வாழ்வுத் திட்டங்கள் மற்றும் சுய தொழில் பயிற்சி

இத்திட்டத்திற்கு, மாவட்ட மேலாளர்கள் பணியாளர்களைத் தேர்வு செய்து, குழுக்களை ஏற்படுத்தி விவரங்களை தாட்கோ தலைமை அலுவலகத்திற்கு உடன் தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது. ★

### 1. பள்ளிப்படிப்பு உதவித் தொகை

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் விடுதிகளில் தங்கி நான்காம் வகுப்பு முதல் பத்தாம் வகுப்பு வரையில் பயிலும் மாணவ/மாணவியருக்கும் மற்றும் கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளில் எட்டாம் வகுப்பு வரை பயிலும் மாணவ/மாணவியருக்கும் இலவச பாடப்புத்தகங்களும், இரண்டு தொகுதி சீருடைகளும் வழங்கப்படுகின்றன.

**உதவி பெறுவதற்கான தகுதிகள் :**

பெற்றோரின் ஆண்டு வருமானம் ரூ.50,000–த்திற்கு மிகாமல் இருக்க வேண்டும்.

**அணுக வேண்டிய அலுவலர் :**

கல்வி நிறுவனம் மூலமாக மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலர்

★ ★ ★

### 2. பள்ளி மேல் படிப்பு உதவித்தொகை

மேல்நிலைப் பள்ளி முதல் கல்லூரி/பல்கலைக்கழகங்களில் ஆராய்ச்சி படிப்பு வரை பயிலும் பிற்படுத்தப்பட்ட, மிகப்பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபின மாணவ/மாணவியருக்கு படிப்புக் கட்டணம், சிறப்புக் கட்டணம் மற்றும் புத்தகக் கட்டணம் ஆகியவற்றில் ஒரு பகுதியும் மற்றும் தேர்வுக் கட்டணம் முழுமையாக வழங்கப்படுகின்றன.

**உதவி பெறுவதற்கான தகுதிகள் :**

பெற்றோரின் ஆண்டு வருமானம் ரூ.50,000–த்திற்கு மிகாமல் இருக்க வேண்டும்.

**அணுக வேண்டிய அலுவலர் :**

கல்வி நிறுவனம் மூலமாக மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலர்

★ ★ ★

### 3. இலவசக் கல்வி

கல்விக் கட்டணங்கள், சிறப்புக் கட்டணங்கள் மற்றும் ஏனைய திரும்பப் பெற இயலாத கட்டணங்களிலிருந்து விலக்களிக்கப்பட்டு கல்வி நிறுவனங்களுக்கு அதற்கான தொகை ஈடு செய்யப்படுகிறது.

**அ) பட்டப்படிப்பு வரை :**

10ஆம் வகுப்பு முதல் பட்டப்படிப்பு வரை பயிலும் பிற்படுத்தப்பட்ட, மிகப்பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் மாணவ/மாணவியருக்கு இச்சலுகை அளிக்கப்படுகிறது.

**உதவி பெறுவதற்கான தகுதி :**

பிற்படுத்தப்பட்ட வகுப்பினராயின், பெற்றோரின் ஆண்டு வருமானம் ரூ.50,000–த்திற்கு மிகைப்படாமல் இருத்தல் வேண்டும். மேலும் மனுதாரரின் குடும்பத்தில் பட்டதாரி எவரும் இருத்தல் கூடாது.

மிகப்பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினருக்கு நிபந்தனை ஏதும் இல்லை.

**அணுக வேண்டிய அலுவலர் :**

கல்வி நிறுவனம் மூலமாக மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலர்

**ஆ) தொழிற் கல்வி :**

பொறியியல், மருத்துவம், வேளாண்மை, கால்நடை, சட்டம் போன்ற தொழிற்கல்வியிலும் பல்தொழில் பட்டயப்படிப்பிலும், பிற்படுத்தப்பட்ட, மிகப்பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபின மாணவ/மாணவியருக்கு இச்சலுகை அளிக்கப்படுகிறது.



**உதவி பெறுவதற்கான தகுதி :**

பெற்றோரின் ஆண்டு வருமானம் ரூ.50,000–த்திற்கு மிகைப்படாமல் இருத்தல் வேண்டும். மேலும், மனுதாரர் அவர் தம் குடும்பத்தில் தொழிற்கல்வி பட்டயப்படிப்பு பயிலும் முதல் நபராக இருக்க வேண்டும்.

**அணுக வேண்டிய அலுவலர் :**

கல்வி நிறுவனம் மூலமாக மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலர்

★ ★ ★

## பரிசுத் திட்டம் :

### மாநில அளவிலான பரிசு

பத்தாம் வகுப்பு மற்றும் பன்னிரெண்டாம் வகுப்பில் மாநில அளவில் உயர் மதிப்பெண் பெறும் மாணவர் ஒருவருக்கும், மாணவியர் ஒருவருக்கும் பின்வருமாறு பரிசுத்தொகை வழங்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| பத்தாம் வகுப்பு | மிகப் பிற்படுத்தப்பட்ட/ சீர்மரபினராயின். | ரூ.3,000 |
| | பிற்படுத்தப்பட்டவராயின் | ரூ.1,500 |
| பனிரெண்டாம் வகுப்பு | மிகப்பிற்படுத்தப்பட்ட/ சீர்மரபினர் | ரூ.5,000 |
| | பிற்படுத்தப்பட்டவராயின் | ரூ.3,000 |

### மாவட்ட அளவிலான பரிசு

மாவட்ட அளவில் பனிரெண்டாம் வகுப்பில் அதிக மதிப்பெண் பெறும் ஒரு மாணவர் மற்றும் ஒரு மாணவியர்.

| | |
|---|---|
| மிகப் பிற்படுத்தப்பட்டோர்/சீர்மரபினர் | ரூ.3,000 |
| பிற்படுத்தப்பட்டோர் | ரூ.1,500 |

மாவட்ட அளவில் பத்தாம் வகுப்பில் அதிக மதிப்பெண் பெறும் மூன்று மாணவர் மற்றும் மூன்று மாணவியர்

| பரிசு | மிகப்பிற்படுத்தப் பட்டோர்/சீர்மரபினர் | பிற்படுத்தப் பட்டோர் |
|---|---|---|
| முதல் பரிசு | ரூ.1,000 | ரூ.500 |
| 2ஆம் பரிசு | ரூ.500 | ரூ.250 |
| 3ஆம் பரிசு | ரூ.300 | ரூ.150 |

★ ★ ★

### அண்ணா நினைவுப் பரிசு

மாவட்ட அளவில் பனிரெண்டாம் வகுப்புத் தேர்வில் முதல், இரண்டு இடங்கள் பெற்று தொழிற்படிப்பில் சேருகின்ற பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் மாணவர் இருவர் மற்றும் மாணவியர் இருவருக்கு ஆண்டொன்றுக்கு ரூ.3,000 வீதம் நான்கு ஆண்டுகளுக்கு வழங்கப்படுகிறது.

### மிகப்பிற்படுத்தப்பட்ட மாணவியருக்கு ஊக்கப் பரிசு :

மூன்றாம் வகுப்பு முதல் 5ஆம் வகுப்பு வரையில் பயிலும் 60,000 மிகப்பிற்படுத்தப்பட்ட மாணவியருக்கு (வகுப்பிற்கு 20,000 மாணவியர்கள்) நபர் ஒருவருக்கு ஆண்டொன்றுக்கு ரூ.500 வீதம் ஊக்கத்தொகை வழங்கப்படுகிறது.

அதேபோல், 6ஆம் வகுப்பில் பயிலும் 30,000 மிகப் பிற்படுத்தப்பட்ட மாணவியருக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.100 வீதம் ஆண்டொன்றுக்கு (10 மாதங்களுக்கு) ரூ,1,000 வழங்கப்படுகிறது.

**உதவி பெறுவதற்கான தகுதிகள் :**

பெற்றோரின் ஆண்டு வருமானம் ரூ.25,000–க்கு மிகாமல் இருக்க வேண்டும்.

**அணுக வேண்டிய அலுவலர் :**

கல்வி நிறுவனம் மூலமாக மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலர்

★ ★ ★

# பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்கள்

## இலவசக் கருவிகள்

முடிதிருத்துவோருக்கான கைப்பெட்டிகள், துணிதேய்ப்புப் பெட்டிகள், கல்லுடைக்கும் கருவிகள் இலவசமாக வழங்கப்படுகின்றன.



**உதவி பெறுவதற்கான தகுதிகள் :**

மேற்கூறப்பட்டுள்ள பூர்வீகத் தொழிலை மேற்கொள்ளும் மிகப்பிற்படுத்தப்பட்ட பிரிவினராக இருத்தல் வேண்டும். பயனாளியின் ஆண்டு வருமானம் ரூ.12,000–க்கு மிகைப்படாமல் இருத்தல் வேண்டும்.

**அணுக வேண்டிய அலுவலர் :**

மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலர்

★ ★ ★

## மானியத்துடன் கூடிய கடனுதவி

முடிதிருத்தம், சலவையகம் மற்றும் நடமாடும் சலவையகம் அமைக்க மானியத்துடன் கூடிய கடனுதவி பின்வருமாறு அளிக்கப்படுகிறது.

| | மானியம் | கடனுதவி |
|---|---|---|
| முடிதிருத்தகம் | ரூ.1,500 | ரூ.3,500 |
| சலவையகம் | ரூ.1,500 | ரூ.3,500 |
| நடமாடும் சலவையகம் | ரூ.600 | ரூ.2,000 |

**உதவி பெறுவதற்கான தகுதிகள் :**

மேற்கூறப்பட்டுள்ள பூர்வீகத் தொழிலை மேற்கொள்ளும் மிகப்பிற்படுத்தப்பட்ட பிரிவினராக இருத்தல் வேண்டும். பயனாளியின் ஆண்டு வருமானம் ரூ.12,000–க்கு மிகைப்படாமல் இருத்தல் வேண்டும்.

**அணுக வேண்டிய அலுவலர் :**

மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலர்

★ ★ ★

## இலவச வீட்டுமனை

கிராமப்புறங்களில் வசிக்கும் மிகப்பிற்படுத்தப்பட்ட, சீர்மரபினர் பிற்படுத்தப்பட்ட மற்றும் முன்னேறிய பிரிவினருக்கும் 3 சென்ட் இலவச வீட்டுமனைப்பட்டா வழங்கப்படுகிறது.

**உதவி பெறுவதற்கான தகுதிகள் :**

ஆண்டு வருமானம் ரூ.12,000–த்திற்கு மிகாமல் இருக்க வேண்டும்.

**அணுக வேண்டிய அலுவலர் :**

மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலர்

★ ★ ★

## வேலை வாய்ப்பை அடிப்படையாகக் கொண்ட பயிற்சிகள்

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபின வகுப்பினருக்கு பெற்றோரின் ஆண்டு வருமானம் ரூ.50,000–த்திற்கு மிகைப்படாமல் உள்ளவர்களுக்கு பின்வரும் பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன.

| வ. எண். | பயிற்சி | பயிற்சியாளர் எண்ணிக்கை | பயிற்சிக் காலம் |
|---|---|---|---|
| 1. | கணினிப் பயிற்சி | 1,000 | 6 மாதம் |
| 2. | கணினிப் பயிற்சி (சிறப்புப் பாடத்திட்டம்) | 500 | 6 மாதம் |

| | | | |
|---|---|---|---|
| 3. | கனரக வாகன ஓட்டுநர் பயிற்சி | 2,000 | 3 மாதம் |
| 4. | தானியங்கி பொறியியல் | 50 | 12 மாதம் |
| 5. | குளிர்சாதன/ குளிர்பதனப் பெட்டி பழுது பார்த்தல் | 100 | 6 மாதம் |
| 6. | அலங்கார ஆடை வடிவமைப்பு | 20 | 6 வாரம் |
| 7. | ஆடை தயாரிப்பு | 20 | 8 மாதம் |
| 8. | கணினியில் அலங்கார ஆடை வடிவமைத்தல் | 20 | 8 மாதம் |
| 9. | துணைச் செவிலியர் | 250 | 12 மாதம் |
| 10. | பிளாஸ்டிக் செய்முறை இயந்திரம் இயக்குதல் | 25 | 6 மாதம் |
| 11. | தோல் பொருட்கள் தயாரித்தல் (குறுகிய கால பயிற்சி) | 130 | 6 மாதம் |
| 12. | தோல் பொருட்கள் தயாரித்தல் (நீண்ட காலப் பயிற்சி) | 92 | 15 மாதம் |
| 13. | தையல் இயந்திரம் இயக்குதல் | 90 | 2 மாதம் |
| 14. | அலுவலக செயலர் பயிற்சி | 200 | 6 மாதம் |
| 15. | தட்டச்சுப் பயிற்சி | 900 | 6 மாதம் |
| 16. | சுருக்கெழுத்துப் பயிற்சி | 300 | 12 மாதம் |
| 17. | தொலைபேசி இயக்குதல் | 200 | 1 மாதம் |
| 18. | தகவல் தொழில்நுட்பம் | 5,000 | 12 மாதம் |
| 19. | பிளாஸ்டிக் உற்பத்தி தொழில் நுட்பவியல் | 60 | 25 வாரம் |
| 20. | மருத்துவ சோதனைக்கூட தொழில்நுட்பம் | 20 | 12 மாதம் |



**உதவி பெறுவதற்கான தகுதிகள் :**

பெற்றோரின் ஆண்டு வருமானம் ரூ.50,000–த்திற்கு மிகாமல் இருத்தல் வேண்டும்.

**அணுக வேண்டிய அலுவலர் :**

தட்டச்சு மற்றும் சுருக்கெழுத்துப் பயிற்சிகளுக்கு மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலர், இதர பயிற்சிகளுக்கு பிற்படுத்தப்பட்டோர்/ மிகப்பிற்படுத்தப்பட்டோர் நல இயக்குநரகம்

★ ★ ★

### தொழில் கடனுதவி

தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் மூலம் பிற்படுத்தப்பட்ட/மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு சுயதொழில் தொடங்க குறைந்த வட்டி விகிதத்தில் திட்ட அடிப்படையில் கடன் வழங்கப்படுகிறது.

**அணுக வேண்டிய அலுவலர் :**

மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலர்/ தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம்

★ ★ ★

## சிறுபான்மையினருக்கான நலத்திட்டம்

### தொழில் கடனுதவி

தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் மூலம் சிறுபான்மையின மக்களுக்குச் சுயதொழில் தொடங்க குறைந்த வட்டி விகிதத்தில் திட்ட அடிப்படையில் கடன் வழங்கப்படுகிறது.

**அணுக வேண்டிய அலுவலர் :**

மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலர்/ தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம்

★ ★ ★

## அளிக்கப்படும் சேவைகள் :

### ஆவணங்கட்கு சட்டபூர்வ தன்மை அளித்தல்

தாக்கல் செய்யப்படும் ஆவணங்கட்கு இத்துறை பதிவு செய்வதின் வழி சட்டபூர்வ தன்மையை அளிக்கின்றது. பதிவுச் சட்டம் ஆவணத்தை பதிவு செய்ய வழிவகுக்கிறது. மாறாக அதனில் கூறப்படும் செயலைப் பதிவு செய்யவில்லை.

இப்பதிவு சொத்தின் மீதான உரிமையை உறுதி செய்யாது.

சொத்தினை விற்பவருக்கு அத்தகு உரிமை உள்ளதா என்பதை உறுதி செய்து கொள்ள வேண்டியது வாங்குபவர் கடமை.

### பதிவின் பலன்

சிலவகை ஆவணங்கள் கட்டாயமாகவும், சில விருப்பப்படியும் பதிவு செய்திட வரையறுக்கப்பட்டுள்ளது.

கட்டாயமாக பதிவு செய்யப்பட வேண்டிய ஆவணங்கள் பதிவு செய்யப்படவில்லையெனில் அவை செல்லுந்தன்மையை இழக்காது. ஆயினும் இத்தகு ஆவணங்களில் பதிவுற்றவை, பதிவுறாத ஆவணங்களை விட முன்னுரிமை பெறுகின்றன. பதிவு செய்யப்பட வேண்டிய ஆவணங்கள் பதிவு செய்யப்படவில்லையெனில் அவை சாட்சிய ஆவணங்கள் அல்ல. இருப்பினும் கடந்த கால நிகழ்ச்சிகட்கு சாட்சியமாக ஏற்கப்படலாம். சட்டத்தின் முன் உங்கள் உரிமையை நிலைநாட்ட அனைத்து ஆவணங்களையும் பதிவு செய்து கொள்ளுங்கள்.

### பதிவுகள் பாதுகாப்பு மற்றும் சான்றிட்ட நகல் வழங்கல்

பதிவுற்ற அலுவலகங்களில் ஆவணங்களின் நகல்கள் நிரந்தரமாகப் பாதுகாக்கப்படுகின்றன.

அசையாச் சொத்து சம்பந்தப்பட்ட 1 புத்தகத்தில் பதிவு செய்யப்படும் ஆவணங்களின் பதிவுகள் மற்றும் பதிவு மறுப்புக்கான காரணம் அடங்கிய 2 புத்தகம் பதிவுகள் யார் வேண்டுமென்றாலும் ஆய்வு செய்து சான்றிட்ட நகல் பெறலாம். உயில்கள் மற்றும் தத்து ஆவணங்கள் பதிவு செய்யப்படும் 3 புத்தக ஆவண நகல்கள் எழுதி வைத்தவரின் அல்லது அவரது முகவருக்கு மட்டுமே வழங்கப்படும். அவரது மறைவுக்குப் பின் யார் வேண்டுமென்றாலும் பெறலாம்.

பலவகை ஆவணங்கள் கொண்ட 4 புத்தக பதிவுகள் எழுதித் தரும் அல்லது பெறும் நபர்கட்கு மட்டுமே வழங்கப்பெறும். வில்லங்க சான்று மற்றும் சான்றிட்ட நகல்களை வரையறை செய்யப்பட்ட கட்டணம் செலுத்தி அஞ்சல் வழியிலும் பெறலாம்.




### திருமணப் பதிவு

மாவட்டப் பதிவாளர்கள், சார் பதிவாளர்கள் இந்து அறநிலையத்துறை கோயில் நிர்வாக அலுவலர்கள் இந்து திருமணச் சட்டத்தின் கீழ், தம் எல்லைக்குள் திருமணப் பதிவாளர்கள் ஆவர். இந்து மதத்தைச் சேர்ந்த ஆண், பெண் இருவரிடையே, எந்த முறைப்படியும் நடத்தப்பெற்ற திருமணங்கள் இச்சட்டத்தின் கீழ் பதிவு செய்து கொள்ளலாம்.

மணமகளுக்கு 18 வயதும், மணமகனுக்கு 21 வயதும் நிறைவுற்று இருக்க வேண்டும்.

இந்துத் திருமணம் பதிவு கட்டாயமில்லை, எனினும் எதிர்கால பயன் கருதி தாமாகவே திருமணத்தை பதிவு செய்து கொள்ள பொதுமக்கள் முன்வரவேண்டும். வெளிநாடு செல்ல நுழைவிசைவு பெறல் போன்ற சமயங்களில் தேவைப்படும்போது பதிவுக்கு அவசரப்படுதலைத் தவிர்த்து திருமணத்தின் போதே பதிவு செய்து கொள்ளலாம்.

மணமகன் அல்லது மணமகள் இருப்பிடத்தில் அல்லது திருமணம் நடைபெறும் இடத்தில் பதிவு செய்து கொள்ள வசதி உள்ளது. திருமணப் பதிவு மனுவில் சரியான விவரங்களை அளித்து, பின்னர் திருத்தம் செய்து கொள்வதைத் தவிர்க்கலாம்.

## தனித் திருமணம்

தனித்திருமணச் சட்டத்தின் கீழ் மாவட்டப் பதிவாளர்கள் மற்றும் சார் பதிவாளர்கள் திருமண அலுவலர்கள். எம்மதத்தைச் சார்ந்தோரும் செய்து கொள்ளும் திருமணம் இதனில் பதிவு செய்யப்படலாம். மணமகன் மற்றும் மணமகள் முறையே 21 மற்றும் 18 வயது நிறைவடைந்தவராக இருத்தல் வேண்டும். உத்தேசிக்கப்பட்டுள்ள திருமண அறிவிப்பு திருமண அலுவலருக்கு அளித்திடல் வேண்டும். அறிவிப்பு அளித்திட்ட 30 நாட்கள் கழித்து பதிவுக்கு எவ்வித எதிர்ப்பும் இல்லையெனில், 3 மாதங்களுக்குள் திருமணப் பதிவு செய்யப்படும். இல்லையெனில் பதிவு செய்திட மீண்டும் அறிவிப்பு செய்ய வேண்டும்.

## இந்திய கிருத்துவ திருமணம்

இந்திய கிருத்துவ திருமணச் சட்டத்தின் கீழ் திருமணப் பதிவாளர்களை அரசு நியமிக்கின்றது. இத்தகு திருமணப் பதிவாளர்களால் நடத்தப்படும் திருமண விவரங்கள், சென்னை–28இல் உள்ள பதிவுத் துறைத் தலைவர் அலுவலகத்திற்கு அனுப்பப்படும். திருமண வடிப்புகள் பதிவுத்துறை தலைவர் அலுவலகத்தில் உரிய கட்டணம் செலுத்தி பெறலாம்.

## பார்சி திருமணம்

மாவட்டப் பதிவாளர்கள் பார்சி திருமணம் மற்றும் விவாகரத்து சட்டத்தின் கீழ் திருமணப் பதிவாளர்கள் ஆவர். பார்சி மதகுருக்களால் நடத்தப்படும் திருமண விவரங்கள் பதிவாளருக்கு அனுப்பப்படும். இச்சட்டத்தின் கீழ் திருமணங்கள் கட்டாயப் பதிவிற்குட்பட்டவை.

## பிறப்பு மற்றும் இறப்பு வடிப்புகள்

கட்டாயமாக பதிவு செய்யப்படவேண்டிய பிறப்பு மற்றும் இறப்புகள் சம்பந்தப்பட்ட உள்ளாட்சியால் பதிவு செய்யப்படுகின்றன. பிறப்பு மற்றும் இறப்பு பதிவேடுகள் ஊராட்சிகளைப் பொறுத்தமட்டில் பதிவேடுகள் வட்டாட்சியரிடமிருந்து பெறப்பட்டதும் அந்த எல்லைக்குட்பட்ட சார் பதிவகத்தில் பாதுகாக்கப்படுகின்றன.

இப்பதிவேடுகளின் வடிப்புகள் உரிய கட்டணம் செலுத்தி பெறலாம்.

## சீதன தடைச்சட்டம்

நேரடியாகவோ, மறைமுகமாகவோ வரதட்சிணை கேட்டல் அல்லது பெறுதல் சீதன தடைச்சட்டத்தின்படி ரூ.5,000 வரை அபராதமும், 6 மாதம் வரை சிறை தண்டனையும் அல்லது இரண்டும் விதிக்கத்தக்க தண்டனை ஆகும். இச்சட்டத்தின் கீழ், குற்ற வழக்கு தொடர மாவட்டப் பதிவாளர்கள் அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளனர்.

## சீட்டுகள்

சீட்டுகளில் சேரும் முன், அவை பதிவுற்ற சீட்டுதானா என்பதை உறுதி செய்துகொண்டு சேர எச்சரிக்கப்படுகின்றனர். பதிவுறா சீட்டில் சேர்ந்து அல்லலுறும்போது துறை அவர்களைக் காப்பாற்ற வழி இல்லை. பதிவுறா சீட்டு நடத்துதல் குற்றமாகும்.

## சங்கங்கள் பதிவு

மொத்த உறுப்பினர்கள் 20–க்கு குறையாமலும் ஆண்டு வரவு அல்லது செலவு ரூ.10,000–க்கு குறையாமலும் உள்ள சங்கங்கள் கட்டாயமாக பதிவு செய்யப்பட வேண்டியவை. பதிவுற்ற சங்கங்கள் ஆற்ற வேண்டிய சட்ட தேவைகள் உள்ளன. இத்தகு தேவைகளை நிறைவு செய்யவிலையெனில் பதிவு ரத்து செய்யப்பட வழி வகுக்கும். சங்க நிதி அதன் நோக்கத்திற்கு மட்டுமே பயன்படுத்தப்படல்வேண்டும். சங்க நிதியை உறுப்பினர்களிடையே பிரித்துக்கொள்ள இயலாது. பதிவுற்ற சங்கம் உரியவாறு செயல்படவில்லை என்றாலோ, தமிழ்நாடு சங்கப் பதிவு சட்ட வரையறைகட்கு முரணாக செயல்பட்டாலோ, அச்சங்க நிர்வாகக் குழுவை கலைத்து அதனை நிர்வகிக்க ஒரு சிறப்பு அலுவலரை நியமிக்க அரசுக்கு அதிகாரம் உள்ளது.

## கூட்டு நிறுவனம்

மாவட்டப் பதிவாளர்கள் தங்கள் எல்லைக்குள் கூட்டு நிறுவனப் பதிவாளர்கள் ஆவர். இரண்டு பேருக்கு குறையாத பங்குதாரர்களைக் கொண்ட கூட்டு நிறுவனம், மாவட்டப் பதிவாளரால் பதிவு செய்யப்படும்.

அஞ்சல் வழியும், கூட்டு நிறுவன பதிவு மனு அனுப்பப்படலாம். பதிவுற்ற கூட்டு நிறுவனம் ஒவ்வொன்றும் கடந்த ஆண்டில் செயல்பட்டமைக்கான உறுதிமொழி ஒன்றினை கோர்வை செய்ய வரையறை உள்ளது.



உயில் ஆவணங்களை மூடி முத்திரையிட்ட உறையில் ஒப்படைக்கலாம்.

2. உங்களால் செலுத்தப்படும் தொகைகட்கு உரிய ரசீது பெற உங்களுக்கு உரிமை உள்ளது.

3. முத்திரைத்தாள் தாக்கல் செய்த நான்காம் நாள் சான்றிட்ட ஆவண நகல் பெற உங்களுக்கு உரிமை உள்ளது.

4. மனுச்செய்த 8ஆம் நாள் வில்லங்கச் சான்று பெற உங்களுக்கு உரிமை உள்ளது.

5. பிறப்பு, இறப்பு மற்றும் திருமண பதிவு வடிப்புகள் மூன்றாம் நாள் பெற உங்களுக்கு உரிமை உள்ளது.

### கடமைகள்

உங்களுக்கு கீழ்க்கண்ட தலையாய கடமைகள் உள்ளன.

1. பதிவுப் பணிக்கு வரையறுக்கப்பட்ட முத்திரைத் தீர்வை மற்றும் கட்டணங்களை உடன் செலுத்துதல் வேண்டும். வரையறுக்கப்பட்ட கட்டண விவரங்கள் எல்லா பதிவு அலுவலக அறிவிப்பு பலகைகளிலும் எழுதி வைக்கப்பட்டுள்ளது. இதற்கென வெளியிடப்பட்டுள்ள கையேட்டிலும் இந்த விவரங்கள் உள்ளன.

2. பதிவு சேவையை தாமதமின்றி பெற சட்டத் தேவைகள் அனைத்தையும் நிறைவு செய்க.

3. பதிவுக்கு தாக்கல் செய்யப்படும் ஆவணங்களில் அதன் தன்மை மற்றும் செலுத்தப்படவேண்டிய முத்திரைத் தீர்வை மற்றும் பதிவுக் கட்டணம் நிர்ணயம் செய்ய தேவைப்படும் முழு விவரங்களையும் அளித்திடுக. தவறின் குற்ற வழக்கு நடவடிக்கைகளை சந்திக்க வேண்டும்.

உரிய முத்திரைத் தீர்வை மற்றும் பதிவுக் கட்டணம் செலுத்துவது தொடர்பாக துறை அலுவலர்களை மட்டுமே அணுகவும்.

## பதிவு – பொதுமக்களின் உரிமைகளும், கடமைகளும்

1. பதிவுக்கு தாக்கல் செய்யப்படும் ஆவணங்களில் சம்பந்தப்பட்ட அனைத்து விவரங்களையும் அளித்து அதற்கான முத்திரைத் தீர்வை மற்றும் பதிவுக்கட்டணம் செலுத்திய நிலையில் ஆவணத்தைப் பதிவு செய்து தாக்கல் செய்த மூன்றாம் நாள் பெற உங்களுக்கு உரிமை உள்ளது.

சில சிறப்பு நிகழ்வுகளில், முன்னதாக மனுச்செய்து உரிய கட்டணம் செலுத்திய பின், உங்கள் இல்லத்திலேயே ஆவணத்தைப் பதிவுக்கு தாக்கல் செய்திடலாம்.

அலுவலக நேரம் தவிர்த்து பிற நேரங்களில் பதிவு அலுவலர் தனியாக இருப்பிடப் பதிவுக்கு வருவார்.

மாவட்டப் பதிவாளர்களிடம் பாதுகாப்பிற்காக

### குடிமகனை விவரங்களை அறிந்த நிலையில் வைத்தல்

பதிவுத்துறை அலுவலர்கள் உங்களுக்கு தேவைப்படும் எந்த விவரங்களையும் அளித்திட எப்போதும் விழைகின்றனர்.

அனைத்துப் பதிவு அலுவலகங்களிலும் விவரங்கள் அடங்கிய அறிவிப்புப் பலகைகள் வைக்கப்பட்டுள்ளன.

அலுவலக நேரங்களில் உங்களுக்காகத் தேவைப்படும் தகவல்களை அளித்திட சார் பதிவாளர்கள் சித்தமாக இருக்கின்றனர். அவர்கள் பதிவு பொதுமக்களுக்கு தகவல் தரும் மையங்களாக செயல்படுகின்றனர்.

அனைத்துப் பதிவு அலுவலகங்களிலும் புகார் பெட்டிகள் வைக்கப்பட்டுள்ளன. பதிவு பொதுமக்கள் தங்கள் கருத்து, புகார் இவைகளை இதனில் சேர்க்கலாம்.

இதன் மீது உரிய நடவடிக்கை எடுத்து ஆலோசனைகளைச் செயல்படுத்திடவும், குறைகளைக் களையவும் நடவடிக்கை எடுக்கப்படும்.

அனைத்து மாவட்ட மண்டல அலுவலர்கள் எல்லா திங்கள்கிழமை வேலைநாட்களிலும் தங்கள் தலைமையகத்தில் இருந்து உங்கள் குறைகளைக் கேட்க இருப்பார்.

## சேவையில் தவறு நேரின்

உங்கள் தகவல் தேவைகட்கு உரிய பதில் கிடைக்காவிட்டாலும் (அல்லது) சட்டப் படியான தேவைகளை நிறைவு செய்த பின்னும் காலக்கெடு வரையறுக்கப்பட்ட பணிகளில் தாமதம் இருப்பின் (அல்லது) பதிவுச் சேவைகட்கு கூடுதல் தொகை கேட்கப்படின், சம்பந்தப்பட்ட மாவட்டப் பதிவாளர், மண்டல துணைத் தலைவர்கள் அல்லது சென்னையில் உள்ள பதிவுத்துறைத் தலைவரையோ நேரடியாக அல்லது கடிதம் வழி தொடர்பு கொண்டு உங்கள் குறைகளைத் தெரிவிக்கலாம்.

## சட்டப் பூர்வ தீர்வுகள்

1. ஆவணம் பதிவு மறுக்கப்படின் ஒரு மாதத்திற்குள் சம்பந்தப்பட்ட மாவட்டப் பதிவாளரிடம் மேல் முறையீடு செய்திடலாம்.
2. பதிவுக்கு ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட கூடுதலாக 4 மாதங்கள் வரை காலதாமதம் ஏற்க சம்பந்தப்பட்ட மாவட்டப் பதிவாளர்களிடம் மனுச் செய்யலாம்.
3. ஆவணத்திற்கு குறைவு முத்திரைத்தீர்வை மற்றும் அபராதம் செலுத்தக் கோரும் மாவட்டப் பதிவாளரின் ஆணை மீது பதிவுத்துறை தலைவருக்கு (முதன்மை வருவாய் கட்டுப்பாட்டு அதிகாரி) மேல்முறையீடு செய்திடலாம். பதிவுத்துறை தலைவர் உங்கள் தரப்பு வாதங்களைக் கேட்டு இறுதி ஆணையிடுவார்.
4. வழிகாட்டி மதிப்பை நீங்கள் ஏற்க மறுப்பின் உங்கள் ஆவணம் மதிப்பு நிர்ணயம் செய்திட தனித்துணை ஆட்சியர் (முத்திரை)க்கு அனுப்பப்படும். அவர் இடத்தைப் பார்வையிட்டு மதிப்பு நிர்ணயம் செய்வார்.




5. கெட்டுப்போன அல்லது பயன்படுத்தாத முத்திரைத்தாள் தொகை திரும்பக் கோரும் மனு மீதான மாவட்ட ஆட்சியர் ஆணை மீது பதிவுத்துறைத் தலைவருக்கு மேல்முறையீடு வழித்தடம் உள்ளது.
6. சங்கப் பதிவு மறுப்பு, பதிவுற்ற சங்கப் பதிவு நீக்கம் அல்லது ரத்து ஆவணங்கள் மீது பதிவுத்துறைத் தலைவருக்கு மேல் முறையீடு செய்திடலாம்.

★ ★ ★

நலத்திட்டத்தின் பெயர் :

**1. படித்து வேலையில்லா இளைஞர்களுக்குப் பிரதமரின் சுயவேலை வாய்ப்புத் திட்டம்**

தகுதி :

குறைந்த அளவு கல்வித்தகுதி 8ஆம் வகுப்பு தேர்ச்சி அல்லது தேர்ச்சியின்மை அல்லது ஐ.டி.ஐ. தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். 18 முதல் 35 வயதிற்குட்பட்டு இருத்தல் வேண்டும். பெண்கள், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர், முன்னாள் இராணுவத்தினர் ஆகியோருக்கு 45 வயது வரை அனுமதிக்கப்படுகிறது. குடும்ப ஆண்டு வருமானம் ரூ.40,000–க்கு மிகாமல் இருக்க வேண்டும். விண்ணப்பதாரர் மாவட்டத்தில் தொடர்ந்து மூன்று ஆண்டுகளுக்கு மேல் குடியிருந்து வருபவராக இருக்க வேண்டும்.

அணுக வேண்டிய அலுவலர் :

பொது மேலாளர், மாவட்டத் தொழில் மையங்கள்

**2. மகளிர் தொழில் முனைவோர் மேம்பாட்டு பயிற்சித் திட்டம்**

தகுதி :

விண்ணப்பிக்கும் மகளிர் 18 வயதிற்கு மேற்பட்டவராகவும், 10ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றவராகவும் இருக்க வேண்டும்.



அணுக வேண்டிய அலுவலர் :

பொது மேலாளர், மாவட்டத் தொழில் மையங்கள்

**3. மிகவும் பின்தங்கிய, பின்தங்கிய ஒன்றியங்களுக்கான மாநில முதலீட்டு மானியம்**

| இடஅமைவு | உதவி விகிதம் | தகுதியான உயரளவு ரூ. (இலட்சத்தில்) |
|---|---|---|
| மிகவும் பின்தங்கிய 71 ஒன்றியங்கள், சிப்காட் தொழிற்பேட்டைகள் புதுக்கோட்டை, மானாமதுரை, தூத்துக்குடியில் அமைந்துள்ள சிப்காட் தொழிற் பேட்டையில் உள்ள சிட்கோ வளாகம், டாக்டர் விக்ரம் சாராபாய் மின்னணு தொழிற்பேட்டை, திருவான்மியூர், சோழிங்கநல்லூரில் உள்ள மின்னணு நகரம் மற்றும் பெருங்குடி தொழிற்பேட்டை | 20% | 20 |
| பின்தங்கிய 216 ஒன்றியங்கள், இதர சிப்காட் தொழில் வளாகங்கள், சிட்கோ மற்றும் இதர அரசு சார்பு நிறுவனங்களால் உருவாக்கப்பட்ட தொழிற்பேட்டைகள் | 15% | 15 |

**4. சிறப்பு முதலீட்டு மானியம் (குறிப்பிட்ட தொழில்களுக்கு மட்டும்)**

| | | |
|---|---|---|
| மின்னணு தொழில் | 20% | 20 |
| தோல் பொருட்கள் | 20% | 20 |
| மோட்டார் வாகனம் தயாரிப்பதற்கான துணைத் தொழில்கள் | 20% | 15 |



மருந்து மற்றும் மருத்துவப்பொருட்கள், உணவுப்பொருட்கள் பக்குவப்படுத்தும் தொழில்கள், சூரிய சக்தி கருவிகள் தயாரிக்கும் தொழில்கள், ஏற்றுமதிக்குரிய தங்கம் மற்றும் வைர ஆபரணத் தொழில்கள், சணல் பக்குவப்படுத்தும் ஆலைகள் (கீழ்க்கண்ட தாலுக்காக்களில் அமைந்துள்ள தொழிற்சாலைகளுக்கு மட்டும்)

அம்பாசமுத்திரம், கும்பகோணம், செங்கற்பட்டு, மதுரை, முசிறி, பண்ருட்டி. மாசு கட்டுப்பாட்டு சாதனங்கள், விளையாட்டுச் சாதனைங்களும் கருவிகளும் ஆதாயக் கட்டுமானப் பொருள் தயாரிக்கும் தொழில்கள்

**5. இதர மானியங்கள்**

| மானிய விவரங்கள் | உதவி விகிதம் | தகுதியான உயரளவு ரூ. (இலட்சத்தில்) |
|---|---|---|
| பெண் தொழிலாளர்களைப் பணியமர்த்தும் தொழிற்சாலைகளுக்கான கூடுதல் முதலீட்டு மானியம் | 5% | 5 |
| மாசு சுத்திகரிப்பு சாதனங்களை நிறுவியுள்ள தோல் தொழிற்சாலைகள் | 10% | 2 |
| ஜெனரேட்டர் மானியம் | 15% | 5 |
| சூரிய வெப்பசக்தி மற்றும் புதுப்பிக்கப்படும் ஆற்றல் கருவிகள் உபயோகப்படுத்தும் தொழிற்சாலைகள் மட்டும் | 10% | 10 |

**6. குறைந்த அழுத்த மின் கட்டண மானியம் (நிலஉச்சவரம்பு மற்றும் வரி சட்டத்திற்கு உட்படாத இடங்களில் உள்ள தொழிற்சாலைகளுக்கு மட்டும்)**

| ஆண்டுகள் | உதவி விகிதம் (செலுத்தப்பட்ட மின் கட்டணத்தில்) |
|---|---|
| முதல் ஆண்டு | 40% |
| இரண்டாம் ஆண்டு | 30% |
| மூன்றாம் ஆண்டு | 20% |

**விற்பனை வரி சலுகைகள்**

**(வரி நீக்கம், வரி ஒத்திவைப்பு)**

**இட அமைவு :**

மிகவும் பின்தங்கிய 71 ஒன்றியங்கள், சிப்காட் தொழிற்பேட்டைகள் புதுக்கோட்டை, மானாமதுரை,

தூத்துக்குடி, தூத்துக்குடியில் அமைந்துள்ள சிப்காட் தொழிற்பேட்டையில் உள்ள சிட்கோ வளாகம், விக்ரம் சாராபாய் மின்னணு தொழிற்பேட்டை, திருவான்மியூர், சோழிங்கநல்லூரில் உள்ள மின்னணு நகரம் மற்றும் பெருங்குடி தொழிற்பேட்டை.

**புதிய நிறுவனங்கள் :**

முதலீடு செய்யப்பட்ட நிலையான மூலதனத்திற்கு 5 ஆண்டுகள் வரி நீக்கம் அல்லது 9 ஆண்டுகள் வரி ஒத்திவைப்பு.

**விரிவாக்கப்பட்ட நிறுவனங்கள் :**

விரிவுபடுத்தப்பட்டதில் முதலீடு செய்யப்பட்ட நிலையான மூலதனத்திற்கு 5 ஆண்டுகள் வரி நீக்கம் அல்லது 9 ஆண்டுகள் வரி ஒத்திவைப்பு.

**இட அமைவு :**

பின்தங்கிய 216 ஒன்றியங்கள், இதர சிப்காட் தொழில் வளாகங்கள், சிட்கோ மற்றும் இதர அரசு சார்பு நிறுவனங்களால் உருவாக்கப்பட்ட தொழிற்பேட்டைகள்.

**புதிய நிறுவனங்கள் :**

முதலீடு செய்யப்பட்ட நிலையான மூலதனத்திற்கு 9 ஆண்டுகள் வரி ஒத்திவைப்பு.

**விரிவாக்கப்பட்ட நிறுவனங்கள் :**

விரிவுபடுத்தப்பட்டதில் முதலீடு செய்யப்பட்ட 80% நிலையான மூலதனத்திற்கு 9 ஆண்டுகள் வரி ஒத்திவைப்பு

**இட அமைவு :**

இதர பகுதிகள்

**புதிய நிறுவனங்கள் :**

முதலீடு செய்யப்பட்ட 60% நிலையான மூலதனத்திற்கு 5 ஆண்டுகள் வரி ஒத்திவைப்பு

**விரிவாக்கப்பட்ட நிறுவனங்கள் :**

விரிவுபடுத்தப்பட்டதில் முதலீடு செய்யப்பட்ட 50% நிலையான மூலதனத்திற்கு 5 ஆண்டுகள் வரி ஒத்திவைப்பு.

இந்த ஊக்குவிப்பு திட்டம் 23–1–2000 முதல் அரசால் விலக்கிக் கொள்ளப்பட்டது. எனினும் இத்தேதிக்கு முன்னதாக தொழில் தொடங்கி உற்பத்தி தொடங்கிய நிறுவனங்களுக்கு மட்டும் இச்சலுகைகள் வழங்கப்படும்.



**அணுக வேண்டிய அலுவலர் :**

பொது மேலாளர், மாவட்டத் தொழில் மையங்கள்

★ ★ ★

**குறிக்கோள் :**

சிறுதொழில் துறை, தொழில் வணிக இயக்ககம், தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம், தமிழ்நாடு சிறுதொழில் நிறுவனம், தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனம் மற்றும் தமிழ்நாடு தோல் தொழில் நிறுவனம் ஆகியவற்றை உள்ளடக்கியதாகும். சிறு தொழில்களை எளிதில் துவக்க உதவியும் அவை நிலையான வளர்ச்சி பெறும் வகையில் திட்டங்களைத் தீட்டி, அவற்றை நிறைவேற்றுவதன் மூலம் சிறு தொழில்களைப் பேணிப் பாதுகாக்கிறது.

**பொறுப்புகள் :**

குறைந்த அளவு தாமதத்துடன் சிறுதொழில் நிறுவனங்களை நிறுவ உதவுதல்

தொழில் முனைவோருக்குத் தேவைப்படும் விவரங்களை விரைந்து அளிப்பதை உறுதிப்படுத்துதல்

பொருளாதார நீரோட்டத்தில் வேலைவாய்ப்பற்ற பெரும்பாலான இளைஞர்களை ஈர்க்கும் வகையில் வேலைவாய்ப்புகளை உருவாக்கும் திட்டங்களை ஊக்குவித்தல்

சமுதாயத்தில் நலிவுற்ற பிரிவினர் மற்றும் மகளிருக்கான சிறப்புத் திட்டங்களை உருவாக்குதல்

தேவையான தொழில்நுட்ப விவரம் சோதனை வசதிகள் மற்றும் பயிற்சி வசதிகளைத் தேவைப்படும் தொழில் முனைவோருக்கு அளித்தல்

தகுதியுள்ள தொழில் முனைவோருக்கு பல்வேறு மானியங்களை விரைந்து அளித்தல்

சிறுதொழில் மற்றும் நடுத்தர தொழிலாளிகளுக்கு வேண்டிய நிதி உதவி அளிக்க வகை செய்தல்

தொழில் முனைவோர்களுக்குத் தொழிற்கூடங்கள் (கொட்டகைகள்) – மனைகள் வெளிப்படையாக ஒதுக்கீடு செய்வதை உறுதிப்படுத்துதல்

தரமான மூலப்பொருட்களைக் குறித்த காலத்தில் வழங்குவதை உறுதிப்படுத்துதல்

நடைமுறைகளை எளிமையாக்கப் பாடுபடுதல், பல்வேறு வசதிகள் குறித்து தேவைப்படும் நாளது வரையிலான தகவல்களைப் பெற வழிவகை செய்தல், விண்ணப்பங்களின் தற்போதைய நிலை ஆகியவற்றைத் தெளிவாக்குதல்

புகார்க் கடிதங்களுக்கு உடனடியாக ஒப்புகை அளித்து அதன்மீது நியாயமாகவும் சுதந்திரமாகவும் நடவடிக்கை எடுத்தல்

பெறப்படும் கோரிக்கைகள் விண்ணப்பித்த நாளிலிருந்து கீழ்க்குறிப்பிட்ட வகையில் குறித்த காலக் கெடுவிற்குள் நேர்செய்யப்படும்.

அ. தற்காலிக சிறுதொழில் சான்றுக்கான விண்ணப்பங்களைப் பரிசீலித்தல் – 3 நாட்களுக்குள்

ஆ. சிறுதொழில் சான்று (நிரந்தரம்) விண்ணப்பங்களைப் பரிசீலித்தல் – 30 நாட்களுக்குள்

இ. மானியம் கோரும் விண்ணப்பங்களைப் பரிசீலித்தல் – 60 நாட்களுக்குள்

## சிறுதொழில் துறையின் செயல்முறைகள்

### 1. சிறுதொழில் பிரிவு நிரந்தரம் / தற்காலிகம்

**அணுக வேண்டிய அலுவலர் :**

மாவட்டங்களிலுள்ள மாவட்ட தொழில் மையங்களின் பொது மேலாளர்கள், சென்னை மண்டல தொழில் வணிக இணை இயக்குநர், சென்னை–2.

### 2. பிரதமரின் வேலைவாய்ப்புத் திட்டம்

**அணுக வேண்டிய அலுவலர் :**

மாவட்டங்களிலுள்ள மாவட்ட தொழில் மையங்களின் பொது மேலாளர்கள், சென்னை மண்டல தொழில் வணிக இணை இயக்குநர், சென்னை–2.



### 3. மானியங்கள்

**அணுக வேண்டிய அலுவலர் :**

மாவட்டங்களிலுள்ள மாவட்ட தொழில் மையங்களின் பொது மேலாளர்கள், சென்னை மண்டல தொழில் வணிக இணை இயக்குநர், சென்னை–2.

### 4. திட்ட அறிக்கைகள்

**அணுக வேண்டிய அலுவலர் :**

மாவட்டங்களிலுள்ள மாவட்ட தொழில் மையப் பொது மேலாளர்கள், கிண்டி, அம்பத்தூர், மதுரை, கோயம்புத்தூர், திருச்சி, திருநெல்வேலி, சேலம், காட்பாடி ஆகிய இடங்களில் உள்ள தொழில்நுட்பத் தகவலக நூலகங்கள் இரசாயனத் தொழில்கள் விவர வங்கி, கிண்டி மின்னணுவியல் தொழில் விவர வங்கி, திருவான்மியூர்

### 5. மகளிர் தொழில் முனைவோர் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் பயிற்சியளித்தல்

**அணுக வேண்டிய அலுவலர் :**

மாவட்டங்களிலுள்ள மாவட்ட தொழில் மையங்களின் பொது மேலாளர்கள், சென்னை / மண்டல தொழில் வணிக இணை இயக்குநர், சென்னை–2.

தொழில் வணிக இயக்ககத்தின் மகளிர் தொழில் முனைவோர் மேம்பாட்டுத் திட்டம், துணை இயக்குநர், சென்னை–5.

### 6. தொழிற்கூடங்கள் ஒதுக்கீடு

**அணுக வேண்டிய அலுவலர் :**

தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனம்

### 7. மின் மற்றும் மின்னனு தொழிற் பேட்டைகள்

**அணுக வேண்டிய அலுவலர் :**

இந்தந்த தொழிற்பேட்டைகளின் நிர்வாக அலுவலர்கள் மற்றும் சென்னை –5 தொழில் வணிக இயக்ககத்தின் இணை இயக்குநர் (மின் மற்றும் மின்னணு தொழில்கள்)

### 8. தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் அமைத்தல்

**அணுக வேண்டிய அலுவலர் :**

மாவட்ட தொழில் மையங்களின் பொது மேலாளர்கள் மற்றும் தொழில் ஆணையர் மற்றும் தொழில் வணிக இயக்குநர், சென்னை–5

### 9. இரசாயன பரிசோதனை வசதிகள்

**அணுக வேண்டிய அலுவலர் :**

இரசாயன பரிசோதனை மற்றும் பகுப்பாய்வுக்கூடம், கிண்டி, சென்னை–32, மதுரை, கோயம்புத்தூர், சேலம் மற்றம் தூத்துக்குடி ஆகிய இடங்களில் உள்ள மண்டலங்களில் ஆய்வுக் கூடங்கள்

### 10. மின்பொருள் பரிசோதனை வசதிகள்

**அணுக வேண்டிய அலுவலர் :**

மத்திய மின் ஆய்வுக்கூடம், காக்களூர்

### 11. அச்சு மற்றும் கருவி வடிவமைப்பு பயிற்சி

**அணுக வேண்டிய அலுவலர் :**

கண்காணிப்பாளர், தொழில்நுட்ப பயிற்சிமையம், கிண்டி, சென்னை–32

கண்காணிப்பாளர், அச்சு மற்றும் கருவி வடிவமைப்பு மையம், திண்டுக்கல்

### 12. அறிவியல் கண்ணாடிப் பயிற்சி வசதிகள்

**அணுக வேண்டிய அலுவலர் :**

கண்காணிப்பாளர், அரசு அறிவியல் கண்ணாடி பயிற்சி மையம், கிண்டி, சென்னை



### 13. குறுகிய நீண்ட காலக் கடன்கள், குத்தகை மற்றும் தவணை முறையில் இயந்திரங்கள் மற்றும் சாதனங்கள் வாங்க நிதி உதவி

**அணுக வேண்டிய அலுவலர் :**

தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம், சென்னை–35

### 14. விற்பனை உதவி

**அணுக வேண்டிய அலுவலர் :**

தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனம்

தமிழ்நாடு சிறு தொழில் நிறுவனம்

தமிழ்நாடு தோல் தொழில் நிறுவனம்

### 15. மூலப்பொருட்கள் கொள்முதல் இரும்பு, எஃகு மற்றும் இரும்பு கலவாப் பொருட்கள்

**அணுக வேண்டிய அலுவலர் :**

தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனம்

தமிழ்நாடு சிறுதொழில் நிறுவனம்.

★ ★ ★

**நலத் திட்டங்கள் விவரம் :**

### 1. பள்ளிச் சீரமைப்பு

இத்திட்டத்தின் மூலம் அசையும் அசையா சொத்து இலட்சக் கணக்கில் பெறப்பட்டு பள்ளிகள் மேம்படுத்தப்படுகின்றது.

**பயனாளிகள் :**

பள்ளி மாணவ–மாணவிகள்

### 2. புரவலர் திட்டம்

**உதவி பெறுவதற்கான தகுதிகள் :**

பள்ளி புரவலர்கள் மூலம் தலா ரூ.1,000 வசூலிக்கப்பட்டு வங்கியில் செலுத்தப்பட்டு வட்டித் தொகை பள்ளி மேம்பாட்டிற்குப் பயன்படுத்தப்படுகிறது.

**பயனாளிகள் :**

பள்ளி மாணவ–மாணவிகள்

### 3. இலவச பாடப் புத்தகங்கள் வழங்கும் திட்டம்

**உதவி பெறுவதற்கான தகுதிகள் :**

முதல் 5 வகுப்புகள் முடிய பள்ளியில் படிக்கும் அனைத்து மாணவர்கட்கும் இலவச பாடப் புத்தகங்கள் வழங்கப்படுகின்றது. மேலும் 6 முதல் 8 வகுப்பு முடிய சத்துணவு உண்ணும் மாணவர்கட்கு இலவச பாடப் புத்தகங்கள் வழங்கப்படுகின்றது.

**பயனாளிகள் :**

பள்ளி மாணவ–மாணவிகள்

### 4. இலவச சீருடை வழங்குதல்

**உதவி பெறுவதற்கான தகுதிகள் :**

சத்துணவு உண்ணும் 1 முதல் 8 வகுப்பு முடிய படிக்கும் மாணவியர்கட்கு பாவாடை தாவணி மேல் சட்டை, மாணவர்கட்கு கால்சட்டை மேல் சட்டை வழங்கப்படுகிறது.

**பயனாளிகள் :**

பள்ளி மாணவ–மாணவிகள்

### 5. இலவச பஸ் பாஸ் வழங்கும் திட்டம்

1 முதல் 12ஆம் வகுப்பு மாணவர்கட்கு இலவச பஸ் பாஸ் வழங்கப்பட்டு வருகின்றது.

**பயனாளிகள் :**

பள்ளி மாணவ–மாணவிகள்

### 6. தமிழ்நாடு ஊரக மாணவர்கள் திறமை தேர்வுத்திட்டம்

**உதவி பெறுவதற்கான தகுதிகள் :**



8ஆம் வகுப்பு படிக்கும் மாணவர்களில் 50%–க்கு மேல் மதிப்பெண்கள் பெற்று மாவட்ட அளவில் நடைபெறும் தேர்வில் வெற்றி பெறும் முதல் மதிப்பெண் பெறும் 50 மாணவர்கள் 50 மாணவியர்கட்கு ரூ.1,000 வீதம் நான்கு ஆண்டுகட்கு வழங்கப்படுகிறது.

**பயனாளிகள் :**

பள்ளி மாணவ–மாணவிகள்

### 7. தாழ்த்தப்பட்ட மாணவர்கட்குச் சிறப்புப் பயிற்சி அளிக்கும் திட்டம்

**உதவி பெறுவதற்கான தகுதிகள் :**

8 முதல் பிளஸ்–2 வகுப்பு வரை படிக்கும் தாழ்த்தப்பட்ட தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர்கட்கு மாலை நேரப் பயிற்சி வகுப்புகள் பள்ளிகள் மூலம் அளிக்கப்படுகின்றன.

**பயனாளிகள் :**

பள்ளி மாணவ–மாணவிகள்

## 8. வாழ்வொளி

**உதவி பெறுவதற்கான தகுதிகள் :**

மாவட்ட அளவில் மருத்துவ ஆய்வுக்குழு அமைக்கப்பட்டு பள்ளிகள் பார்வையிடப்பட்டு மாணவ–மாணவியர்களிடையே சிறப்பு நோய் கண்டுபிடிக்கப்பட்டு சிகிச்சை அளிக்கப்படுகின்றது. (மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை கலந்தாலோசிக்கப்படவேண்டும்)

**பயனாளிகள் :**

பள்ளி மாணவ–மாணவிகள்

## 9. நாட்டுநலப் பணித்திட்டம் மேற்கொள்ளும் பணிகள்

நாட்டு நலப்பணித்திட்டம் சில பள்ளிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு எழுத்தறிவுப் பணி, குடிசைப் பகுதி சுத்தம் செய்தல், மரங்கள் நடுதல், சாலை மராமத்து பணிகள், குடும்பநலம் விழிப்புணர்வு ஏற்படுத்துதல், இரத்த தான முகாம் நடத்துதல், குடிப்பழக்கத்தில் இருந்து மக்களை விடுவித்தல், மக்கள் தொடர்பு, கல்வி, எய்ட்ஸ் விழிப்புணர்வு முகாம், அரசு மருத்துவமனை, கோயில்கள் சுத்தம் செய்தல்



## 10. தேசிய திறனாய்வுத் தேர்வு

**உதவி பெறுவதற்கான தகுதிகள் :**

9ஆம் வகுப்பு இறுதித் தேர்வில் கணிதம், அறிவியல், சமூகப் பாடங்களில் 60 மதிப்பெண் பெற்றிருக்க வேண்டும். 10ஆம் வகுப்பு படித்துக் கொண்டிருக்க வேண்டும். வருமான வரம்பு கிடையாது.

**பயனாளிகள் :**

பள்ளி மாணவ–மாணவிகள்

## 11. புத்தக உதவித்தொகை

மாதம் ரூ.200 வீதம் மற்றும் ஆண்டுக்கு ரூ.500 புத்தக உதவித்தொகை

1. 65 இலட்சம் பள்ளி செல்லும் குழந்தைகளுக்கு வாரம் ஒரு முட்டையுடன் தினமும் சத்துணவு வழங்கும் திட்டம். 10ஆவது வகுப்பு வரை படிக்கும் விருப்பமுள்ள அனைத்து குழந்தைகளுக்கும் உணவு அளிக்கப்படுகிறது. (சமூகநலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறையால் நிர்வகிக்கப்படுகிறது. அத்துறையினை கலந்தாலோசிக்கப்பட வேண்டும்.
2. கற்பலகை வழங்கும் திட்டம். அரசு மற்றும் உதவிபெறும் பள்ளிகளில் முதலாம் வகுப்பு பயிலும் 11.50 இலட்சம் மாணவர்களுக்கு இலவசமாக கரும்பலகை வழங்கப்படுகிறது. இதற்காக ரூ.35.75 இலட்சம் செலவாகும். ஒரு கரும்பலகை ரூ.3.55 மதிப்பில் வழங்க ஆணையிடப்பட்டுள்ளது.
3. மாநில அளவிலும் மாவட்ட அளவிலும் 10ஆம் வகுப்பிலும் 12ஆம் வகுப்பிலும் பொதுத் தேர்வில் முதல் மூன்று இடம் பெறும் மாணவ–மாணவியரின் மேற்படிப்புச் செலவை அரசே ஏற்றுக் கொள்கிறது.
4. அரசு பள்ளிகளில் 11, 12ஆம் வகுப்பு பயிலும் விருப்பமுள்ள மாணவர்களுக்கும் 9,10ஆம் வகுப்பு பயிலும் மாணவர்களுக்கும் கணினிக் கல்வி வழங்கப்படுகிறது.
5. 2000 ஆரம்பப்பள்ளிகளுக்கு ஒலிநாடா மற்றும் வானொலி, ஏற்கெனவே வழங்கப்பட்டுவிட்டது. மீதமுள்ள 6,800 ஆரம்பப் பள்ளிகளுக்கு ஒலிநாடா மற்றும் வானொலியும், 2000 நடுநிலைப் பள்ளிகளுக்கு வண்ணத் தொலைக்காட்சியும் வழங்கப்படுகின்றன.

★ ★ ★

பொது விநியோகத் திட்டத்தின் கீழ் குடும்ப அட்டை வைத்திருப்போரை வகைப்படுத்துவதற்காக, அரசு 'இளஞ்சிவப்பு' மற்றும் 'மஞ்சள்' என்ற இருவண்ண அட்டைகளை வழங்க பின்வரும் வரன்முறைகளை நிர்ணயித்துள்ளது :

அரசு அவ்வப்போது நிர்ணயிக்கும் விலையில் அரிசியையும் ஏனைய அத்தியாவசியப் பொருட்களையும் 'இளம்சிவப்பு' அட்டைதாரர்கள் பெற்றுக் கொள்ளலாம். மஞ்சள் அட்டைதாரர்கள், அரசு அவ்வப்போது நிர்ணயிக்கும் விலையில் அரிசிக்குப் பதிலாக சர்க்கரை அல்லது மண்ணெண்ணெய் மற்றும் ஏனைய அத்தியாவசியப் பொருட்களையும் பெற்றுக் கொள்ளலாம்.

**மேலே கூறப்பட்ட இருவண்ண அட்டைதாரர்களில் வறுமைக் கோட்டிற்குக் கீழுள்ள குடும்பங்களைக் கண்டறிய கீழ்க்காணும் வரன்முறைகள் நிர்ணயிக்கப்படுகின்றன :**

**1. ஊரகப் பகுதிகள் :**

அ. ஆண்டொன்றுக்கு ரூ.15,000மும் அதற்கு கீழும் வருமானம் ஈட்டும் குடும்பங்கள்.

ஆ. நிலமற்ற வேளாண் தொழிலாளர்கள்

இ. சிறு உழவர்கள் மற்றும் குறு உழவர்கள்

ஈ. சொந்தத் தொழில் புரியும் ஊரக கைவினைஞர்கள்

உ. முதியோர் உதவித் தொகை பெறுபவர்கள் மற்றும் இதைப் போன்று அரசிடமிருந்து உதவித் தொகை பெறும் ஆதரவற்ற விதவைகள், உடல் ஊனமுற்றோர் ஆகியோர்.



('ஆ' முதல் 'உ' வரை உள்ள இனங்களில் ரூ.15,000 என்ற ஆண்டு வருமான வரையறை பொருந்தும்).

**2. நகர்ப்புறப் பகுதிகள் :**

அ. ஆண்டொன்றுக்கு ரூ.15,000மும் அதற்குக் கீழும் வருமானம் ஈட்டும் குடும்பங்கள்

ஆ. பொதுவாக குடிசைப் பகுதிகளில் வசிக்கும் மக்கள்

இ. அன்றாடம் வேலை செய்து கூலி ஈட்டுகின்ற ரிக்ஷா ஓட்டுபவர்கள், சுமை தூக்குவோர், நடைபாதைகளில் பழம் / பூ விற்பவர்கள், வீட்டு வேலைக்காரர்கள், கட்டடப் பணியாளர்கள், இதைப் போன்ற வேலை செய்யும் ஏனையோர்.

('ஆ மற்றும் 'இ' இனங்களில் ரூ.15,000 என்ற ஆண்டு வருமான வரையறை பொருந்தும்)

3. தமிழ்நாடு அரசு இளம்சிவப்பு வண்ண அட்டைதாரர்களுக்குக் குடும்ப அட்டையில் குறிப்பிடப்பட்டுள்ள நியாயவிலைக் கடையில் குடும்பங்களுக்குத் திங்களொன்றுக்கு உயரளவாக 20 கிலோ அரிசி வழங்கும் எனவும் வாக்குறுதி அளிக்கிறது. மஞ்சள் வண்ண அட்டைதாரர்களுக்கு அரிசி வழங்கப்படமாட்டாது. அதற்குப் பதிலாக அவர்கள், அரசு அவ்வப்போது நிர்ணயிக்கும் விலையில் இளம் சிவப்பு அட்டைதாரர்களுக்கு வழங்குவது போல் ஏனைய அத்தியாவசியப் பொருட்களோடு 3 கிலோ சர்க்கரை அல்லது 5 லிட்டர் மண்ணெண்ணெய் இதில் எது தேவையோ அதை கூடுதலாகப் பெற்றுக் கொள்ளலாம்.

4. **நியாய விலைக் கடைகளில் வழங்கப்படும் அரிசியின் விலை சாதாரண ரகத்திற்கு 2 ரூபாயாகவும் கிரேடு 'எ' ரகத்திற்கு கிலோ ஒன்றிற்கு 3.75 ரூபாயாகவும் இருக்கும். இந்த விலை எப்போதுமே இந்திய அரசு வறுமைக் கோட்டிற்கு கீழே வாழும் மக்களுக்கு நிர்ணயிக்கும் அரிசியின் விலையை விட 50 பைசாவிற்கு மேல் கூடுதலாக இருக்காது.**

5. **நியாயவிலைக் கடைகளில் வழங்கப்படும் அரிசியின் தரம் இந்திய அரசு நிர்ணயித்துள்ள நியாயமான சராசரி தரத்தில் இருக்கும்.**

**பணியின் வகை :**

**1. குடும்ப உறுப்பினர்களின் பெயர்களைச் சேர்த்தல் / நீக்குதல் (அந்தப் பகுதி உணவு பங்கீட்டு அலுவலகத்தில் அளிப்பதன் பேரில்)**

**காலவரையறை :**

தேவையான ஆதாரத்துடன் குடும்ப அட்டைகள் அளிப்பதன் பேரில் மூன்றாம் நாள்

**மாற்றங்கள் செய்யும் அதிகாரி :**

நுகர்பொருள் வழங்கு உதவி ஆணையாளர் / வட்ட வழங்கு அதிகாரி

**2. அதே நியாய விலைக்கடையின் அதிகார வரம்பிற்குள் முகவரி மாற்றம்**

**காலவரையறை :**

மூன்று நாட்களுக்குள்

**மாற்றங்கள் செய்யும் அதிகாரி :**

நுகர்பொருள் வழங்கு உதவி ஆணையாளர் / வட்ட வழங்கு அதிகாரி

**3. நியாயவிலைக் கடை மாற்றம் மற்றும் முகவரி மாற்றம்**

**காலவரையறை :**

ஒரு வாரத்திற்குள்

**மாற்றங்கள் செய்யும் அதிகாரி :**

நுகர்பொருள் வழங்கு உதவி ஆணையாளர் / வட்ட வழங்கு அதிகாரி

**4. ஏனைய மாநகருக்கு அல்லது வேறு வகையில் குடும்பத்தை மாற்றிச் செல்வதன் பேரில் குடும்ப அட்டை ஒப்படைப்பு சான்றிதழ் வழங்கல்**

**காலவரையறை :**

இரண்டு நாட்கள்

**மாற்றங்கள் செய்யும் அதிகாரி :**

நுகர்பொருள் வழங்கு உதவி ஆணையாளர் / வட்ட வழங்கு அதிகாரி

**5. அதே மாநிலத்திற்குள் ஒப்படைப்பு சான்றிதழ் முதலியவற்றை அளிப்பதன் பேரில் புதிய குடும்ப அட்டை வழங்குதல்**

**காலவரையறை :**

ஏழு நாட்களுக்குள்

**மாற்றங்கள் செய்யும் அதிகாரி :**

நுகர்பொருள் வழங்கு உதவி ஆணையாளர் / வட்ட வழங்கு அதிகாரி

**6. வேறு மாநிலத்திலிருந்து மாற்றப்பட்டு வரும் நேர்வில், தேவையான ஆதாரம் அளிக்கப்படுவதற்குட்பட்டு குடும்ப அட்டை புதிதாக வழங்குதல்**

**காலவரையறை :**

இரண்டு வாரங்களுக்குள்

**மாற்றங்கள் செய்யும் அதிகாரி :**

நுகர்பொருள் வழங்கு உதவி ஆணையாளர் / வட்ட வழங்கு அதிகாரி

## ஒரு கூட்டுறவுச் சங்கத்தை எவ்வாறு தொடங்குவது

**செயல்புரியும் நோக்கம் :**

**1. கிராம அளவில் விவசாயிகளுக்காக**

**கூட்டுறவுச் சங்கங்களின் வகை :**

தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகள்

**2. நகர மக்களுக்காக (நகர்ப்புறம்)**

**கூட்டுறவுச் சங்கங்களின் வகை :**

கூட்டுறவு நகர வங்கிகள்

**3. வேளாண் விளைபொருட்களை இலாபகரமான விலையில் விற்பனை செய்வதற்காகவும், விளைபொருள் ஈட்டுக் கடன் பெறுவதற்காகவும்**

**கூட்டுறவுச் சங்கங்களின் வகை :**

வேளாண் உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள்

இளைஞர் எழுச்சி
விளையாடி மகிழ்வோம்
ஒன்றுகூடி வாழ்வோம்
நாடு நலம்பெற உழைப்போம்
ரூ.20 கோடி
மதிப்பீட்டில் 8 ஆயிரம்
விளையாட்டு மற்றும்
உடற்பயிற்சி மையங்கள்.
சிகரங்களை நோக்கி
சிறகடிக்கும் வீரர்கள்
கிராமங்கள் தோறும் பயிற்சி
வெற்றிகளை குவித்திட முயற்சி

தமிழரசு
பதிவு எண். M. 86/6
Licence No.TN/MS(C)/PP-23





# கடத்தப்பட்ட கன்னட நடிகர்

முதல்வர் கலைஞர் உரை

# கடத்தப்பட்ட கன்னட நடிகர்

பிரபல கன்னட நடிகர்

டாக்டர் ராஜ்குமார் அவர்கள் கடத்தல் தொடர்பாக,

சிறப்புக் கவன ஈர்ப்பிற்குப் பதிலளித்து

13-11-2000 அன்று

மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள்

சட்டமன்றப் பேரவையில் ஆற்றிய உரை.

சிறப்பு வெளியீடு எண்.40

'தமிழரசு' இலவச வெளியீடு

நவம்பர், 2000

*வெளியிடுபவர் :*

இயக்குநர்,
செய்தி–மக்கள் தொடர்புத்துறை,
சென்னை.

*வெளியீடு :*

தமிழரசு அச்சகம்,
சென்னை–600 002.

# கடத்தப்பட்ட கன்னட நடிகர்

"வீரப்பனிடமிருந்து கன்னட நடிகர் ராஜ்குமார் அவர்களை மீட்பது குறித்து இன்று இந்த அவையில், தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியின் சார்பில் திரு.அழகிரி அவர்கள் 18 நிமிடங்களும், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் திரு.பழனிசாமி அவர்கள் 8 நிமிடங்களும், அ.தி.மு.க. சார்பில் திரு.சுந்தரம் அவர்கள் 10 நிமிடங்களும், பாட்டாளி மக்கள் கட்சி சார்பில் திரு.ஐ.கணேசன் அவர்கள் 19 நிமிடங்களும், இந்திய தேசிய லீக் சார்பில் திரு.லத்தீப் அவர்கள் 28 நிமிடங்களும், அகில இந்திய பார்வர்டு பிளாக் கட்சியின் சார்பில் திரு.சந்தானம் அவர்கள் 5 நிமிடங்களும், மார்க்சிஸ்ட் கட்சியின் சார்பில் திரு.ஹேமச்சந்திரன் அவர்கள் 6 நிமிடங்களும், பி.ஜே.பி. சார்பில் திரு.வேலாயுதன் அவர்கள் 8 நிமிடங்களும், புதிய தமிழகம் சார்பில் திரு.கிருஷ்ணசாமி அவர்கள் 4 நிமிடங்களும், பேராசிரியர் தீரன் அவர்கள் 10 நிமிடங்களும் ஆக மொத்தம் ஏறத்தாழ 2 மணி நேரம், இந்த விவாதத்திலே பங்கேற்று, அவையை ஒத்தி வைத்து இந்தப் பிரச்சினையை விவாதித்து இதுபற்றிய முடிவை அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு உரையாற்றியிருக்கிறார்கள்.

இதிலே, நண்பர் திரு.அழகிரி அவர்கள் முதலிலே இதை ஆரம்பித்து வைத்தார்கள். அவருடைய பேச்சு மென்மையாகத் தொடக்கத்திலே இருந்தாலும்கூட, இறுதியாக இரண்டொரு கருத்துக்களை, இந்த அரசைத் தாக்குகிற வகையில், குறிப்பாக என்னைப் புண்படுத்துகிற வகையில், இங்கே வெளியிட்டார்கள். அதைத் தவிர, அவருடைய பேச்சு மிக ஒழுங்காக வரையறுக்கப்பட்ட வகையில் அமைந்திருந்ததை நான் பாராட்டுகிறேன்.

பிரிவினைவாதிகளுக்கு இந்த அரசு துணை போகிறது என்று சொன்னதோடு நிறுத்தாமல், பிரிவினைவாதிகளையெல்லாம் ஒன்று சேர்க்கிறது, அதாவது, பிரிவினைவாதத்திற்குப் புதிய பலத்தைத் தருகிறது என்று இந்த அரசை, அல்லது அரசை நடத்துகிற திராவிட முன்னேற்றக் கழகத்தை ஒரு பிரிவினைவாத இயக்கம்போல் அவர்கள் இங்கே கற்பித்துக் காட்டினார்கள்.

இன்னொன்று சொன்னார்கள். 30 கோடி ரூபாய் வீரப்பனுக்குச் சென்றிருக்கிறது. அது தமிழ்நாடு அரசின் சார்பாகவா? கர்நாடக அரசின் சார்பாகவா? என்பது எனக்குத் தெரியாது. இப்படிச் சொல்லப்படுகிறது என்று குறிப்பிட்டார்கள்.

பொதுவாக, இப்படிச் சொல்லப்படுகிறது, கேட்கப்படுகிறது, செய்திவெளியாகிறது, மக்கள் பேசிக் கொள்கிறார்கள் என்ற அளவில், பொத்தாம் பொதுவிலே பேசுவது, அழகிரி போன்ற பொறுப்புள்ள உறுப்பினர்களுக்கு அழகல்ல என்றாலும் கூட, நான் அதை, அந்தச் சொல்லப்படுவதாக அவர் சொன்ன அந்தக் கருத்தை, அந்தச் செய்தியை வன்மையாக மறுக்கிறேன்.

அதுபோன்று பணம் கொடுத்து, பேரம் பேசி, ராஜ்குமாரை மீட்பதாக இருந்தால், தொடக்கத்திலேயே அந்தக் காரியத்தைச் செய்து, இந்நேரம் மீட்டிருக்கலாம். ராஜ்குமார் மீட்கப்பட்டு 100 நாட்கள் ஆகிவிட்டன என்று விழாக்கூட கொண்டாடியிருக்கலாம். இப்போது 100 நாட்களாக இன்னும் மீட்கப்படவில்லை என்று வருந்திக் கொண்டிருக்கிறோம். நான் அவருக்கும், தமிழ் மாநிலக் காங்கிரஸ் கட்சி உறுப்பினர்களுக்கும், இந்த அவைக்கும், இந்த அவையின் வாயிலாக நாட்டு மக்களுக்கும் தெரிவித்துக் கொள்கிறேன். நாடு பிரிய வேண்டும் என்ற கருத்தை,

அந்தக் கொள்கையை, திராவிட முன்னேற்றக் கழகம் கைவிட்டுப் பல ஆண்டுகள் ஆகின்றன.

1962–ஆம் ஆண்டு, பேரறிஞர் அண்ணா அவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுச் செயலாளராக, எங்கள் தலைவராக வீற்றிருந்த போது, பொதுக் குழுவைக் கூட்டி, இந்த நாட்டினுடைய ஒருமைப்பாட்டிற்கும், ஒற்றுமைக்கும் நாம் என்றைக்கும் உதவியாக இருக்க வேண்டுமென்ற கருத்தை வலியுறுத்தி, திராவிட நாடு பிரிவினையை, கோரிக்கையைக் கைவிட்டாயிற்று.

நான் திரு.அழகிரி அவர்களுக்கும், மற்றவர்களுக்கும் உறுதியாகச் சொல்கிறேன். நாங்கள் கைவிட்டது மாத்திரமல்ல, அந்தப் பிரிவினையைக் கோரி, யார் குரல் கொடுத்தாலும், அவர்களை நாங்கள் நிச்சயமாக அடக்கியே தீருவோம் என்பதை இந்த அவையிலே நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். இது, திரு.அழகிரி அவர்களுக்கும், அவருடைய கட்சியினருக்கும், நாட்டு மக்களுக்கும் நான் தருகின்ற உறுதி மொழியாகும்.

இப்போது, வீரப்பனுடைய இந்தப் பிரச்சினையில் கொஞ்சம் நாம் பின்னோக்கிச் சென்று, இன்றைய நிலைக்கு வரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

1978–ஆம் ஆண்டு, கர்நாடக மாநிலத்திலே, இராமாபுரம் காவல் நிலைய எல்லையில், பரமசிவம் என்பவரைக் கொலை செய்ய குரூப்பன் என்பவருக்கு உதவி செய்ததிலே தொடங்கி, கடந்த 22 ஆண்டுகளிலே 124 பேரைக் கொலை செய்ததாக வீரப்பன் மீது 156 வழக்குகள் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன. வழக்குகள் பதிவு செய்யப்பட்டுவிட்ட காரணத்தினாலேயே குற்றவாளி என்ற வாதம் சரியல்ல. அப்படியே

வீரப்பன் மீது குற்றப்பத்திரிகை வாசிக்கப்பட்டு, வீரப்பன் தண்டிக்கப்பட்டாலும்கூட, மேல்கோர்ட் இருக்கிறது என்கின்ற சமாதான வாதம்கூட இன்றைய அரசியல் சூழ்நிலையிலே எழலாம். நான் அதைப்பற்றிக் கவலைப்படாமல் செய்திகளை வரிசைப்படுத்திச் சொல்கின்றேன்.

வீரப்பன், கர்நாடகாவிலே 1986–ஆம் ஆண்டு ஒரு முறை பிடிபட்டதாகவும், வனத்துறை பயணியர் இல்லத்திலே சில நாட்கள் கைதியாக வைக்கப்பட்டிருந்ததாகவும், பெங்களூரிலே, சார்க் மாநாடு நடைபெற்ற நேரத்தில் காவல் துறையினுடைய முழுக் கவனமும் அது தொடர்பான பாதுகாப்பு ஏற்பாடுகள் மீது இருந்த காரணத்தால், வீரப்பன் தப்பிச் சென்று விட்டதாகவும் ஒரு செய்தியும் உண்டு.

தமிழகத்திலே வீரப்பன் குழுவினர் நடத்திய சம்பவங்களை மாத்திரம் வரிசைப்படுத்திப் பார்த்தால் 14.7.1987; அப்போது திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி இல்லை. நான் எந்த ஒரு ஆட்சியையும் குறை சொல்வதற்காகச் சொல்லவில்லை. வரலாற்று விவரங்களை சொல்வதற்காக இதைக் குறிப்பிடுகின்றேன்.

14.7.1987 அன்று வீரப்பன் குழுவினர், சத்தியமங்கலம் வன அலுவலர் சிதம்பரம் என்பவரைச் சுட்டுக் கொலை செய்தார்கள்.

7.8.1989 அன்று தமிழ்நாடு பர்கூர் காவல் நிலைய எல்லையில், வனக் காவலர் பழனிச்சாமி, வாச்சர் சுப்பிரமணியம் மற்றும் மஸ்தி என்ற நபர் ஆகிய மூவரையும் வீரப்பனுடைய கும்பல் கொலை செய்தது.

1991–ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் பெண்ணாகரத்திலே இருக்கின்ற இந்தியன் வங்கியைக் கொள்ளையடிக்க வீரப்பன்

தலைமையிலே ஒரு குழு சென்றபோது, அந்த வங்கியைக் கொள்ளையடிக்கக்கூடும் என்ற தகவலின் அடிப்படையில், அங்கே போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டிருந்தபோதும்கூட, வீரப்பன் ஒரு காவலரைச் சுட்டுக் கொன்றுவிட்டு, 303 என்ற துப்பாக்கி ஒன்றையும் திருடிக் கொண்டு தப்பிச் சென்றுவிட்டான். ஆயுதம் தாங்கிய காவலர்களை நேருக்கு நேர் சந்தித்தும், வீரப்பன் தப்பிச் சென்ற இந்தச் சம்பவம் 4.7.1991 அன்று நடைபெற்றது.

1993–இல் வீரப்பன் கும்பலால் வைக்கப்பட்டிருந்த கண்ணிவெடிகள் வெடித்ததில், சுரைக்காய்மடுவு என்ற இடத்தில் ஐந்து காவலர்கள் உட்பட 22 பேர் மாண்டார்கள். இதில் காவல்துறை கண்காணிப்பாளர் எஸ்.பி.கோபாலகிருஷ்ணன் படுகாயம் அடைந்தார்.

கடந்த ஆட்சியில் 3.12.1994 அன்று வீரப்பன் காவல்துறை துணை கண்காணிப்பாளர் சிதம்பரநாதன் உட்பட மூன்று பேரைக் கடத்திச் சென்றபோது, அவர்களை விடுவிக்க வீரப்பன் விதித்த நிபந்தனை என்ன தெரியுமா? அதிரடிப் போலீசை வாபஸ் பெற வேண்டும். வீரப்பனைத் தேடும் பணியைக் கைவிட வேண்டும். வீரப்பனுடைய அண்ணன் மாதய்யனை விடுதலை செய்ய வேண்டும். வீரப்பன் சரணடைந்தால் அவன் மீது வழக்குப் போடவே கூடாது. இதுதான் நிபந்தனை.

ஆனால், இதைப் பற்றி 4.12.1994 அன்று அரசு சார்பில் கோவை மாவட்ட கலெக்டர் விடுத்த அறிக்கையில், வீரப்பனால் கடத்தப்பட்டிருக்கிறவர்களுடைய உயிரைக் காப்பாற்றுவதுதான் முக்கியம், எனவே, வீரப்பனைத் தேடும் பணி, வீரப்பனுடைய நிபந்தனைகளின்படி நிறுத்தப்பட்டு விட்டது என்று தெரிவித்தார்.

6.12.1994 அன்று அரசாங்கத்தின் சார்பில் கோவை மாவட்ட ஆட்சியர் மீண்டும் கூறியது: "வீரப்பனிடமிருந்து எனக்குச் செய்தி வந்துள்ளது. அந்தச் செய்தியிலே வீரப்பன் கேட்டுக்கொண்டபடி வீரப்பனோ, அவரது பிரதிநிதியோ என்னைச் சந்திக்கலாம். அவருக்கு எந்த ஆபத்தும் ஏற்படாது என்ற உறுதி அளிக்கப்படுகிறது. மேலும் பணயமாக பிடித்து வைக்கப்பட்டிருப்பவர்களுக்குத் தேவையான உணவுப் பொருளைக் கொண்டு செல்ல தடை எதுவும் இருக்காது. அதற்கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டு விட்டன. வீரப்பனுடைய ஆட்கள் மலைக் கிராமங்களுக்கு நேரிலே வந்து, எவ்விதத் தடையும் இல்லாமல் உணவுப் பொருளை எடுத்துச் செல்லலாம். அதற்குத் தடை கிடையாது"

கலெக்டர் இதைக் சொல்லும் போது, ஒரு நிருபர் குறுக்கிட்டு, "வீரப்பனுடைய தூதுவன் வர அரசுத் தரப்பில் வாகன வசதி செய்து கொடுக்கிறீர்களே, இந்த நிலையிலே தூதுவன் துப்பாக்கியுடன் வந்து பேசுகின்றானே, இது சரியா ?" என்று கேட்கிறார்.

கலெக்டர் சொல்கிறார், "அவர் சொந்த பாதுகாப்புக்குத் துப்பாக்கியுடன் வருகிறார். காரணம் அவர் காட்டுக்குள் போகிறார், வருகிறார், எனவே துப்பாக்கி ஏந்துகிறார்" என்று கலெக்டர் செய்தியாளர்களுக்கு பதில் அளித்தது, அன்றைய செய்தி ஏடுகளிலே வந்திருக்கிறது.

அப்போது தலைமைச் செயலாளராக இருந்த அரிபாஸ்கர் விடுத்துள்ள செய்தியில் "வீரப்பனுடைய தளபதி பேபி இரண்டு கோரிக்கைகளைச் சொன்னார். ஒன்று வீரப்பன் கோஷ்டியினர் காட்டுக்குள் உணவு கொண்டு வரும் போது, எவ்வித துன்புறுத்தலுக்கும் ஆளாகக் கூடாது. மற்றொன்று, சிறையிலே உள்ள வீரப்பன் கோஷ்டியை தளபதி பேபி

பார்க்க அனுமதிக்கப்பட வேண்டும்''. (மாவீரன் என்று நம்முடைய சட்டமன்ற உறுப்பினர்கள் இங்கே சொல்லிவிட்டதற்குக் கோபித்துக் கொண்டோம். சொல்லலாமா என்று எனக்கெல்லாம்கூட சந்தேகம் ஏற்பட்டது. ஆனால், அன்றைக்கு தலைமைச் செயலாளரே சொல்கிறார், தளபதி பேபி என்று!) மேலும் அரிபாஸ்கர் ''இந்த நிபந்தனைகள் நிறைவேற்றப்பட்டால், மற்ற கோரிக்கைகள் பிறகு தெரிவிக்கப்படும்'' என்று பேபி கோவை கலெக்டரிடம் கூறியிருக்கிறார். மேலும், ''இந்தக் கோரிக்கைகளை அரசு பரிசீலனை செய்து வருகிறது. இப்போது அரசினுடைய மிக முக்கியமான முன்னுரிமை கடத்தப்பட்ட போலீஸ் அதிகாரிகளையும், மற்றவர்களையும் மீட்பதுதான். விசேஷ அதிரடிப்படையின் பணிகள் நிறுத்தப்பட்டு விட்டன, இந்தப் படைகளை அனுப்பினால் வீரப்பன் போலீஸ் அதிகாரிகளையும் மற்றவர்களையும் கொன்றுவிடக் கூடும். பேச்சுவார்த்தை முடிந்து, பேபி வீரப்பன் மீண்டும் காட்டுக்குள் செல்ல முழு பாதுகாப்பும் அளிக்கப்படும்''.

இதற்குப் பிறகு, வீரப்பன் தம்பி அர்ஜுனன் செய்தியாளர்களிடம் பேசுகிறார் :

''நாங்கள் சரண் அடைய மாட்டோம். தண்டனை அனுபவிக்க மாட்டோம். எங்களுக்கு மன்னிப்புக் கொடுத்து, ஜனாதிபதி எழுத்து மூலம் உத்தரவு கொடுக்க வேண்டும். அப்போதுதான் ஆயுதங்களை ஒப்படைப்போம்.''

இதற்கு மீண்டும் தலைமைச் செயலாளர் சொல்கிறார், ''ஒரு அடிப்படை விஷயத்தை நாம் மறந்துவிடக்கூடாது. இது உயிர்கள் சம்பந்தப்பட்ட விஷயம், போலீஸ் துணை கண்காணிப்பாளர் மற்றும் இரண்டு நபர்களை நாம் மீட்க வேண்டும்'' என்று தலைமைச் செயலாளர் அப்போதும் சொல்கிறார்.

கேள்வி கேட்கிறார்கள் செய்தியாளர்கள், "வீரப்பன் இருக்குமிடம் அரசுக்குத் தெரியுமா?" அரிபாஸ்கர் சொல்கிறார், "வீரப்பன் இருக்குமிடம் அரசுக்குத் தெரியும். ஆனால், 3 பேர்களை மீட்க அரசு பேச்சுவார்த்தை நடத்திக் கொண்டிருக்கிறது".

இதிலே அப்போது கடத்தப்பட்ட சிதம்பரநாதனைக் கூட போலீஸ் மீட்டதா, தானாக வந்து விட்டாரா என்கின்ற செய்தி அப்போது வந்தது. தானாகவே ஓடி வந்துவிட்டேன் என்று சிதம்பரநாதன் சொன்னது உறுப்பினர்களுக்கெல்லாம் நினைவிருக்கும் என்று நான் கருதுகின்றேன்.

பிறகு **1.1.1995** அன்று ஈரோடு மாவட்டம் பர்கூர் காவல் நிலைய எல்லையில் வீரப்பன் குழு ராஜேந்திரன், சுப்பிரமணியம் என்ற இரு காவலர்களையும், உடையார் என்ற வாட்சரையும் கடத்திச் சென்றது. **17.2.1996** அன்று ஈரோடு மாவட்டம், ஆசனூர் காவல் நிலைய எல்லையில் ஆரேபாளையத்தில் வீரப்பன் குழு மறைந்திருந்து நடத்திய துப்பாக்கிச் சூட்டில் காவல்துறை கண்காணிப்பாளர் தமிழ்ச்செல்வன் காயமுற்று, அவரது கைவிரல்கள் துண்டிக்கப் பட்டன. செல்வராஜ் என்ற தலைமைக் காவலர் அந்தத் துப்பாக்கிச் சூட்டில் உயிரிழந்தார்.

இதற்குப் பிறகு திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் **12.7.1997** அன்று வீரப்பனும், கூட்டாளிகளும் கர்நாடக வனத்துறையைச் சார்ந்த **9** நபர்களைப் பிடித்து வைத்துக் கொண்டு, தனக்கும் தன்னுடைய கூட்டாளிகளுக்கும் பொது மன்னிப்பு உள்ளிட்ட சில சலுகைகளை வழங்கினால் மட்டுமே, அவர்களை விடுவிக்க முடியும் என்று கூறிவிட்டார்கள். தமிழக அரசும், கர்நாடக அரசும் பிடிபட்ட நபர்களுடைய உயிருக்கு ஆபத்து என்று கருதி, வீரப்பன் சரண் அடைவது குறித்து

கர்நாடக மாநில முதலமைச்சர் மற்றும் அவரது குழுவினரோடு சென்னையில் 19.8.1997 அன்று நான் கலந்துரையாற்றிய போது எடுத்த முடிவுகளில் ஒன்றுதான் வீரப்பன் சம்பந்தப்பட்ட வழக்குகளில் புலன் விசாரணையின்போது கைது செய்யப்பட்டவர்கள் மீது எந்தவிதமான தனிப்பட்ட குற்றச்சாட்டு இல்லையென்றால், அவர்கள் விடுவிக்கப்பட வேண்டும் என்பதாகும். அதைத்தான் நண்பர் சந்தானம் அவர்கள் இங்கே சொன்னார். அந்தப் பேச்சுவார்த்தையில் அந்தக் கைதிகள் எல்லாம் விடுவிக்கப்பட வேண்டும் என்ற ஒரு நிபந்தனையும் விதிக்கப்பட்டது என்று சொன்னார்கள். ஏதாவது குறிப்பிட்ட குற்றச்சாட்டுகள் அவர்கள் மீது இருக்குமேயானால், அது உடனடியாக ஆய்வு செய்யப்பட்டு ஒரு முடிவு எடுக்கப்படும். மேலும் அனைவரையும் சட்டப்படி ஜாமீனில் விடுதலை செய்யப்படும் என்பதாகும்.

இந்த முடிவு அப்போது எல்லா ஏடுகளிலும் வெளியிடப்பட்டது. இந்த முடிவின் அடிப்படையில் தமிழக அரசின் சார்பில் 9.10.1997 அன்று கர்நாடக மாநில முதலமைச்சருக்கு நான் எழுதிய கடிதத்தில் 19–ஆம் தேதி நடைபெற்ற பேச்சுவார்த்தையின் போது எடுக்கப்பட்ட முடிவை நினைவுபடுத்தி கர்நாடக சிறையிலே இன்னமும் ஏராளமானவர்கள் அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்றும் கர்நாடக அரசு அதிகாரிகளுக்குத் தகுந்த அறிவுரை கூறி உடனடியாக அவர்களை விடுவிப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும் என்றும் எழுதியிருந்தேன்.

இதைத் தொடர்ந்து 11.10.1997 அன்று நம்முடைய தலைமைச் செயலாளர் மத்திய உள்துறை அமைச்சரோடு தொலைபேசியில் பேசியதோடு, நமது அரசின் சார்பில் மத்திய அரசுக்கு எழுதிய கடிதத்திலும் 19.8.1997 அன்று இரண்டு மாநில அரசுகளிடையே

நடைபெற்ற பேச்சுவார்த்தையின் விவரத்தைத் தெரிவித்து கர்நாடக அரசினால் தடா சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்ட 121 பேர்களில் 70 பேர் நிபந்தனை ஜாமீனில் வெளிவந்துவிட்டார்கள் என்றும், 51 பேர் இன்னமும் சிறையிலே அவதிப்பட்டுக் கொண்டிருப்பதாகவும் விளக்கியதோடு அவர்களுடைய விடுதலைக்கு உதவி செய்ய வேண்டுமென்று தெரிவிக்கப்பட்டது.

இந்தத் தடா சட்டத்தைப் பற்றி குறிப்பாக நம்முடைய கம்யூனிஸ்ட் கட்சியினுடைய உறுப்பினர்கள் என்ன கருத்து கொண்டிருக்கிறார்கள் என்பதை நன்றாக அறிவேன். முற்போக்கு எண்ணம் உடைய எந்தக் கட்சிக்காரர்களும் தடா சட்டத்தை ஆதரிப்பதில்லை என்பதையும் நான் நன்றாக அறிவேன். ஆனால் இந்தத் தடா சட்டம் யார் மீது பாய்ந்தது என்றால் உள்ளபடியே தீவிரவாதிகள் மீது பாய்ந்து அதன் காரணமாக அவர்கள் மைசூர் சிறையில் அடைக்கப்பட்டார்களா என்றால் இல்லை. சாதாரண ஏழை, எளிய, பஞ்சைப் பராரிகள் – நீங்கள் இப்பொழுது கூட டி.வி.யிலே அவர்கள் காட்சியாக காட்டப்படும் போது கவனித்திருப்பீர்கள். எப்படிப்பட்ட பெண்கள், எத்தகைய தாய்மார்கள், எவ்வளவு வயதான கிழடு கட்டைகள் எல்லாம் அந்தச் சிறையில் இருக்கிறார்கள் என்பதை நாம் தெரிந்து கொள்ள முடியும்.

அதனால் தான் அழகிரி அவர்கள் கூட கேட்டார்கள். பிறகு எந்த முயற்சியாவது எடுத்தீர்களா; அவர்களை விடுவிப்பதற்கு என்று கூட கேட்டார்கள். பலமுறை முயற்சி எடுக்கப்பட்டது. ஒவ்வொரு முறையும் நான் தொலைபேசியிலே பேசும் போதெல்லாம் பார்க்கிறோம், பார்க்கிறோம் என்று அன்றைக்கிருந்த கர்நாடக முதலமைச்சர் எனக்கு உறுதியளித்தார்.

ஒரு ஆண்டுக்கு மேலாகியும் கூட கர்நாடக அரசு எந்தவிதமான நடவடிக்கையும் இதிலே எடுக்கவில்லை என்பதால் 21.11.1998 அன்று மீண்டும் கர்நாடக முதலமைச்சருக்கு ஒரு நேர்முகக் கடிதம் நான் எழுதியிருக்கிறேன். அந்தக் கடிதத்திலும் இந்த விவரங்களை எல்லாம் குறிப்பிட்டு நாம் அப்பொழுதே பேசியிருக்கிறோம், அதன்படி அவர்களை விட்டுவிட வேண்டும் என்று. ஏனென்றால் அந்த வன அதிகாரிகளை, கர்நாடக வன அதிகாரிகளை வீரப்பன் விட்டாகி விட்டது. விட்ட பிறகு நக்கீரன் கோபால் அவர்களுடைய முயற்சியால் அவர்கள் விடுபட்ட பிறகும் இவர்கள் விடுவிக்கப்படவில்லை. அதை ஞாபகப்படுத்தித்தான் நான் பல முறை அவருக்குக் கடிதம் எழுதினேன். ஆனால் எந்தவிதமான பயனும் ஏற்படவில்லை.

தொடர்ந்து 11.1.1999, 23.2.1999, 28.3.1999, 5.5.1999, 28.5.1999 ஆகிய நாட்களில் நினைவூட்டல் கடிதங்கள் என்னாலேயே கர்நாடக அரசுக்கு எழுதப்பட்டன. கர்நாடக அரசின் சார்பில் முதலமைச்சராக இருந்த ஜே.எச்.பட்டீல் 28.5.1999 அன்று எழுதிய கடிதத்தில், வீரப்பன் சரணடையும் பட்சத்தில்தான் அந்தக் கைதிகளை விடுவிப்பதாக ஒப்பந்தம் செய்யப்பட்டது. சரணடையாத பட்சத்தில் இந்தக் கேள்வி எழவில்லை என்று அதற்குப் பதில் எழுதிவிட்டார்.

இத்தடா கைதிகள் விஷயத்தில் யாரோ ஏழை எளியவர்கள், அப்பாவி மக்கள் தடா சட்டத்தின்படி கைது செய்யப்பட்டிருக்கும்போது வீரப்பன் சரணடைவதைப் பற்றிய பிரச்சினையே கிடையாது. இதை வீரப்பன் ஒரு நிபந்தனையாக இப்பொழுது வைத்தான். அதைத் தவிர வேறு ஒன்றும் இல்லை. அதைக் காரணமாகக் காட்டி அவர்களை விடுதலை செய்வது என்ற கேள்வியே எழவில்லை என்று பதில் தெரிவித்து விட்டார். இப்பொழுது வீரப்பனுக்கு அதுதான் பெரிய கோரிக்கையாக ஆகிவிட்டது

என்பதை உறுப்பினர்கள் எல்லாம் மிக நன்றாக அறிவீர்கள். தமிழக எல்லையைப் பொறுத்தவரையிலே மாத்திரம் நாம் எடுத்துக் கொண்டால் இங்கே ஒன்றுமே செய்யவில்லை என்று நம்முடைய அ.தி.மு.க தலைவர் இங்கே பேசினார்.

1990 ஆகஸ்ட் முதல் 1996 மே வரையில் தமிழக எல்லையிலே மாத்திரம் வீரப்பனால் கொலை செய்யப்பட்டவர்கள் 63 பேர். 1996– இல் இந்த ஆட்சி வந்த பிறகு ஜூன் முதல் இதுவரை மூன்றே பேர் தான் கொலை செய்யப்பட்டிருக்கிறார்கள். தமிழக போலீஸாரால் கைது செய்யப்பட்ட வீரப்பனைச் சேர்ந்தவர்கள் என்றால் யாரும் தவறாக கருதிக் கொள்ளக் கூடாது. வீரப்பன் ஒரு படை வைத்திருப்பதாகவும் அந்தப் படையிலே 150 பேரோ 200 பேரோ இருப்பதாகவும் யாரும் கருதிக் கொள்ளக் கூடாது. அந்தக் காட்டிலேயிருக்கின்ற மக்களிலே பல பேர் வீரப்பனுக்கு உதவி செய்யக்கூடியவர்கள், அவர்களுடைய எண்ணிக்கையைத் தான் நான் சொல்கிறேன். அந்த எண்ணிக்கையிலே 1991 ஆகஸ்ட் முதல்1996 மே வரையிலே 121 பேர் கைது செய்யப்பட்டார்கள் அந்த ஆட்சியிலே. 1996 ஜூன் முதல் இதுவரையில் இந்த ஆட்சியில் 135 பேர் கைது செய்யப்பட்டிருக் கின்றார்கள். இந்த விவரங்களையும் இந்த அவைக்கு அளிப்பது என்னுடைய கடமை என்பதால் அளித்து விட்டேன்.

ஏதோ முன்னால் இருந்த டி.ஜி.பி. கூறிய கருத்துக்களையும் அவர் எவ்வளவு சாதனைகளைப் புரிந்தார் ஏ்ன்பதையும் இங்கே அ.தி.மு.க. கட்சித் தலைவர் சுந்தரம் எடுத்துச் சொன்னார். இதைப் பற்றி நான் சொல்வதைவிட கடந்த ஆட்சியில் செல்வி ஜெயலலிதா முதலமைச்சராக இருந்தபோது டி.ஜி.பி.யாக இருந்து, ஓய்வு பெற்ற பிறகு 'நான் சமாளித்த

சவால்கள்'' என்று வைகுந்த் அவர்கள் எழுதியுள்ள பெரிய புத்தகத்தில் இந்தக் கேள்விகளுக்கெல்லாம் அவர் பதிலளித்திருக்கிறார்.

*அவர் சொல்கிறார், ''வீரப்பனைப் பிடிக்கும் பொதுவான வழிமுறைகளை வகுக்கும் பொருட்டு **10.5.1995** அன்று அன்றைய கர்நாடக முதல்வர் தேவகௌடாவும் தமிழக முதல்வர் ஜெயலலிதாவும் இரண்டு மாநில அதிகாரிகளோடு பேச்சுவார்த்தை நடத்தினார்கள். வீரப்பனைப் பிடிக்க மேற்கொள்ளப்படும் முயற்சிகளைப் பொறுத்தவரையில் அவன் மறைந்திருக்கும் பகுதி மிகவும் அடர்ந்த காட்டுப் பகுதி என்பதால் அதற்குள் நுழைந்து அவனைப் பிடிப்பது அவ்வளவு எளிதான காரியமல்ல என்பதையும் நாம் முதலில் ஒத்துக் கொள்ள வேண்டும். அதோடு அந்த அடர்ந்த காட்டுப்பகுதி தமிழ்நாட்டில் **5** மாவட்டங்களையும் கர்நாடக மாநிலத்திலே மைசூர் மாவட்டத்திலும் சுமார் **6000** சதுர கிலோ மீட்டர் பரப்பளவில் அமைந்திருக்கும் ஒரு பகுதியாக இருக்கிறது. மேலும், வீரப்பனும் அவன் கும்பலைச் சேர்ந்தவர்களும் நவீன ஆயுதங்களை வைத்திருக்கிறார்கள் என்பதும், கண்ணி வெடி வைப்பதில் அவன் நிபுணத்துவம் பெற்றிருப்பதும் அவன் அந்தப் பகுதியிலேயுள்ள பணக்காரர்களை மிரட்டிப் பண வசூல் செய்து வருகிறான் என்பதும் தெரிய வந்தது. (இதையெல்லாம் வைகுந்த் அவர்கள்தான் சொல்கிறார்கள்)*

*''இதுபோன்று மலைப் பகுதிகளில் நடவடிக்கை எடுக்கும் போது வழக்கமாகப் பின்பற்றப்பட வேண்டிய இராணுவ நடவடிக்கையை ஒத்த வழிமுறைகள் இங்கே கடைபிடிக்கப் படவில்லை. மேலும், காவல்துறை நடவடிக்கையின்போது*

*அப்பாவி மலைவாசிகள் துன்புறுத்தப்படுவதைத் தடுக்க எவ்வித முயற்சியும் மேற்கொள்ளப்படவில்லை".*

*"வீரப்பனுக்கு எதிராக எடுக்கப்பட்டிருந்த நடவடிக்கையில் முக்கிய தகவல்களைச் சேகரிக்க எந்த வகையான முயற்சிகளும் மேற்கொள்ளப்படவில்லை. மக்களுக்கு வீரப்பன் மீது ஒரு 'ராபின் குட்' போன்றதொரு நல்ல கருத்து இருந்து வந்தது. தனது எதிரிகளை அரக்கத்தனமாக தயவு தாட்சண்யம் இல்லாமல் கொலை செய்யும் அவன் ஏழை மலைவாசிகளுக்கு எப்போதுமே உதவி செய்து கொண்டிருக்கிறான். ஆகவே பயம் காரணமாகவும், மரியாதை காரணமாகவும் மக்கள் அவனைப் பற்றிய தகவல்களைக் கொடுக்க முன்வராமலே இருந்துவிட்டார்கள். ஆனால் துரதிர்ஷ்டவசமாக அப்பாவி மலைவாழ் மக்கள் துன்புறுத்தப்படுகிறார்கள். சில சமயம் பெண்கள் மானபங்கப்படுத்தப்படுகிறார்கள் அல்லது கற்பழிக்கப் படுகிறார்கள் என்ற அவப்பெயரைக் காவல் துறையினர் சம்பாதித்திருக்கிறார்கள். இந்தக் காரணத்தினால் தான் வீரப்பனுக்கெதிராக காவல்துறை எடுத்துவரும் நடவடிக்கையில் மக்களுடைய ஆதரவையும் ஒத்துழைப்பையும் அவர்களால் பெற முடியவில்லை.*

*இதில் கவனிக்கத்தக்க வேறொரு விஷயம் என்னவென்றால், வீரப்பனுக்கெதிராக எடுக்கப்படும் நடவடிக்கையில் ஏற்பட்டுள்ள ஒரு சிறிய அளவு முன்னேற்றத்தைக் கூட பெரிய அளவிலே விளம்பரப்படுத்தி விடும் ஒரு போக்கு உயர் அதிகாரிகள் மத்தியில் காணப்பட்டது. அனைத்து முன்னேற்றங்களுக்கும் கிடைக்க வேண்டிய பெருமை முழுவதையும் உயர் அதிகாரிகளே*

எடுத்துக் கொள்வதால், சார்நிலை அதிகாரிகளுக்கு மன உறுதி பாதிக்கப்படும் நிலைமை ஏற்பட்டது. இதன் காரணமாகப் பொதுமக்களைப் பொறுத்தவரையில் காவல்துறையின் செயல்பாடுகள் நகைப்பிற்குரியதாக ஆகிவிட்டன. ஆகவே, வீரப்பன் விவகாரம் குறித்து, ஆழமாக, ஆராய்ந்து மேலே கூறிய பொருள்பட ஒரு விரிவான அறிக்கையைத் தயார் செய்து ஜெயலலிதா அவர்களிடம் நான் கொடுக்க அதை அவர் அந்தக் கூட்டத்திலேயே படித்தார். தேவாரம் அவர்கள்அதற்கு மறுப்புத் தெரிவிக்க முயன்ற போது, தேவகௌடா அவர்கள் குறுக்கிட்டு, "தேவாரம் அவர்களே, நாங்கள் எப்போதும் பெங்களூரில்தான் இருக்கிறோம். அவ்வகையில் உங்களை எங்களுக்குத் தெரியாது. ஆனால் நீங்கள் போர் உடையுடன் கையில் ஏ.கே.47 துப்பாக்கி வைத்துக் கொண்டிருப்பதைப் போன்ற புகைப்படங்கள் மட்டும் அடிக்கடி பத்திரிகையிலே வருவதால் தான் நீங்கள் யார் என்று எங்களுக்குத் தெரிகிறது. மேலும் ஒவ்வொரு முறையும் நீங்கள் காட்டுப் பகுதிக்குப் போகும் போதும் வீரப்பன் மற்றும் அவனுடைய ஆட்களால் கொல்லப்பட்ட காவல்துறையினர் உடல்கள் மீது மலர் வளையம் வைக்கத்தான் போகிறீர்களோ என்ற ஐயம் ஏற்படும் வகையில் இதுவரையில் உங்களால் வீரப்பனைப் பிடிக்க முடியவில்லை" என்று உறுதியான குரலில் தேவகௌடா தெரிவித்தபோது, தேவாரம் பதில் பேசாமல் மௌனமானார்.

வீரப்பன் கும்பலைச் சேர்ந்தவர்களுடைய எண்ணிக்கை 150–லேயிருந்து வெறும் 5 ஆகக் குறைக்கப்பட்டு விட்டது என்பது போல ஒரு பேச்சு அப்போது அடிபட்டு வந்தது. இது போலீஸ் தரப்பில் தரப்படும் புள்ளி விவரமே தவிர இதில் ஒன்றும் உண்மை கிடையாது"

என்று வைகுந்த் அவர்கள் அந்தப் புத்தகத்திலே எழுதியிருக்கிறார். மேலும்,

*“இப்போதும் வீரப்பனிடமிருந்து நம்மைக் காப்பாற்றிக் கொள்ளும் நிலையில்தான் இருக்கிறோம். இது மிகவும் வெட்கக் கேடானது என்றாலும் இதுதான் இன்றுள்ள நிலைமை. வீரப்பனைக் கண்டுபிடிக்கக் காவல்துறையால் முடியவில்லை என்பதைப் பொதுமக்கள் கேவலமாகப் பேசுவது குறித்து ஜெயலலிதா அவர்கள் நன்றாகவே அறிந்திருந்தார்கள்.*

*ஆர்.எஸ்.எஸ். அலுவலகக் குண்டு வெடிப்பு வழக்கில் சம்பந்தப்பட்டிருந்த முஸ்லீம் தீவிரவாதி இமாம் அலியைப் பிடிப்பது குறித்து ஒருமுறை விவாதம் நடந்தபோது முதல்வர் ஜெயலலிதா தேவாரத்தைப் பார்த்துக் கேட்டார், “தேவாரம் அவர்களே, வீரப்பனைப் பிடிப்பது பற்றித்தான் நீங்கள் பல கற்பனைக் கதைகளைக் கூறி வந்திருக்கிறீர்கள். இந்த இமாம் அலியையாவது பிடிக்கப்பாருங்கள்” என்று கிண்டலாகக் கூறியதை இங்கு நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்”*

என்று வைகுந்த் அவர்கள் அந்த நூலிலே விஸ்தாரமாக எழுதியிருக்கின்றார்.

இன்னொன்று; இந்த அரசை, முதலமைச்சரை அல்லது போலீஸ் இலாகாவைக் குறை கூறிப் பேசும் எதிர்க்கட்சிகளிலே பெரும் எதிர்க் கட்சி. தமிழ்நாட்டிலே இன்றைய நிலையிலே, அந்தக் கட்சியினுடைய சார்பிலே இங்கே பேசிய சுந்தரம் ஆகட்டும் அல்லது வெளியிலே இருக்கின்ற அதனுடைய தலைவர்களாகட்டும், என்ன பேசுகிறார்கள் ?

ஏன் சர்வ கட்சிக் கூட்டங்களைக் கூட்டவில்லை என்கிறார்கள். நல்ல கேள்வி. ஏனென்றால் சர்வ கட்சிக் கூட்டங்களைக் கூட்டிக் கூட்டிப் பழகியவன் நான், பழக்கப்பட்டவன் நான். எந்த ஒரு விஷயத்திற்கும் அனைத்துக் கட்சிக் கூட்டத்தைக் கூட்டியிருக்கிறோம். காவிரிப் பிரச்சினையாகட்டும், அல்லது வேறு எந்தப் பொதுப் பிரச்சினையாகட்டும் அனைத்துக் கட்சிக் கூட்டத்தைக் கூட்டி நானே கையெழுத்திட்டு, சர்வ கட்சித் தலைவர்களுக்குக் கடிதம் அனுப்பி, செயலாளரை விட்டல்ல, நானே கையெழுத்திட்டு கூட்டத்திற்கு வரவேண்டுமென்று சொல்லி நானே டெலிஃபோனில் அழைத்து, நானே வாசலில் சென்று வரவேற்று சர்வ கட்சிக் கூட்டங்களை நடத்திப் பழக்கப்பட்டவன்தான் இந்தக் கருணாநிதி என்பதிலே எந்த சந்தேகமும் தேவை இல்லை.

ஆனால் இந்தப் பிரச்சினை எவ்வளவு பெரிய சிக்கலானது என்பதை அறிவீர்கள். காவிரிப் பிரச்சினையிலே சொன்னார்கள்.கருணாநிதி துரோகம் செய்துவிட்டு சர்வ கட்சிக் கூட்டத்திற்கு எங்களை அழைக்கிறார் என்று சொன்னார்கள். கூட்டத்திற்கு வருகின்றவர்கள் சர்வ கட்சிக் கூட்டத்திலே எடுத்த முடிவுகளை ஏற்றுக் கொண்டிருக்கிறார்களா என்றால் இல்லை.

சாதி, மத சண்டையின்போது ஒரு அனைத்துக் கட்சிக் கூட்டம் நடைபெற்றது. அந்தக் கூட்டத்திலே ஒரு அருமையான கருத்தை மக்கள் தலைவர் மூப்பனார் அவர்கள் சொன்னார்கள். அந்தக் கருத்தை எல்லோரும் ஏற்றுக் கொண்டோம். மாவட்டங்களுக்குத் தலைவர்களுடைய பெயரை வைக்க வேண்டாம், பேருந்து கழகங்களுக்கு தலைவர்களுடைய பெயரை வைக்க வேண்டாம் என்று மூப்பனார் அவர்கள் சொல்லி அதை எல்லாக் கட்சிக்காரர்களும் ஏற்றுக் கொண்டு உடனடியாக இந்த அரசு அதை அமல்படுத்தியது. நீங்கள்

யாரும் அதை மறந்திருக்க முடியாது. இன்றைக்கும் அது நடைமுறையில் இருக்கிறது.

ஆனால் அந்த சர்வ கட்சிக் கூட்டத்திலே கலந்து கொண்ட அ.தி.மு.க. அதைப் பின்பற்றுகிறதா ? இன்றைக்கும் சிவகங்கை மாவட்டம் என நாம் மாற்றி விட்டோம். சர்வ கட்சிக் கூட்டத்திலே எடுத்த முடிவுபடி. ஆனால் அவர்கள் இன்றைக்கும் பசும்பொன் தேவர் மாவட்டம் என்றுதான் அழைத்துக் கொண்டிருக்கிறார்கள். பிறகு சர்வ கட்சிக் கூட்டத்திற்கு என்ன மதிப்பு இருக்கிறது என்று நான் உங்களைக் கேட்க விரும்புகின்றேன்.

அது ஒரு பெரிய கட்சி, நான் இல்லையென்று மறுக்கவில்லை. இன்றைக்குப் பிரதான எதிர்க்கட்சி த.மா.கா. இருக்கிறது. தமிழ் மாநில காங்கிரஸ். ஆனால் வெளியிலே ஒரு பெரிய கட்சி எதிர்க்கட்சி என்ற இன்றைய அளவிலே வடிவமைத்துக்காட்டப்படுகின்ற ஒரு கட்சி அ.தி.மு.க. அந்த அ.தி.மு.க. சர்வ கட்சிக் கூட்டத்திலே கலந்து கொண்டு எல்லோரும் இணைந்து ஏற்றுக் கொண்ட ஒரு முடிவை இன்றைக்கு அமல்படுத்துகிறதா என்றால் இல்லை.

திருவாரூர் மாவட்டத்தைப் பன்னீர்செல்வம் மாவட்டம் என்றுதான் அழைக்கிறார்கள். அதைப் போலத்தான் அம்பேத்கர் மாவட்டம் என்றுதான் வேலூர் மாவட்டத்தை அழைக்கிறார்கள். அவர்களுடைய செய்திகளிலே, அவர்களுடைய விளம்பரங்களிலே அப்படித்தான் வந்து கொண்டிருக்கிறது. சர்வ கட்சிக் கூட்டத்தினுடைய முடிவை அவர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை.

அதுபோல காவிரிப் பிரச்சினைக்கு நாம் சர்வ கட்சிக் கூட்டத்தைக் கூட்டினோம். அதிலே நாம் எல்லாம் சேர்ந்து எடுத்த முடிவை அவர்கள்

ஏற்றுக் கொண்டார்களா என்றால் இல்லை. வெளியிலே வந்த பிறகு எதிர்த்து முழக்கமிட்டார்கள். அதாவது பரவாயில்லை. இப்போது இந்தப் பிரச்சினையிலே சர்வ கட்சிக் கூட்டத்தைக் கூட்டினால் என்ன சொல்வார்கள் ? என்ன சொல்லிக் கொண்டிருக்கிறார்கள் ? என்ன அறிக்கை விட்டார்கள். நாங்கள் யாரும் படித்துப் பார்க்கவில்லையா ? அந்த அறிக்கைகள். வீரப்பன் கருணாநிதிக்கு பணம் கொடுக்கின்றான். வீரப்பனிடத்திலிருந்து பணம் வாங்கி கருணாநிதி கட்சி நடத்துகிறார். தேர்தலுக்காக பணம் வாங்கிக் கொண்டிருக்கிறார். வீரப்பனுடைய நிறுவனம்தான் சன் டி.வி. சன் டி.வி.ஐ வீரப்பன் தான் நடத்திக் கொண்டிருக்கிறான் என்கின்ற அளவிற்கு பேசுகிற ஒரு நிலையில் சர்வ கட்சிக் கூட்டத்திலே அவர்களை உட்கார வைத்து...

திரு. பி.ஆர்.சுந்தரம் : அந்த பேருந்து பெயரை மாற்ற வேண்டும் என்ற கூட்டத்தில் எங்களுடைய கட்சியைச் சார்ந்தவர் கலந்து கொண்ட போது அதற்கு ஒப்புதல் கொடுக்க வேண்டும் என்று அவர்கள் வரவில்லை. அவர்கள் மீதிக் கருத்துக்களை ஏற்றுக் கொண்டார்கள். அந்தக் கருத்திலே எங்களுக்கு உடன்பாடில்லை என்று அந்தக் கூட்டத்திலே அவர்கள் கலந்து கொள்ளவில்லை. ஆக, அந்தச் சூழ்நிலை வேறு, இந்தச் சூழ்நிலை வேறு, ஒன்றை வைத்துக் கொண்டு நீங்கள் அடுத்தக் கூட்டத்தை நான் கூட்டவில்லை என்று கூறுவது எந்தவிதத்தில் நியாயம் ?

திரு. துரைமுருகன் : காவிரிப் பிரச்சினையில் வி.பி.சிங் அவர்களைப் பார்க்கப் போவதற்காக, சர்வ கட்சிக் கூட்டம் கூட்டியபோது, உங்கள் கட்சியின் சார்பில் அப்போது எதிர்க்கட்சியாக இருந்த நீங்கள் வருகிறோம் என்று சொல்லி, விமான டிக்கெட்கள் வாங்கப்பட்ட பிறகு,

இறுதி நேரத்திலே வரமாட்டோம் என்று ஓடிவிட்டீர்களே, அதற்கு என்ன பதில் சொல்கிறீர்கள் ?

திரு. பி.ஆர்.சுந்தரம் : காவிரிப் பிரச்சினையிலே, அந்த உடன்படிக்கையிலே உங்களுடைய கட்சியின் நிலை எங்களுக்கு உடன்பாடு இல்லையென்ற காரணத்தினால்தான் அதிலே நாங்கள் வரவில்லை.

முதல்வர் கலைஞர் : பொதுப்பணித் துறை அமைச்சர் சொல்வது அதுவல்ல. எல்லோரும் சேர்ந்து திரு. வி.பி.சிங் அவர்களைப் பார்ப்பதற்கு; அப்போது அவர் பிரதமர். அவரைப் பார்ப்பதற்கு எல்லாக் கட்சிகளும் சேர்ந்து செல்வது என்று முடிவு எடுத்து, அப்போது வருவதாகத் தெரிவித்து விட்டு விமான டிக்கெட் எல்லாம் வாங்கிய பிறகு கடைசியாக ரத்து செய்துவிட்டார்கள். அதைத்தான் அவர் இப்போது சொல்வது. காவிரிப் பிரச்சினைக்கும் இதற்கும் சம்பந்தம் இல்லையென்று சொல்லிவிடலாம். அதுவேறு.

அப்போது இந்த அவையில் எதிர்க்கட்சியிலே நம்முடைய அன்பிற்குரிய எஸ்.ஆர். பாலசுப்பிரமணியம் அவர்கள் இதே பிரச்சினையைப் பற்றிப் பேசும்போது, இங்கே முதலமைச்சராக வீற்றிருந்த அம்மா ஜெயலலிதா அவர்கள் என்ன பேசினார்கள் என்பதை உங்கள் கவனத்திற்குக் கொண்டு வருகின்றேன்.

*''தமிழக அரசும் காவல்துறையும் எந்த அளவிற்கு விவேகத்துடனும் கட்டுப்பாட்டுடனும் நிதானம் தவறாமல் செயல்பட்டன என்பதை எதிர்க்கட்சித் தலைவருக்குப் பாராட்ட மனம் வரவில்லை என்றாலும், தமிழக காவல்துறையை*

*இழிவுபடுத்தும் வண்ணம் அவையில் பேசியது வேதனைக்குரிய தாகும். வீரம் இருக்கும் இடத்தில் விவேகமும் இருக்க வேண்டும். அப்போது தான் வீரத்தின் பலன்கள் நமக்குக் கிடைக்கும். வீரப்பனிடம் **3** உயிர்கள் சிக்கிக் கொண்டிருந்த சூழ்நிலையில், அந்த வீரர்களுக்கு எந்த ஆபத்தும் ஏற்படக்கூடாது என்கிற எண்ணத்தினால்தான் காவல்துறையினரையும், மாவட்ட ஆட்சித்தலைவரையும் தகுந்த எச்சரிக்கையுடன் நடந்துகொள்ள வேண்டும் என்று அறிவுறுத்தினேன்.*

*மாவட்ட ஆட்சித்தலைவர் எனது ஆணையின் பேரில் பேச்சுவார்த்தை நடத்த ஆரம்பித்தார். மூன்றாவது நாளில் வீரப்பன் கூட்டத்தைச் சேர்ந்த பேபி வீரப்பன் மாவட்ட ஆட்சித்தலைவரைச் சந்தித்துப் பேசினான். பேபி வீரப்பன், பின்னர் வீரப்பனின் மனைவியையும் வேறு சிலரையும் பாதுகாப்பாக வைத்துள்ள இடத்திற்குச் சென்று பார்த்துவிட்டு வந்தான். வீரப்பனின் தம்பி அர்ச்சுனன் **12.12.1994** அன்று மருத்துவச் சிகிச்சை செய்துகொள்வதற்கும், வீரப்பனின் அடாவடித்தனமான நிபந்தனைகளைத் தெரிவிப்பதற்கும் வந்தான். சிறையில் அடைக்கப்பட்டிருக்கின்ற அவனது சகோதரன் மாதையனைப் பார்ப்பதற்கும் தனது காயத்திற்கு மருத்துவச் சிகிச்சை செய்து கொள்வதற்கும் அர்ச்சுனனுக்கு அனுமதி வழங்கப்பட்டது.*

*நாம் வெளிப்படுத்துகின்ற எந்தச் செய்தியும் மேற்கொண்டுள்ள பணிக்கு இடையூறாகப் போவது மட்டுமின்றி மூன்று பேர்களின் உயிருக்கும் ஆபத்தை ஏற்படுத்திவிடும் என்கின்ற எச்சரிக்கை உணர்வும்தான் பல செய்திகளை நாங்கள் வெளியிட முடியாமல் போனதற்குக் காரணம்.*

*இன்று காவலர்கள் மேற்கொண்ட பணிகள் வாய்க்கு வந்தபடி ஏசுபவர்கள், வீரப்பனைப் பிடிக்க முடியவில்லையா தனி ஆள்; இரட்டை ஆள் என்று வீரப்பனைக் கூறுகிறவர்கள், இத்தனை பெரிய காவல்படை சென்று வீரப்பனையும் அவன் கூட்டத்தையும் பிடிக்க முடியவில்லையா என்று நிதானமின்றி இந்தப் பிரச்சினையை முழுமையாகப் புரிந்து கொள்ளாமல் பேசுகிறவர்களுக்கு சில உண்மைகளை வெளிப்படுத்த வேண்டுமென்று விரும்புகிறேன்''.*

நான் அல்ல, இதுவெல்லாம் ஜெயலலிதா பேச்சு. இப்போது ஜெயலலிதா பேசிக் கொண்டிருப்பதாகக் கற்பனை செய்து கொள்ளுங்கள்.

*"பிணைக் கைதிகளாக வீரப்பனிடம் சிக்கிக் கொண்ட மூன்று பேர்களையும் எப்படியாவது காப்பாற்றி அழைத்து வருவதற்காக National Security Guard (NSG) Brigadier ஒருவரின் தலைமையிலே* ***180*** *பேர் கொண்ட ஒரு குழு மீட்புப் பணியை மேற்கொள்ள டெல்லியில் இருந்து வந்தது. என்.எஸ்.ஜி. என்பது மத்திய அரசின் அதிரடிப் படையாகும். கிட்டத்தட்ட* ***6,000*** *சதுர கிலோமீட்டர் பரப்பளவில் அமைந்துள்ள அடர்த்தியான வனப் பகுதிகளை நேரில் கண்ட பின்பு, இத்தகைய இடங்களில் மீட்புப் பணியை மேற்கொள்வது மிகவும் கடினமான காரியம் என்று கருத்து தெரிவித்து என்.எஸ்.ஜி. குழுவினர் திரும்பிச் சென்றுவிட்டார்கள்.*

*வீரப்பன் எங்கே ஒளிந்திருக்கிறான் ? கட்டாந்தரையிலோ அல்லது களத்துமேட்டிலோ அல்ல; அடர்த்தியான மரங்கள்*

*வளர்ந்து, ஆறு அடிக்கு அப்பால் ஒரு யானை நின்றால்கூட அது கண்ணுக்குத் தெரியாத ஒரு வனாந்தரப் பகுதியில் ஒளிந்து கொண்டிருக்கிறான். யானை நின்றாலே கண்ணுக்குத் தெரியாத அடர்த்தியான காட்டுப் பகுதியில் ஒரு ஒல்லியான மனிதன் மறைந்து நின்று, கொரில்லா தாக்குதலில் ஈடுபட்டால் அந்தச் சூழ்நிலையை எப்படிச் சமாளிக்க முடியும் ?*

*மனைவி மக்களைப் பிரிந்து, மாதக் கணக்கில் ஒய்வு ஒழிச்சலின்றி தங்களது உயிருக்கு எப்போது ஆபத்து வரும் என்று தெரியாத நிலையில் பாடுபட்டு வரும் காவலர்களின் கடுமையான வாழ்க்கையைப் புரிந்து கொள்ளாமல், சிலர் வக்கணைப் பேசுகிறார்கள். வசைச் சொல் கூறுகிறார்கள். இவற்றையெல்லாம் சிந்தித்துப் பார்க்காமல் காவல்துறையைக் களங்கப்படுத்திப் பேசுவது அறிவுடைமை ஆகாது."*

நான் சொல்லவில்லை, "அறிவுடைமை ஆகாது" என்று ஜெயலலிதா அம்மையார் சொல்கிறார்.

''வக்கணை பேசுகிறார்கள். வசைச் சொல் கூறுகிறார்கள் இவற்றையெல்லாம் சிந்தித்துப் பார்க்காமல், காவல்துறையைக் களங்கப்படுத்திப் பேசுவது அறிவுடைமை ஆகாது'' என்று ஜெயலலிதா கூறுகிறார்.

பிறகு, **1993**–ஆம் ஆண்டு ஏப்ரல் திங்களில் இதே போன்றதொரு கடத்தல் வீரப்பனால் நடத்தப்பட்ட போது, ஒத்திவைப்பு தீர்மானம். அதிலே அந்த அம்மையார் பேசுகிறார்,

*"வீரப்பனைப் பிடிப்பதற்காக இராணுவத்தின் உதவியை நாட வேண்டும், இராணுவத்தினரால் தான் இது முடியும் என்று இங்கே எதிர்க்கட்சித் தலைவர் பேசினார்.*

*அதை இந்த நேரத்தில் நான் ஏற்றுக் கொள்ள முடியாது. இராணுவத்தினர் இங்கே வந்தால் அதனால் வேறு சில பிரச்சினைகள் எழக்கூடும். இராணுவத்தினர் போடுகின்ற ஒரு நிபந்தனை, அந்தப் பகுதியிலே வாழ்கிற மக்களையெல்லாம் காலி செய்ய வேண்டுமென்று சொல்கிறார்கள். அது சாத்தியமான காரியமல்ல. இந்த விஷப் பிரச்சினையில் இறங்க இந்த அரசு விரும்பவில்லை; இராணுவத்தினருக்கு என்று சில திறமைகள் இருக்கலாம். ஆனால், அந்தப் பகுதியைப் பொறுத்தவரை அந்தக் காடுகளைப் பொறுத்தவரை அவர்களுக்கு அது ஒரு* Unknown terrain *இந்தக் காட்டுப் பகுதியிலே உள்ள பாதைகள் எங்கே போகின்றன. எப்படிப் போகின்றன என்பதெல்லாம் இராணுவத்திற்குத் தெரியாது. ஆகவே, இராணுவத்தை அழைக்க இயலாது'' என்றும் ஜெயலலிதா அவர்களே, இதே அவையிலே தான் சுட்டிக் காட்டியிருக்கிறார்கள்.*

தீவிரவாதிகளை அனுப்பி இதுபோன்ற கடத்தல் சம்பவங்களில் கடத்தப்பட்டவர்களை விடுவிக்கின்ற முயற்சி ஒன்றும் புதிது அல்ல. இதற்குப் பல முன்மாதிரிகள் இருக்கின்றன.

சமீபத்திலே காட்மாண்டிலேயிருந்து 181 பயணிகளோடு புறப்பட்ட இந்தியன் ஏர்லைன்ஸ் விமானம் 5 தீவிரவாதிகளால் கடத்தப்பட்டது. அதில் 41 பேர் தமிழர்கள் இருந்தார்கள். மொத்த பயணிகளில் 27 பேர் விடுவிக்கப்பட்டார்கள். 4 பேர் கொல்லப்பட்டார்கள். கடத்தப்பட்ட

விமானம் இறுதியாக ஆப்கானிஸ்தானத்தில் இருந்த் காந்தகார் விமான நிலையத்தில் தரையிறங்கியது. விமான கடத்தல்காரர்களோடு ஐக்கிய நாடுகளின் தூதுக் குழுவே பேச்சுவார்த்தை நடத்தியது. அப்பொழுது, காஷ்மீரில் சிறை வைக்கப்பட்டிருந்த பாகிஸ்தானுடைய மதத் தலைவர் மவுல்லி மசூத் அசாரையும், வேறு சில தீவிரவாதிகளையும் விடுதலை செய்யாத வரையில் பயணிகளை விடுவிக்க முடியாது என்று கடத்தல்காரர்கள் திட்டவட்டமாகக் கூறி விட்டனர். பயணிகளை விடுவிக்குமாறு தூதுக்குழு விடுத்த வேண்டுகோளைக் கடத்தல்காரர்கள் ஏற்க மறுத்துவிட்டார்கள். தங்கள் கோரிக்கை நிறைவேற்றப்படாத நிலையில் பயணிகளை விடுவிக்க முடியாது என்று கூறிவிட்டதால் பேச்சு வார்த்தை தோல்வியடைந்தது, தூதுக்குழு திரும்பிவிட்டது. விமானக் கடத்தலுக்குக் காஷ்மீர் தீவிரவாத அமைப்பான இஸ்லாமிய மீட்பு முன்னணி பொறுப்பேற்றுக்கொண்டது. மவுலானா மசூத் அன்சார் உள்ளிட்ட தீவிரவாதிகளை விடுவிக்கக் கூடாது என்று இராணுவத் துறை நிபுணர்களெல்லாம் வற்புறுத்தியும்கூட கடத்தல்காரர்களோடு பேச்சுவார்த்தை நடத்த இந்தியத் தூதுக்குழு ஒன்று சென்று பேச்சுவார்த்தை நடத்தியது. இறுதியாக 8 நாட்களுக்குப் பிறகு உடன்பாடு ஏற்பட்டு, சிறைகளிலே அடைக்கப்பட்டிருந்த 3 தீவிரவாதிகள் விடுதலை செய்யப்பட்ட பிறகுதான் பயணிகள் எல்லாம் விடுவிக்கப்பட்டார்கள் என்பது எல்லோருக்கும் தெரிந்த ஒரு செய்தி.

அதுமாத்திரம் அல்ல. அதற்கு முன்பேகூட, 1989இல் வி.பி.சிங் அவர்கள் பிரதமராக இருந்த அந்தக் காலத்தில் மத்திய உள்துறை அமைச்சராகயிருந்த முப்தி முகம்மது சையத் அவர்களுடைய மகள் ரூபையா சையத் அவர்களைக் காஷ்மீர் தீவிரவாதிகள் கடத்திச் சென்று விட்டார்கள். அவரை விடுவிக்க டிசம்பர் 13, 89 அன்று ஜம்மு காஷ்மீர்

விடுதலை முன்னணி – **J.K.L.P.** என்ற தீவிரவாத இயக்கத்தைச் சேர்ந்த 5 தீவிரவாதிகள் விடுவிக்கப்பட்டிருக் கின்றார்கள்.

மீண்டும் மார்ச் 91இல் காஷ்மீர் அரசியல் தலைவர் சைபுதீன் சோஸ் அவர்களின் மகள் நாஹீது என்பவர் தீவிரவாதிகளால் கடத்திச் செல்லப்பட்டபோது அவரை விடுவிக்க காஷ்மீர் தீவிரவாத இயக்கத்தைச் சேர்ந்த 3 தீவிரவாதிகள் விடுவிக்கப்பட்டார்கள்.

91இல் இந்தியன் ஆயில் கம்பெனியின் மூத்த அதிகாரி துரைசாமி என்பவர் காஷ்மீர் தீவிரவாதிகளால் கடத்திச் செல்லப்பட்டபொழுது அவரை விடுவிக்க ஆகஸ்ட் 20 அன்று 11 காஷ்மீர் தீவிரவாதிகள் விடுதலை செய்யப்பட்டார்கள்.

இன்னொன்றை உங்களுக்குச் சொல்ல விரும்புகின்றேன். பழ. நெடுமாறனையும், வேறு சில தீவிரவாதிகள் என்று உங்களால் சொல்லப்படுகின்றவர்களையும் – குற்றம் சாட்டப்பட்டவர்களையும் அனுப்பியது தவறு என்று கூறப்பட்டது. சில மாதங்களுக்கு முன்பு ஆந்திராவில் நாலைந்து ஐ.ஏ.எஸ். அதிகாரிகளை நக்ஸலைட்டுகள் கடத்திக்கொண்டு போய்விட்டார்கள். அவர்களிடம் பேசி அதிகாரிகளை மீட்க யாரை அனுப்புவது என்ற கேள்வி எழுந்தது. நக்சலைட்டுகளால் கடத்தப்பட்ட ஐ.ஏ.எஸ். அதிகாரிகளை விடுவிக்க நக்சலைட் இயக்கத்திற்காக வாதாடிக்கொண்டு இருக்கின்ற வக்கீலையே அனுப்பலாம் என்று ஒரு கருத்து வந்தது. இந்தக் கருத்தை ஆந்திர ஐ.பி.எஸ். அதிகாரிகள் கடுமையாக எதிர்த்தார்கள். ஆனால் ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் சங்கம் கூடி, எங்களைச் சேர்ந்த நாலைந்து அதிகாரிகள் நக்சலைட்டுகளால் கடத்தப்பட்டு இருக்கும்பொழுது அது பற்றி

விவாதமா ? எனவே, அவர்களை மீட்க, வழக்கறிஞர் கண்ணபிரானைக் கட்டாயம் காட்டுக்கு அனுப்ப வேண்டுமென்று தீர்மானமே போட்டார்கள். பிறகு ஆந்திர அரசு, வழக்கறிஞர் கண்ணபிரானை அனுப்பி அந்த நான்கைந்து ஐ.ஏ.எஸ். அதிகாரிகளையும் மீட்டு வந்தது. ஆகவே முள்ளை முள்ளால் எடுப்பது என்பார்களே, முள்ளிலே விழுந்த சேலையை, துணியை எடுப்பதைப் போல, ஆரம்பத்தில் செய்தோம். பிறகு முள்ளை முள்ளால் எடுப்பதைப் போல, அந்தக் காரியத்தையும் செய்யவேண்டிய அவசியத்திற்கு நாம் வந்திருக்கின்றோம் என்பதை இங்கே எடுத்துக்காட்ட விரும்புகின்றேன்.

நெடுமாறன் அவர்களைப் பற்றி இங்கே பேசப்பட்டது. நெடுமாறன் என்னமோ பிரிவினைவாதி, நெடுமாறன் தேசவிரோதி என்றெல்லாம்கூட நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் அன்றைக்குப் பேசும்போது குறிப்பிட்டார்கள். நெடுமாறன் நடத்துகின்ற தமிழர் தேசியக் கட்சி, தடை செய்யப்பட்ட இயக்கம் அல்ல. அல்லது அவரும் அவரோடு சென்றிருக்கின்ற இரண்டு பேர், பேராசிரியர் கல்யாணி என்பவரும், பாண்டிச்சேரியைச் சேர்ந்த, அவருடைய இயக்கத்தைச் சேர்ந்த சுகுமாரன் என்பவரும் மக்கள் உரிமை மீட்பு கூட்டமைப்பு என்ற ஒன்றை நடத்துகிறார்கள். அதன் சார்பாகத்தான் போய் இருக்கிறார்கள். அவர் பிரபாகரனுக்கு வேண்டியவர் அல்லவா, பிரபாகரனை ஆதரிப்பவர் அல்லவா, ராஜீவ் காந்தி கொலை வழக்கிலே கூட அந்தக் கொலையாளிகளுக்காகக் கருணை காட்டக்கூடியவர் அல்லவா என்றெல்லாம் கூடக் கேட்கலாம். நான் அதை மறுத்தோ அல்லது ஆதரித்தோ, அவர் அப்படிச் செய்தது சரிதான் என்றோ பேசவரவில்லை. ஆனால் அதற்கு இன்னொரு எடுத்துக்காட்டு இருக்கிறது, அதை மறந்து விட்டீர்களே ?. நெடுமாறன் என்ன செய்தாரோ, அதே காரியத்தை வீரமணி செய்து கொண்டிருக்கவில்லையா ? என்ன பேசினார் அவர் ?

1999இல் ஒரு ஆண்டு கூட முடியவில்லை. ஜனவரி 24–ஆம் நாள் சென்னையில் நடைபெற்ற 'எம்.ஜி.ஆரும், ஈழத் தமிழர்களும்' என்ற நூல் வெளியீட்டு விழா. அதில் வீரமணி, ''விடுதலைப் புலிகளின் மீதுள்ள தடையை நீக்குக என்று கோருவது, அரசியல் சட்டத்திற்குப் புறம்பானதோ, விரோதமானதோ அல்ல.'' அரசியல் சட்டம் பற்றி லத்தீப் அவர்களுக்கு என்னைவிட நன்றாகத் தெரியும். இங்கே பேசினார். ஆனால் வீரமணி சொல்லியிருக்கிறார். ''விடுதலைப் புலிகளின் மீதுள்ள தடையை நீக்குக என்று கோருவது அரசியல் சட்டத்திற்குப் புறம்பானதோ விரோதமானதோ அல்ல'' என்று!

மேலும் வீரமணி ''என்னைப் பொறுத்தவரையில், பிரபாகரன் தமிழ்ச் சமுதாயத் தலைவர் மட்டுமல்ல; என்னுடைய இளைய சகோதரனாகும்.'' என்று பேசியுள்ளார். யாருக்கு ? வீரமணிக்கு. ராஜீவ் காந்தியைக் கொன்றதாகக் குற்றம் சாட்டப்பட்டுள்ள பிரபாகரன், வீரமணிக்கு இளைய சகோதரன். மறந்துவிடாதீர்கள். நெடுமாறனோ அல்லது வீரமணியோ இப்படிப் பேசுவதோ கருதுவதோ சரியென்று ஏற்றுக் கொள்ளக்கூடிய ஆள் அல்ல நான் என்பது உங்களுக்கெல்லாம் மிக நன்றாகத் தெரியும். ஆனால் அதே வீரமணி அவர்கள், அவருடைய கட்சியின் சார்பில் 1999–ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 13–ஆம் நாள் மயிலாடுதுறையில் நடைபெற்ற – சில மாதங்களுக்கு முன்பு நடைபெற்ற திராவிடர் கழகத்தினுடைய மத்திய செயற்குழுக் கூட்டத்தில் என்ன தீர்மானம் நிறைவேற்றினார் தெரியுமா ? ''ராஜீவ் காந்தி கொலை வழக்கில் தண்டிக்கப்பட்ட நான்கு கைதிகளுக்கான தண்டனையைக் குறைக்க வேண்டுமென்று'' குடியரசுத் தலைவர் திரு.கே.ஆர்.நாராயணன் அவர்களுக்கு வேண்டுகோள் விடுத்து தீர்மானம் நிறைவேற்றினார்கள். அந்தத் தீர்மானத்தினுடைய முழு வாசகத்தையும் படிக்கிறேன்.

*"அண்மையில், ராஜீவ் காந்தி கொலை வழக்கில், தடா சட்டம் அவ்வழக்கிற்குப் பொருந்தாது என்று தீர்ப்புக் கூறிய உச்ச நீதிமன்றம், அதே சட்டத்தின் அடிப்படையில் சட்ட வலிமை பெற்ற சாட்சியங்களை ஏற்று பலருக்குத் தண்டனை அளித்தது நியாயப்படி ஏற்கத்தக்கதல்ல. அதில் தூக்குத் தண்டனை பெற்றவர்களான நளினி, திருவாளர்கள் முருகன், பேரறிவாளன், சாந்தன் ஆகியோருக்குக் குறைந்தபட்சம் ஆயுள் தண்டனையாகக் குறைத்து அவர்களுக்கு கருணை காட்ட வேண்டுமென்று குடியரசுத் தலைவரை இக்குழு வேண்டிக் கேட்டுக் கொள்கிறது.''*

அது மாத்திரமல்ல, **27.5.1999** 'விடுதலை' பத்திரிகையில் வீரமணி எழுதிய தலையங்கத்தில், –

*"தமிழ்நாட்டு அரசியலிலும் சரி, இந்திய அரசியலிலும் சரி, எப்போதாவது, யார் மீதாவது பழிபோட்டு மற்றவர்களைப் பற்றித் தவறான பிரச்சாரம் செய்வதற்கு 'ரெடிமேடு' பலிகடாவாக ஆக்கிட என்றும் பலரால், குறிப்பாக சில அரசியல் கட்சிகளாலும், உளவுத்துறைகளில் மேலோங்கியுள்ள பார்ப்பன ஆதிக்கவாதிகளாலும் பயன்படுத்தப்படும் அமைப்பு ஈழத்தில் தன்னுரிமை, மனித உரிமைக்குப் போராடிக்கொண்டு இருக்கும் விடுதலைப் புலிகள் அமைப்பேயாகும். தமிழ்நாட்டிலோ, தென்னாப்பிரிக்காவிலோ அல்லது உலகெங்கும் உள்ள நாடுகளில் வாழும் தமிழர்களோ, ஈழத் தமிழர்களின் உரிமைப் போரை, விடுதலைப் போராட்டத்தை ஆதரிப்பது என்ன மாபெரும் சமூகக் குற்றமா ?''* என்று கேட்ட வீரமணி அவர்கள் யாரோடு இருக்கிறார்; எங்கே இருக்கிறார்; எங்கே ராஜகுரு என்ற

நிலையிலே இன்றைக்கு அவர் இருக்கிறார் என்பதெல்லாம் எல்லோருக்கும் தெரியும். அவருக்கு டெல்லியிலே, அங்கு நடைபெற்ற ஒரு விழாவிலே, டெல்லியினுடைய முதலமைச்சர் ஷீலா தீட்சித் அவர்கள் 5 இலட்சம் ரூபாய் அவருடைய நிறுவனத்திற்கு நிதி கூட, இப்போதுதான் ஒரு மாதத்திற்கு முன்புதான் கொடுத்திருக்கிறார். இங்கேகூட, பெரியார் விழா ஒரு கமிட்டி போட்டு, அவர் அமைப்பாளராக இருந்து. திரு. குலாம் நபி ஆசாத் அவர்கள் பங்கேற்று, நம்முடைய மக்கள் தலைவர் மூப்பனார் அவர்கள் குழுவினுடைய தலைவராக இருந்து நடத்தப் பட்டிருக்கிறது. நான் அதைத் தவறு என்று சொல்லவில்லை. அது சரி என்கிறபோது, நெடுமாறன் சென்றதும் சரிதான் என்பதற்காகத்தான் இதைச் சொல்கிறேனே யல்லாமல், அதைத் தவறு என்று நான் சொல்லவில்லை என்று குறிப்பிட்டு, இந்த அளவில் கர்நாடக மக்களும், தமிழக மக்களும் சகோதரர்களாக வாழ்வதற்கேற்ற சூழ்நிலையை உருவாக்க இந்தத் தீர்மானம் பயன்பட்டும் என்றுகூறி, இந்த அளவில் என் உரையை நிறைவு செய்கிறேன்.

★ ★ ★

